www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஒக்.04—10,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 277

## 1200 கோடியும் அம்பலமாகும் உண்மையும்

## வளர்ந்து வரும் பேரினவாத பூதம்



## ஜாலியான டெண்டுல்கர்

## மீனாவுக்கு வலை வீசும் அரசியல் வாதி

www.padippakam.com

# முரசம்

## செப்பனிடும் பாதை

***அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.***

'அரசின் தீர்வுப்பொதியை
சகல இனமக்களும்
ஏற்றுக்கொண்டுவிட்டனர்.
விடுதலைப் புலிகள் மட்டுமே
ஏற்க மறுக்கின்றனர்.'
யாரும் அறியாத
இந்த தகவல்களை
ஜனாதிபதி அவர்கள்
அமெரிக்கத் தொலைக்காட்சிக்கு
பேட்டியாக கூறியுள்ளார்!
அப்படியானால் இன்னமும்
சிங்கள மக்களிடம்
யோசனை கேட்டுவருவது
எந்தப் பொதிக்கு?
ஐ.தே.கட்சியிடம்
அடிக்கடி யோசனை கோருவது
எந்தப் பொதிக்காக?
"புலிகளுடன் பேசுவதானால்
அவர்களுக்குக் கூறுவதற்கு
உருப்படியான திட்டம் தேவை!"
என்று நீதியமைச்சர்
சமீபத்தில் கூறியிருந்தார்!
ஐ.தே.கட்சி ஒத்துழைத்தால்
ஒருமுகமான தீர்வோடு
புலிகளுடன் பேசலாம்
என்று கூறியிருந்தார்!
சகல இனமக்களும்
பொதியை
ஏற்றுக்கொண்டுள்ளபோது
ஐ.தே.கட்சியின்
உதவி ஏன் தேவை?
நாட்டு மக்களால்
ஏற்றுக் கொள்ளப்பட்ட
பொதியுடன் சென்று
புலிகளுடன் பேசலாமே!
அல்லாவிட்டால்
பொதியை
நாடு ஏற்றுக்கொண்ட
விடயம்- நம்மைப்போல்
நீதியமைச்சருக்கும்
தெரியவில்லையோ?
தமிழ்க் கட்சிகள்கூட
இதுவரை பொதியை
முற்றாக ஏற்றதாக
நாம் அறியவில்லை!
அக் கட்சிகள் சமர்ப்பித்த
திருத்த யோசனைகள்
குப்பைக் கூடைகளுக்கு
தீனியாகிவிட்டன!
சிங்களப் பேரினவாதிகளும்
பொதியை
நிராகரித்துள்ளனர்!
அரைகுறைத் தீர்வைக்கூட
தமிழ் பேசும் மக்களுக்கு
வழங்குவது அவர்களுக்கு
சம்மதமில்லை!
அதனை உணர்ந்துதான்
சர்வசன வாக்கெடுப்பையே
அரசாங்கம் கைவிட்டது!
எனவே, சிங்களப்
பேரினவாதிகளாலும்
தமிழ் பேசும் தரப்பாலும்
ஏற்கப்படாத பொதியை
ஏகமனதான பொதி
என்று எப்படிக் கூறுவது?
பேரினவாதிகள்
பொதியை நிராகரிப்பதில்
நியாயம் கிடையாது!
ஆனால், அந்த நிராகரிப்பை
பூச்சாண்டியாகக்காட்டி
எடை குறைந்த பொதியை
தமிழ் பேசும் தரப்பின்
தலையில் திணிக்க
முயற்சிப்பதும் நியாயமில்லை!
தமிழ் பேசும் தரப்பு
ஏற்றுக்கொள்ளாத பொதியை,
ஏற்கப்பட்ட பொதியாக
ஜனாதிபதி கூறியிருப்பதற்கு
காரணம் இல்லாமல் இல்லை!
தமிழ்க் கட்சிகள்
மறுத்துப் பேசமாட்டா
என்பது அவருக்குத் தெரியும்!
இராணுவத்தீர்வின் பின்னர்
அரைகுறைப் பொதியை
திணிப்பதே நோக்கம்
என்று கூறிவந்தோம்!
தமிழ் பேசும் தரப்பு
பொதியை ஏற்றுள்ளதாக
வெளியுலகுக்கு
கூறப்பட்டிருப்பதும்
அதற்கான ஆயத்தம்தான்!
அரசாங்கம்
மிகவும் சாமர்த்தியமாக
இராணுவத்தீர்வுக்கான
பாதையைச் செப்பனிடுகிறது!
அமைதிகாத்து, பணிவுகாட்டி,
ஒத்துழைத்து வருகின்றன-
மாண்புமிகு தமிழ்க்கட்சிகள்!

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

## அம்பாளுக்குகந்த ஐப்பசி!

சைவப்பெருமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் விரத நாட்கள் ஐப்பசி மாதத்தில்தான் வருகின்றன. இல்லத்தரசிகளுக்கு இன்பமூட்டும் காலம் இதுவாகும். சிறுவர் சிறுமியரும் குதூகலமாகக் கொண்டாடும் வேளையும் இக்காலம்தான்.

ஐப்பசி மாத அமாவாசையைத் தொடர்ந்து வரும் ஒன்பது நாட்களும் அம்பிகைக்குரிய நாட்களாகும். மன உறுதியையும் திடமான சிந்தனையையும் எடுத்த காரியங்கள் எதிலும் வெற்றியைப் பரிபூரணமாக வழங்கவல்ல தெய்வமாக துர்கையையும், செல்வம், செல்வாக்கு, செழிப்பான வாழ்க்கை வசதிகளை அளிக்கும் கடவுளாக இலக்குமியையும், கல்வி, கலை, ஞானம் ஆகிய உயர்ச்சிகளைத் தரும் தேவதையாக சரஸ்வதி தேவியையும் இந்த ஒன்பது நாட்களிலும் முறைப்படி பூஜித்து வருவோருக்கு வாழ்க்கையில் என்றுமே துன்பமில்லை.

அன்னை பராசக்தியையே வெவ்வேறு செயல்களுக்காக- வெவ்வேறு உருவங்களாக நவராத்திரி காலங்களில் ஆவாகனம் செய்து வழிபடுவது பண்டு தொட்டு இன்றுவரை தொடர்ந்து வரும் பண்பாகும். இந்த ஒன்பது நாட்களிலும் இல்லங்களில் தாயமை கொலுவிருக்கும்; மங்கல விளக்கெரிந்து மாசகன்று மகிழ்ச்சி பிரவகிக்கும்.

மாலையானதும் நங்கையர் அம்பிகைக்கான பூசைகளை நடத்துவர். வகைவகையான இன்சுவைப் பண்டங்கள் அன்னைக்குப் படைக்கப்படும். அயலிலுள்ள இளமங்கையரும் சுமங்கலிகளும் சூழ்ந்திருப்பார்கள். இன்னிசையும் ஆடற்கலையும் செவிக்கும் கண்களுக்கும் நல்விருந்தாக அமையும்.

நவராத்திரிப் பொழுதுகள் குதூகலமாக நிறைவு பெற்று முடிந்ததும் தீமைகளைத் தீய்த்தொழிக்கும் தூய தீபாவளித் திருநாளை எதிர்பார்ப்போமாக.

ஏ. மங்களச்செல்வி, திருமலை.

## ஆன்மீகம்



### நீதி வழங்கும்போது அநீதி விளைவிக்காதீர்கள்!

இன்று எமது சமுதாயத்தில் குடும்பங்களுக்கு மத்தியிலும் வேறு பிரிவினர்களுக்கு மத்தியிலும் குழப்பங்கள், சண்டைகள், விபரீதங்கள் ஏற்படும்போது நீதி நியாயங்கள் கூறுபவர்கள் என்று சொல்லிக்கொண்டு வரும் நியாயவாதிகளும் அவர்களின் கையாட்களும் தங்களுடைய சுய இலாபத்திற்காக, பேரம் பேசுபவர்களாகவும், பக்கச் சார்புடன் அநீதி வழங்குபவர்களாகவுமே இருக்கின்றார்கள். நீதி வழங்குவதையும், நியாயம் செய்வதைப் பற்றியும் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் குறிப்பிடும்போது:

"எவர் நன்மையான நீதமான செயல்கள் செய்கின்றனரோ, அவை அவருக்கே நன்மை பயக்கும்; எவர் தீமையான அநீதமான செயல்கள் செய்கின்றனரோ அவை அவருக்கே தீமைபயக்கும்."

(அல் குர் ஆன் 41:46)

"எவர்கள் அநீதி இழைக்கிறார்களோ அவர்கள் பக்கம் சார்ந்திடாதீர்கள். (அப்படி இருப்பீர்களாயின்) நரக நெருப்பு உங்களைப் பற்றிக்கொள்ளும். அநீதி இழைப்போர்களுக்கும் அவர்களுடன் சார்ந்திருப்போர்களுக்கும் இறைவனின் உதவி ஒருபோதும் கிடைக்கவே மாட்டாது."

(அல் குர் ஆன் 11:13)

"ஒருவன் அநியாயக்காரன் என்று தெரிந்துகொண்டே அவனுக்கு உதவி செய்வதற்காக அவனுடன் சென்றால் அவன் இஸ்லாத்தை விட்டு வெளியேறி விட்டான்." (நபிமொழி)

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06

## கவிதைப் போட்டி இல.274

### பரிசுக்குரிய கவிதை

### உண(ர்)வுக்குத் தடை!

**என்ன பார்க்கிறாய்...?
தாமரைக் கிழங்குகள்
தரையில் உள்ளவரை
தவிக்கவிடமாட்டேனடா!**

அ. கிருஷ்ணவேணி- மஹாஜனக் கல்லூரி, மட்டக்களப்பு.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### சோகம்

..ங்கள்
..லயன்'கள் எரிவது
அறியாது சிரிப்பது
அனுதாபத்திற்குரியது!

எஸ். பிரபா-பதுளை

### 'அகதி'

..வாரண வெட்டு
..ங்கிவிட்ட சேதி
நிஜ மென்று நம்பி
அக மகிழ்ந்து நிற்கும்-
அகதி குழந்தைகள் நாம்!

மங்களம் மனோரஞ்சன், கல்முனை-02.

### சுதந்திர வாழ்க்கை?

சிரிப்பதற்கு
அர்த்தமில்லை!
துன்பங்கள்;
விளப்பம் இல்லை!
நடுத்தெருவில்
வாழ்க்கை!
இதுதான்
சுதந்திரம்!

திருமதி நேசமணி சிவபாதம்- கொழும்பு.06.

### உயிருடன்

சோதிடம் கேட்டாளோ,
சொப்பனம் கண்டாளோ?
பிள்ளையின் அப்பா
உயிருடன் இருப்பதாக!

வே. தருமலிங்கம்-மடு.

### உனைக் காப்பேன்!

"முதிராத இளமையிலே
முதிய ஒரு தாயாகி
சேயான உனைக் காப்பேன்
சிறியடா என் தம்பி!"

கே. லலிதா- தர்கா டவுன்.

### துணிந்திடுவோம்

அன்னைபோல் உன்னை
அரவணைத்துக் காத்திடுவேன்!
கண்ணே கலங்காதே!
கவலைகளை எதிர்த்து நிற்போம்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### விழிப்பு

பாலுக்குச் சீனியில்லை!
பாலகனுக்குத் தீனியில்லை!
அன்புக்குப் பஞ்சமில்லை;
ஆகவே துன்பமில்லை!

செ. ஞானராசா- சின்னப்பண்டிவிரிச்சான்.

## கவிதைப் போட்டி இல.277



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.10.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.277
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### யார் சொன்னது?

துன்பம் வரும் வேளையில்
சிரிக்கச் சொன்னான் வள்ளுவன்!
'செல்' வரும் வேளையில்
சிரிக்கச் சொன்னவன் வஞ்சகன்!

உன்னஸ்கிரிய-ஏ.பி. சதாசிவம்.

### வெள்ளை உள்ளம்

தீர்வுப் பொதியல்ல;
அன்புப் பொதி!
சுகமான சுமையாலே
சுத்தமான புன்னகையோ?

சு.சுமங்கலி-வவுனியா.

### யாரிடம்?

உன்னைக் கொடுத்தாய்
என்னிடம்!
என்னைக் கொடுத்தேன்
உன்னிடம்!
நம்மைக் கொடுப்பது யாரிடம்?

செல்லையா வல்லிபுரம்-கொழும்பு-13.

## வாசக(ர்)சாலை



*அன்பின் முரசே!*

பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. இருந்தும் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' என்னை மிகவும் ஆழமாகக் கவர்ந்து விட்டது.

மு. சிவாஜினி, ஊறுகாமம், கரடியனாறு.

*அன்பின் முரசே,*

வாரந்தோறும் முரசில் அற்புதன் எழுதும், 'அரசியல் தொடர்' மிகவும் அற்புதம். காலங்கள் கழிந்தாலும் எமது எண்ணங்களைத் தட்டி எழுப்பும் அற்புதனுக்கு என் வாழ்த்துக்கள்!

எம்.எஸ். ஜோதிவேல், நோட்டன் பிரிட்ஜ்.

தினம்தோறும் வருவாயா என என் கண்கள் எதிர்பார்க்கும் முரசே! உன்னில் அனைத்து அம்சங்களும் சூப்பர். 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' எழுதும் புவனாவுக்கு என் பாராட்டுக்கள். மனித எமன் 'இடி அமீனின்' கதைக்குப் பாராட்டு:

வேலு சசிகலா, அட்டன்.

### நாலு குணம்

முரசே! 'இலக்கிய நயம்' இடைக்கிடையே வீர நயமாகவும் அமைகிறது. 'நாலு குணங்கள் பெண்களுக்குத் தேவை. ஞானம், நல்லறம், வீரம், அன்பு' என்று காலத்திற்கேற்ற நயம் தந்த ரசிகனைப் பாராட்டுகிறோம்.

செல்விகள் இ. சாந்தினி, எஸ்.யோகராணி, வவுனியா.

ரூபராணியின் கதைகளைப் பெரிதும் விரும்பிப் படிக்கிறோம். அந்தக் கதைகள் உண்மைகளைத் தொடுகின்றன. மணிக்கதைகளானாலும் மனதில் சஞ்சரிக்க வைத்து விடுகிறார். இந்தக் கதைகளெல்லாம் நூலாக வெளிவந்துவிட்ட செய்தி சந்தோஷத்தைத் தருகிறது!

சகுந்தலா ராமமூர்த்தி, கண்டி.

*அன்பின் முரசே!*

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'முள் நிலவும்', 'மேற்கே ஒரு குற்றமு'ம் மர்மத்தைத் தந்து வியக்க வைக்கின்றன.

சி. ஜெகதீஸ்வரன், சாம்பல்தீவு.

சதாம் ஹுஸைனின் வரலாறு, 'முள் நிலவு', சினிமா பகுதி, 'இடி அமீ'னின் அட்டகாசம், டயானா பற்றிய தொடர், 'சிறுவர் பகுதி', 'தகவல் பெட்டி', அற்புதனின் 'அரசியல் தொடர்', 'இலக்கிய நயம்' மற்றும் ஏனைய அனைத்து அம்சங்களும் வெகு பிரமாதம். முரசின் சேவை தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

எம்.ஐ. மொஹமட்சாபி, குருந்துகஹ எல- அக்குறணை.

### ஏன் திறக்கவில்லை?

செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக முரசு தெளிவான விளக்கம் தந்துவிட்டது. மனித உரிமைக்காவலர்களாக வேஷம் போடுகிறவர்கள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? ஜனநாயகம் பேசும் உதடுகள் ஏன் திறக்க மறுக்கின்றன?

வி. மாசிலாமணி, அச்சுவேலி.

### இரத்தம் சிந்துகிறது

*அன்பின் முரசுக்கு,*

நாம் எதிர்பார்த்தது போன்றே செம்மணிப் புதைகுழி விவகாரம் முடிந்துள்ளது. "மனித உரிமைக்கு பங்கம் நேர்ந்தால் ஆட்சியை மாற்றிடுவோம்!" என்று கூறிக்கொண்டு ஆட்சியில் அமர்ந்தவர் அம்மணியார். இன்று செம்மணியில் மனித உரிமை இரத்தம் சிந்திக் கிடக்கிறது.

ஜெ. கேசவன், உரும்பிராய்.

### சிரிப்போடு

காதிலை பூ கந்தசாமியாரின் 'கிளின்ரன், கிலாரி' உரையாடல் சூப்பர்! சிரிப்போடு சிந்தனை தரும் கந்தசாமி யாருக்கு கைகுலுக்கு!

ஜெ. நியாஸ், கல்முனை.

### நாளை?

மட்டக்களப்பு- வந்தாறுமூலை படுகொலைகளை அரசியல் தொடரில் பதிவு செய்த அற்புதனுக்கு நன்றி! உண்மையிலேயே இவ்வாறான பலதிசைத் தகவல்களுடன் தொடரைத் தருவது வியப்பைத் தருகிறது. நேற்று வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான். இன்று செம்மணி...நாளை...?!

கா. நவரத்தினராசா, மட்டக்களப்பு.

### வெளுத்து வாங்குகிறார்கள்

ஆளும் கட்சி செய்யும் தவறுகளை சுட்டிக்காட்ட திராணி இல்லாத தமிழ்க் கட்சிகள், எதிர்க்கட்சியை மட்டும் வெளுத்து வாங்குகின்றன. என்னதான் தலைகீழாக நின்றாலும் இக்கட்சிகளுக்கு கிடைத்துவரும் மரியாதை யாவரும் நன்கு அறிந்ததே.

சி. தர்மசீலன், கொழும்பு-10.

### கொல்யாணம்

'நாலுபக்கம் கடன், நடுவில் ஒரு எரியும் தீவு, அதன் பெயர் இலங்கை' என்று சிந்தியா கூறிய பதில் கச்சிதம். கடன் வாங்கிக் கல்யாணம் பண்ணுவார்கள். அரசாங்கம் கடன் வாங்கி கொல்யாணம் பண்ணுகிறது. அதாவது போர் நடத்துகிறது.

செ. ரதி, மட்டக்களப்பு.

### மௌனம்

மலையகத்தில் இன ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை என இரண்டு ஒடுக்குமுறைகளை மலையகத் தமிழர்கள் எதிர்நோக்குவதாக இராஜதந்திரி கூறியிருந்தார். மலையக அரசியல் கட்சிகள் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடத் தயங்குவதையும் இடித்துரைத்திருந்தார். இரத்தினபுரியில் நடந்த கொடுமைகளும், மலையக அரசியல் கட்சிகளின் மௌனமும் இராஜதந்திரியார் கூறியதை உடனே மெய்ப்பித்தன.

சா. செல்வராஜு, ஹட்டன்.

### வாக்குப் போடாதவர்கள்

வாக்குப்போடாத மக்கள் மக்களே அல்ல. அதுதான் பாராளுமன்ற கட்சிகளாக மாறிவிட்ட தமிழ்க் கட்சிகளின் முடிவு. அதன் நிமித்தமே வன்னித் தமிழர்களை மறந்துவிட்டனர். போதாக்குறைக்கு ஒரு தமிழ்க் கட்சித் தலைவர் 'வன்னியில் பட்டினிச் சாவு கிடையாது' என்று கூறியும் இருந்தார்.

மு. சிவப்பிரகாசம், மல்லாவி.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
பக்ஸ்- 074-513266**



படிப்பகம்

www.padippakam.com

# 'தமிழர்கள் இந்த நாட்டுக்கு உரியவர்களல்ல'

# ஜனாதிபதி கூறியதாக குமார் புகார்!

"இந்தநாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லாத சிறுபான்மையினர், தங்களுக்காகத் தனிநாடு கோருகின்றனர்! என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்." இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா தென்னாபிரிக்காவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளது மாநாட்டில் பங்கு கொள்ளச் சென்றிருந்தார். அச்சமயம் அங்குள்ள, தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே 'இந்த நாட்டுக்குச் சொந்தமல்லாத சிறுபான்மையினர்' என்று கூறியுள்ளார்.

"ஜனாதிபதியின் பேட்டியில் குறிப்பிட்ட பகுதி இலங்கை ரூபவாஹினியில் செப்டம்பர் 10ம் திகதி ஆங்கிலச் செய்தி அறிக்கையிலு ஒளிபரப்பாகியுள்ளது.

அந்த ஒளிப்பதிவு நாடாவும் தன்னிடம் பத்திரமாக இருப்பதாகக் கூறியுள்ள குமார் பொன்னம்பலம், ஜனாதிபதியின் பேட்டியைப் கண்டித்து கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றில் பதில் கொடுத்துள்ளார்.

## ரூபவாஹினியிலும் ஜனாதிபதி உரை வெளியானது

ஜனாதிபதியின் உரை தொடர்பாக கருத்தறிய தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலரிடம் குறிப்பிட்ட பத்திரிகை கருத்துக் கேட்டபோது அவர்கள் நழுவிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக குமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள கண்டனத்தில்: "எத்தகைய ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் இத்தகைய கருத்தைக் கூறியுள்ளார்?" என்று வினா எழுப்பியுள்ளார்.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் சிங்களவர்களா? அல்லது தமிழர்களா? என்று ஆராயப்புகுவது கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? என்று கேட்பதற்கு ஒப்பாகும்.

ஜனாதிபதி, இந்த நாட்டின் தலைவி என்ற நிலையில் தன் கருத்தை எங்கோ உள்ள ஓர் அந்நிய நாட்டில் வெளியிடுவதை விட சொந்த நாட்டில் வெளியிடுவதே பொருத்தமாக இருக்கும்" என்றும் குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

"இந்த நாட்டுக்கு உரியவர்கள்தான் தனி நாடமைத்து வாழலாம் என்பது ஜனாதிபதி சந்திரிக்காவின் நிலைப்பாடாக இருக்குமானால் இந்நாட்டில் வாழும் தமிழர்களும் தனிநாடு அமைத்து வாழத் தகுதியுடையவர்களே!" என்றும் குமார் தனது கண்டனத்தில் தெரிவித்திருக்கிறார்.

# கிளிநொச்சியில் பேய்ச் சமர்!

# புலியணிகள் ஒன்று குவிந்து தாக்குதல்!

## புதிய படையணிகளும் இறக்கம்

கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு படைநிலைகள் மீதான தாக்குதல் தொடர்பாக புலிகளின் தலைவர் பிரபாகரன் விசேஷ செய்தி ஒன்றை விடுத்துள்ளார். அச் செய்தியைத் தணிக்கை காரணமாக முரசில் பிரசுரிக்க இயலவில்லை.

இதற்கிடையே வன்னியில் பல புதிய படையணிகளை புலிகள் உருவாக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்த்தரப்பின் நகர்வுகளை இனம் கண்டு துல்லியமான தாக்குதல் நடத்தும் பயிற்சியில் தேர்ந்த அணியினரைக் கொண்டு 'கேணல் கிட்டு பீரங்கிப் படையணி' என்னும் புதிய படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாம்.

இப்படையணி சமீபத்திய சமரிலும் ஈடுபடுத்தப்பட்டதாம்.

முல்லைத்தீவு முகாம்மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்கு 'ஓயாத அலைகள்' என்று பெயரிட்டிருந்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் அத்தாக்குதலில் பலியாகினர்.

"மீண்டும் ஒரு ஓயாத அலைகளுக்கு தயாராகுங்கள். அதனைவிட மூர்க்கமாக இருக்க வேண்டும்!" என்று சில மாதங்களுக்கு முன்னர் பிரபாகரன் தனது முக்கிய தளபதிகளுக்குப் பணித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

அதன்பின்னரே தாக்குதல்களுக்கான புதிய படையணிகள் பலவும் உருவாக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

(அலுவலக நிருபர்)

அந்த அணிகளே சமீபத்திய சண்டைகளில் முன்னணியில் இறக்கப்பட்டனவாம்.

கேணல் கிட்டு பீரங்கிப் படையணியில் பெண்களும் உள்ளனர் என்று தெரிகிறது.

சமீபத்திய சண்டைகளில் பீரங்கிப் படையணியின் உக்கிரம் கடுமையாக இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டாங்கி எதிர்ப்புப் படையணியும் முக்கிய அணியாக களத்தில் இறக்கப்பட்டதாம். இது வரை டாங்கி எதிர்ப்பு அணி தற்காப்பு மற்றும் தாக்குதல் முறியடிப்பு சமர்களில் மட்டுமே பங்கு கொண்டது. இம்முறைதான் தாக்குதல் சமரில் பங்குகொண்டுள்ளது.

### புலிகளின் பட்டியல்

தமது தரப்பில் பலியான 85 பேரின் பெயர் விவரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர்.

பெண் புலிகள் உட்பட யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை, வன்னி ஆகிய பகுதிளைச் சேர்ந்தோர் பலியாகியுள்ளனர். 85 பேரில் 30 பேர்வரை பெண்புலிகளாவர்.

### பிரதான அணிகள்

புலிகளது முக்கிய படையணிகள் அனைத்தும் சமீபத்திய சமரில் பங்கு கொண்டுள்ளன. மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை மாவட்டங்களில் இருந்து தாக்குதல் அணிகள் குறிப்பிட்ட சமருக்காக என்று சமீபத்தில் வன்னிக்கு அழைக்கப்பட்டன. ஒன்று குவிக்கப்பட்ட புலியணிகள் இணைந்து நடத்திய தாக்குதலே சமீபத்திய தாக்குதல் என்று தெரியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கில் புலிகளின் முக்கிய பிராந்திய தளபதிகளும் இச் சமரில் பங்கெடுத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே ஏனைய பிராந்தியங்களில் சமீபகாலத்தில் குறிப்பிடத்தக்க தாக்குதல்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

"எதிரி முந்திக் கொள்ளு முன்னர் நாம் முந்திக் கொள்ள வேண்டும். எதிரி எம்மைத் தேடி வர முன்னர் நாம் அவர்கள் வாசலுக்கு தேடிச் செல்ல வேண்டும்!" என்று பிரபாகரன் கூறிவரும் சிந்தாந்தத்தின் அடிப்படையில் தான் சமீபத்திய தாக்குதலுக்கும் புலிகள் திட்டம் தீட்டினர் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## என்றும் இல்லாத அமளி

## ஆம்பியுலன்ஸ் ஓட்டங்கள்

தலைநகரில் முன் எப்போதும் இல்லா தளவுக்கு ஆம்பியுலன்ஸ் வண்டிகள் சமீபத்தில் ஓடுப்பட்டுத் திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

விமானங்களும் இரவிரவாகப் பறந்து திரிந்தன. 27.09.98 அன்று வன்னியில் கிளிநொச்சிப் பகுதியில் சமர் வெடித்த பின்னரே தலைநகரில் ஆம்பியுலன்ஸ் ஓட்டங்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

அநுராதபுரம், கொழும்பு மருத்துவ மனைகளும் பரபரப்பாக இருக்கின்றன.

கொழும்பில் நீண்டகாலம் வசிக்கும் ஒருவரது கருத்துப்படி, ஆம்பியுலன்ஸ் வண்டிகளின் ஓட்டம் இதற்கு முன் எப்போதும் இந்தளவு இருக்கவில்லை.

## பெண்கள் அணி சூடு

## படையினர் பதிலடி

யாழ்ப்பாணம் குருநகர் சவச்சாலை சந்தியில் உள்ள படையினரின் காவலரண்மீது புலிகளின் பெண்கள் அணியின் பிஸ்டல் குழுவினர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

25.09.98 அன்று மாலை 6.15 அளவில் இச்சம்பவம் நடந்தது. இரண்டு ஆண் புலிகள் தமது சைக்கிள்களில் ஏற்றிவந்து காவலரணுக்கு எட்ட உள்ள பகுதியில் இரு பெண் புலிகளையும் இறக்கிவிட்டுச் சென்றனர்.

காவலரணை அண்மித்த பெண் புலிகள் இருவரும் கைக்குண்டை காவலரண் நோக்கி வீசிவிட்டு பிஸ்டலால் சுட்டபடி காவலரணுக்குள் பிரவேசிக்க முற்பட்டனர்.

முன்னரும் இதே பகுதியில் பெண் புலிகள் தாக்கியதால், உஷாராக இருந்த படையினர், உடனடியாக பதுங்குநிலை எடுத்து பெண்புலிகளை நோக்கிச் சுட்டனர். இரு பெண்புலிகளும் ஸ்தலத்திலேயே பலியாகினர். படையினர் இருவர் காயமடைந்தனர். ஒரு சிப்பாய் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பெண் புலிகள் இருவரும் பிஸ்டலை மறைத்து வைக்கும்விதமான வசதிகள் செய்யப்பட்ட உட்காற்சட்டைகள் அணிந்திருந்தனராம். மிக நவீனமான சிறிய ரக பிஸ்டலே வைத்திருந்தனர். வழக்கமான 9 எம்.எம் பிஸ்டலைவிட சிறிய பிஸ்டல் அது. மறைத்துக் கொண்டு உலாவ வசதியானது.

## இலங்கையில் தமிழருக்கு அநீதி!

## தட்டிக் கேட்பது புலிகள்தான்!

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் 'துக்ளக்' சஞ்சிகைக்குப் பேட்டியளித்துள்ளார்.

புலிகள் எதிர்ப்பில் முன்னிற்கும் சஞ்சிகை துக்ளக். அதன் நிருபர் ராமதாசிடம் அவரது புலிகள் ஆதரவு நிலை தொடர்பாக கேள்விக்கணைகள் தொடுத்தார்.

'துக்ளக்' நிருபரின் கேள்விகளும் டாக்டர் ராமதாசின் பதில்களும் இதோ:

**கே:** நீங்கள் பல வருடங்களாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை ஆதரித்து வந்தீர்கள். ஆனால் இப்போது தமிழீழத்துக்குத்தான் ஆதரவு என்று கூறிவிட்டீர்கள்?

**ரா:** நான் பிரபாகரனை ஆதரித்தேன் என்பதை மறைக்கவே இல்லை. இப்போதும் அவர்மீது நான் பெரியளவுக்கு மரியாதை வைத்துள்ளேன்.

**கே:** அவர் ஒரு பயங்கரவாதி; இந்திய அரசு அவர்களைத் தடை செய்துள்ளதே?

**ரா:** வெள்ளையர்கள் சுதந்திரப் போராட்டத்தின்போது காந்தியையும் பயங்கரவாதி என்றுதான் வர்ணித்தார்கள்.

**கே:** நீங்கள் காந்தியையும் பிரபாகரனையும் இணைத்துப் பேசுவது நன்றாக இல்லை. மகாத்மா காந்தி அஹிம்சைவாதி. ஆனால் பிரபாகரனோ ராஜீவ் உட்பட பலரைக் கொலை செய்தவர்?

**ரா:** ராஜீவ் காந்தியைக் கொல்ல ஆணை பிறப்பித்தது பிரபாகரன் என்று இது வரை நிருபிக்கப்படவில்லை. வழக்கின் தீர்ப்பு ஹேஷ்யங்கள் மூலம் அளிக்கப் பட்டுள்ளது. தாங்கள் என்ன கூறினாலும் சரி, பிரபாகரன் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை நிகரற்ற தலைவர்தான்.

என்று கூறிய டாக்டர் ராமதாஸ், "இலங்கையில் தமிழர்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனர். வெள்ளையர்கள் அந்நாட்டை விட்டுச் சென்றபோது தமிழர்களுக்கு சம உரிமை அளிக்காமல் ஆட்சியை சிங்களவர்களிடம் ஒப்படைத்தனர்.

அன்று முதல் இன்றுவரை தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகிறது. இதைத் தட்டிக் கேட்கும் அளவுக்கு இப்போது இருப்பது விடுதலைப் புலிகள் என்ற ஒரே இயக்கம்தான்!" என்றும் தன் பேட்டியில் கூறியுள்ளார்.

## தொலைபேசித் தணிக்கை

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் கடந்த 24/09/98 இரவு தொடக்கம் இச்செய்தி எழுதும்வரை தொலைபேசித் தொடர்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வவுனியா நகருக்குள் மட்டும் தொடர்புகள் கிடைக்கும். அங்கிருந்து நாட்டின் பிற பாகங்களுடனோ, பிறநாடுகளுக்கோ தொடர்பு கொள்ள முடியாமல் வவுனியா மக்கள் மிகவும் அல்லலுறுகின்றனர்.

வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்பினையும் பணத்தினையும் நம்பி வாழும் இடம் பெயர்ந்தோர் பலர், தெரிந்தவர் அறிந்தவரிடம் கையேந்தி நிற்பதாகத் தகவல்கள் வருகின்றன.

எதனைத் தடுப்பதற்கு இந்தத் தொலைபேசித் தணிக்கை? என மக்கள் வினாத் தொடுக்கின்றனர்.

இது இவ்விதமிருக்க யுத்தம் இடம்பெறும் கிளிநொச்சிச் சமர் பற்றிய விபரங்கள் விலாவாரியாகவும்வியப்பான பெரும் செய்திகளாகவும் வெளி நாடுகளில் வெளியிடப்படுகின்றனவே, என்று பாதிக்கப்பட்டோர் விசனப்படுகின்றனர்.

## தகவல் கொடுத்தவர் முன்னாள் புலி

## கனடாவில் முரளிதரன் கைது

(நமது நிருபர்)

கனடாவில் புலிகளின் முக்கிய பிரமுகர் நடராஜா முரளிதரன் கைதானதாக செய்திகளில் கூறப்பட்டு வருகிறது. இது தொடர்பாக முரசுக்குக் கிடைத்துள்ள தகவல்கள் வருமாறு:

நடராஜா முரளிதரன் புலிகளின் சுவிஸ் கிளை பொறுப்பாளராக இருந்தவர். நிதி திரட்டல் நடவடிக்கை தொடர்பாக சுவிஸ் பொலிசாரால் கைதாகி 1997 மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டவர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை தையிட்டியில் பிறந்த முரளிதரனுக்கு 37 வயது.

சுவிஸ் கிளையில் முரளிதரனின் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்றும், நிதிக்கணக்கு தொடர்பாக சந்தேகங்கள் உள்ளதாகவும் பிரபாகரனுக்கு தெரிவிக்கப் பட்டது.

லோரன்ஸ் திலகர் சர்வதேச பொறுப்பாளராக இருந்தபோதே முரளி சுவிஸ் கிளைப் பொறுப்பாளராக இருந்தார்.

லோரன்ஸ் திலகரை வன்னிக்கு அழைத்த பிரபாகரன், வெளிநாட்டுக் கிளைகளின் பொறுப்பாளர்களையும் மாற்றினார். அப்போது முரளிதரனும் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

அதன்பின்னர் புலிகளில் இருந்து ஒதுங்கி இருந்த முரளிதரன், கனடா சென்று அங்கு புகலிடம் தேடுவதற்காக போலிக் கடவுச் சீட்டுடன் புறப்பட்டார்.

அமெரிக்க எல்லையூடாக கனடாவுக்குள் பிரவேசித்தார் முரளிதரன்.

அதற்கு முன்னரே அவரது மனைவியும் பிள்ளைகளும் கனடா சென்றுவிட்டனர். முரளிதரன் கனடாவுக்கு சென்ற தகவலை கனடா பொலிசுக்கு முன்னாள் புலி உறுப்பினர் ஒருவரே கூறினாராம்.

அதனையடுத்தே முரளிதரன் மடக்கிப் பிடிக்கப்பட்டு, ரொரன்ரோ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

## பட்டப்பகலில் சுட்டுக்கொலை

## பிஸ்டல் குழு தப்பியது

மூதூரில் இரு இராணுவத்தினரும், அவர்களுக்குத் தகவல் கொடுத்து உதவும் தமிழர் ஒருவரும் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

28.09.98 அன்று பட்டப்பகலில் மூதூர் வைத்தியசாலை அருகே இச் சம்பவம் நடைபெற்றது.

கட்டைபறிச்சானைச் சேர்ந்தவர் சிவா. இவர் முன்னர் புலிகளுடன் சேர்ந்து திரிந்தவர். பின்னர் படையினருடன் இணைந்து புலிகள் பற்றிய தகவல்களைக் கூறிவந்தார். தனது குடும்பத்துடன் மூதூரில் குடியேறியதுடன் முஸ்லிமாக மதம் மாறினார்.

படையினருக்கு உதவும் நான்குபேர்மீது புலிகள் மூதூரில் குறிவைத்திருந்தனர் என்று 'முரசு' முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது ஞாபகமிருக்கலாம். அதில் இருவர் ஏற்கனவே புலிகளால் கொல்லப்பட்டு விட்டனர்.

சிவாவும் முன்னர் ஒரு தடவை புலிகளால் சுடப்பட்டு சிறு காயத்துடன் தப்பியிருந்தார். இம்முறை பலியாகி உள்ளார்.

சைக்கிளில் வந்த இரு இளைஞர்களே பிஸ்டலால் சுட்டுள்ளனர். திரும்பிச் செல்லும் போது ஒருவரது பிஸ்டல் கீழே விழுந்து விட்டது. நிதானமாக அதனை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு போயிருக்கிறார்கள். இச் சூட்டுச் சம்பவத்தின் இடையே சிக்கிய முஸ்லிம் பொதுமகன் ஒருவரும் பலியாகியுள்ளார்.

## சங்கரி ஏமாற்றம்-விரக்தி என்கிறார்

யாழ் மாநகர முதல்வர்கள் இருவர் அடுத்தடுத்துப் பலியானது மூலம் யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் தான் நினைப்பதை செய்ய முடியாது என்பது வெளியாகிவிட்டது. யாழில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி, அதனை உலகுக்குக் காட்டி பிரசாரம் செய்தது அரசாங்கம். அதனால்தான் எமது உறுப்பினர்கள் பலியானார்கள்.

"தீர்வு வரும் என்று கூறிக் கூறி காலத்தை இழுத்தடித்து விட்டனர். நாம் இந்த அரசாங்கம்மீது விரக்தி அடைந்துள்ளோம்!" இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான வீ.ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

தலைநகர வானொலிச் சேவை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

## வாழைக்குலையுடன் இருவர் கைது!

ஓட்டோவொன்றில் வாழைக்குலைகளை ஏற்றிச் சென்ற இருவரை சந்தேகத்தின் பேரில் ஏறாவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். புலிகளுக்கு வாழைக்குலைகள் கொண்டு செல்லப்படுகிறது என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நோட்டமிட்ட பொலிஸார் அந்த இரு இளைஞர்களும் ஏறாவூரில் இருந்து சித்தாண்டிக்கு ஓட்டோவில் வாழைக்குலைகளை ஏற்றிச் செல்லும் போது கைது செய்ததாகக் கூறப்படுகிறது.

நவராத்திரி விழாவுக்காகவே வாழைக்குலைகள் கொள்வனவு செய்யப்பட்டதாக அவ்விளைஞர்களது உறவினர்கள் தரப்பில் கூறப்படுகிறது. சி. தங்கவேல் (19), சி. கனகசூரியம் (18) ஆகியோரே கைதானவர்களவர். இச்சம்பவம் 25.09.98 அன்று இடம்பெற்றது.

## புலிகள் பாய்ச்சல்!

மட்டக்களப்பு-ஆறுமுகத்தான்குடியிருப்பில் புளொட் உறுப்பினர் ஒருவரைத் திடீரெனப் புலிகள் சுற்றி வளைத்த வேளை அவர் புலிகளின் பிடியிலிருந்து தப்பினார்.

25.09.98 அன்று காலை புளொட் முகாமிலிருந்து தனது வீட்டுக்கு வந்து குளித்துக் கொண்டிருக்கும் தகவலையறிந்த புலிகள் இரகசியமாக வந்து முற்றுகையிட்டனர். நிலைமையை சமயோசிதமாக அறிந்த புளொட் உறுப்பினர் கைக்குண்டொன்றை வெடிக்கச் செய்து பாய்ந்து தப்பினார். அவரது பெரிய மோட்டார் சைக்கிளைப் புலிகள் எடுத்துச் சென்றனர். துப்பாக்கியைத் தூக்கியெறிந்து விட்டு புளொட் உறுப்பினர் தப்பியோடினார். எனினும் புலிகள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. பின்னர் அதைப் புளொட் உறுப்பினர் எடுத்துச் சென்றார்.

## மாடு வாங்கச் சென்றவர் கொலை!

## முஸ்லிம் வியாபாரியின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு- ஏறாவூர்ப் பகுதியிலிருந்து புலிகளின் வசமுள்ள பகுதிக்கு மாடு வாங்கச் சென்ற எஸ்.எம். ஹுஸைன் (23) என்பவர் மூன்று நாட்களின்பின் கொடுவாமடுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

25.09.98 அன்று காலை 150,000/= ரூபா பணத்துடன் மாடு வாங்கச் சென்றவர் வீடு திரும்பாது போகவே அவரது உறவினர்கள் புலிகள் இயக்கத்தினரின் உதவியுடன் தேடுதலில் ஈடுபட்டனர். தமிழ்ப் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து சடலம் 28.09.98 அன்று மாலை கண்டெடுக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த விடயத்தில் புலிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இக்கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் தமிழர்கள் இருவரைப் புலிகள் கைது செய்து விசாரிப்பதாகவும், கொல்லப்பட்ட முஸ்லிம் நபரின் உறவினர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

இதேவேளை வெளிநாட்டு வேலை பெற்றுத் தருவதாக பணம்பெற்ற ஒரு முஸ்லிம் நபரையும், அதனுடன் சம்பந்தப்பட்ட ஒரு தமிழ் நபரையும் புலிகள் பிடித்துச் சென்று விசாரணை செய்துவருவதாக அறியப்படுகிறது. இவ்விருவரும் ஏறாவூரைச் சேர்ந்தவர்களே.


படிப்பகம்

www.padippakam.com

# சிறுமிகளின் திண்டாட்டம்!
## சீருடையினருக்கு வீட்டு வேலை!

அக்கரைப்பற்று, சங்கமான்கண்டி, உல்லை, 40ஆம் கட்டை போன்ற இடங்களிலுள்ள பெற்றோரை இழந்த வறிய இளம் பராயத்தினரைக் குறிப்பாகப் பெண் பிள்ளைகளை அப்பகுதிகளிலுள்ள சீருடையினரிற் சிலர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள தத்தமது வீட்டு வேலைகளுக்கு அமர்த்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வறிய சிறார்கள் என்பதால் ஆசை வார்த்தைகளைக் கூறியும் வேறு பல வழிகள் மூலமும் இவர்களை வீட்டு வேலைகளுக்கு அமர்த்துவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக இப்பகுதிகளில் ஏராளம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பல்வேறு சூழ்நிலைகளின் நிமித்தம் இத்தகைய பாதிப்புக்களை வெளிக்கொண்டு வருவதில் பல கஷ்டங்கள் இருப்பதாக சமுகநல நிறுவனமொன்று கூறுகிறது.

அக்கரைப்பற்று 40ஆம் கட்டையைச் சேர்ந்த சகோதரிகளான இரு சிறுமிகள் (10 வயதும், 14 வயதும்) கொழும்பிலுள்ள சீருடையினர் ஒருவரின் வீட்டில் கடந்த மூன்று வருடங்களாக வேலைக்கமர்த்தப்பட்டு வந்துள்ளனர். ஆனால் அந்த மூன்று வருடங்களுக்கும் இரு சிறுமிகளுக்கும் வழங்கப்பட்ட கூலி ரூபா 2000/- மட்டும்தான். இவர்கள் அங்கிருந்து தப்பி ஓடி மீண்டும் அக்கரைப்பற்றுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். அந்த வீட்டில் அடி ஆக்கினைகள் தாங்கமுடியவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் தாயில்லாத இந்தச் சிறுமிகளை மீண்டும் அந்த சீருடையினரின் வீட்டு வேலைக்கே போகுமாறு அந்தச் சிறுமிகளின் ஈவிரக்கமற்ற தந்தை அடிக்கிறாராம். இந்த விடயம் அப்பகுதியிலுள்ள உதவி நிறுவனமொன்றினால் மனித உரிமைகள் பணிக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதிகாரத்திலுள்ளோர் (யுத்த சூழல்) இழைக்கும் தவறுகளுக்கெதிராக நடவடிக்கைக்குத் துணிவோர் மீது பழிவாங்கப்படும் என்பதால், இப்படியான பாதிப்புக்களை வெளிக்கொண்டுவர உள்ளூர் உதவி அமைப்புக்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

மனித உரிமை ஆர்வலர்களும் மற்றும் தேசிய, சர்வதேசிய பலமுள்ள அமைப்புக்களும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமென்று அக்கரைப்பற்று உதவி அமைப்பொன்றின் பிரதிநிதி 'முரசு'க்குத் தெரிவித்தார்.

# சரணடைந்தவர் மீண்டும் புலிகளிடம்!

மட்டக்களப்பு-வாகரையை படையினர் கடந்த ஜூன் மாதம் கைப்பற்றினர் என்பது தெரிந்ததே. அதற்குச் சில தினங்கள் கழித்து படையினரிடம் சரணடைந்திருப்பதாகக் கூறப்பட்ட ஜெகன் எனும் புலி உறுப்பினர் கடந்த வாரம் படையினரின் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு மீண்டும் புலிகளிடம் தப்பிச் சென்றிருக்கிறார். படைமுகாம் சம்பந்தமான சகல தகவல்களையும்கூட அவர் கடந்தமூன்று மாதங்களாகப் படையினருடன்கூட இருந்த காலப்பகுதியில் பெற்றிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

தற்சமயம் புலிகளிடம் சேர்ந்து கொண்டுள்ள அவர் வாகரையில் உள்ள படையினரின் முகாமில் தொடர்பு வைத்திருக்கும் அனைவரது விவரங்களையும் புலிகளுக்குத் துல்லியமாகத் தெரிவித்து வருகிறாராம். இதேபோன்றதொரு சம்பவம் சம்பத்தில் வாழைச்சேனையிலும் இடம்பெற்றது.

# மறுத்தால் மாட்டுப் படுவீர்கள்!

அக்கரைப்பற்றிலுள்ள சீருடையினர் சிலர் அப்பகுதியில் சாவடிகளையும், வீதித் தடைகளையும் தாண்டிச் செல்லும் இளைஞர்களிடத்தில், ஏதாவது வாங்கித் தருமாறு கேட்டுத் தினமும் நச்சரிக்கிறார்களாம்.

சிகரெட், நுளம்புச்சுருள், சோப் என்று இன்னும் பல நாளாந்த உபயோகப் பொருட்களையே வாங்கித் தருமாறு கட்டாயப்படுத்துகின்றனராம். ஓரிரு தடவைகளென்றால் உதவி புரியலாம்; தொடர்ந்து வாங்கிக் கொடுப்பதென்றால் இயலாத காரியம்; அதுவும் பாடசாலை மாணவர்களையும் சிகரெட் வாங்கித் தருமாறு நிர்ப்பந்திப்பது விசனத்திற்குரியது என்கிறார் பாதிக்கப்பட்ட ஒருவர்.

இதனால் குறித்த சில சீருடையினர் கடமையில் இருக்கும் சாவடிகளைத் தாண்டிச் செல்ல இளைஞர்கள் அஞ்சுகிறார்கள். வாங்கிக் கொடுக்க மறுப்போர் அல்லது மறந்து போவோர் "மாட்டுப் படுவீர்கள்!" என்றும் எச்சரிக்கப்படுகின்றார்களாம்.

சீருடையினருக்கு மாதாமாதம் சிகரெட் வகைகள் பெட்டி பெட்டியாக வழங்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. அவற்றை மொத்தமாகக் கடைகளில் விற்றுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அப்பாவி மக்களைக் கஷ்டப்படுத்துவதுடன் முடியாது போனால் மாட்டுப் படுவீர்கள் என்று எச்சரிப்பது கண்டிக்கப்படவேண்டியது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

# லிங்க நகரில் எச்சரிக்கை – மணலாற்றில் பாதுகாப்பு!

கோணேஸ்வரர் குடிகொண்டிருக்கும் பகுதியை (திருமலையில்) புனித பிரதேசமாக்க வேண்டுமென்ற ஆர்வம் அன்று பிரதிநிதித்துவம் வகித்த தமிழ்க் கட்சியினருக்கு எழவில்லை. இன்று ஆலயசுற்றாடல் பகுதி, சமுத்திரவெவ, என பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய சந்தை திறப்பதற்கு எதிர்ப்பு, லிங்கநகரில் தொடர்ந்து பல ஆண்டுகள் குடியுரிமை பெற்றவர்களை வெளியேற்றும் தந்திரம். இத்தனையும் திருமலையின் எதிர்காலம் பற்றி-வருமுன்னர் காக்கும் சிந்தனையில்லாத தலைமைத்துவத்தை பின்தொடர்ந்ததால் ஏற்பட்ட விளைவுகள்.

மணலாற்றுப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை பாதுகாக்க இராணுவம் பாதுகாப்பு வலயம் அமைக்க உள்ளது. அதே இராணுவத்தினர் லிங்கநகரில் தமிழ் மக்களை வெளியேற்ற ஒற்றைக்காலில் நிற்கின்றனர். இவை எல்லாம் வெளிப்படுத்தும் உண்மைகள் என்ன? மக்கள் அறிவர்.

மனு.மிக்கேல், மூதூர்-07.

# மாவட்டக்கிளை விளக்கம்

முரசில் வெளியான (முரசு 274, செப்.13-19.1998)4ம் பக்கச் செய்தி 'மூதூர் வைத்தியசாலை வைத்தியர் பற்றாக்குறைக்கு முக்கிய காரணம் மத்திய சுகாதார அமைச்சு' என கூறியதற்கு நன்றி. தவிரவும், மத்திய சுகாதார அமைச்சினால் மூதூர் வைத்திய சாலைக்கு நியமிக்கப்பட்ட வைத்தியரை மாகாண சுகாதார அமைச்சு அங்கு அனுப்பாமல் தொடர்ந்து திருகோணமலை தள வைத்தியசாலையில் வைத்துக்கொண்டு, ஏனைய வைத்திய உத்தியோகத்தர்களை மூதூருக்கு அனுப்பும்படி பணிக்கப்பட்டதினாலும் மூதூர் வைத்தியசாலைக்கான தகுந்த மாற்று நடவடிக்கையின்றி டாக்டர் சக்கீர் தம்பதிகளை இடம் மாற்றியதன் காரணமாகவும் எமது சங்கம் டாக்டர் சில்வா, சுகுணதேவன், ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் பதில் கடமை இடமாற்றத்திற்கான தனது எதிர்ப்பைச் செயலாளருக்கு தெரிவித்தது.

ஆனால் இக்கடிதம் செயலாளருக்கு அனுப்பப்படும் முன்னரே இடைக்கால நடவடிக்கையாக எமது சங்க உறுப்பினர்கள் சுயவிருப்பத்தின் பேரில் மூதூர் வைத்தியசாலைக்கு கடமைபுரிய சம்மதித்து, திருகோணமலை பிரதி மாகாண சுகாதார பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

ஆனால் மாகாண சுகாதார நிர்வாகம் இதற்கு எவ்வித பதிலையும் தராததே மூதூர் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறைக்கு காரணமாகும்.

டாக்டர்: கே.ஈ.கருணாகரன்,
மகப்பேற்று வைத்திய நிபுணர்,
செயலாளர்-
திருகோணமலைக் கிளை

# "வெளியேறுமாறு கேட்கவில்லை"

"மன்னார் தினசரிச் சந்தை வியாபாரிகளை உடனடியாக வெளியேறுமாறு கோரவில்லை" என்று மன்னார் பிரதேசசபை விசேட ஆணையாளர் தனது மறுப்பைத் தெரிவித்தார்.

"தினச்சந்தையில் உள்ள வர்த்தகர்கள் தமது கடைகளில் ஏற்படுத்திய அடைப்புக்களை அகற்றுமாறு கேட்டு, அதற்கு ஒரு மாதகால அவகாசமும் வழங்கப்பட்டது.

இவர்களை வெளியேறுமாறு கேட்கப்படவில்லை. அடைப்புக்களை நீக்காத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றே தெரிவிக்கப்பட்டது!" என்று அவர் கூறியுள்ளார்.

# தேவை தொலைபேசி

(நமது நிருபர்)

மொனறாகலை மாவட்டத்திலுள்ள பகினிகஹவெல கிராமத்தில் பொதுத் தொலைபேசிக் கூண்டுகளை அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் தொலைத் தொடர்பு அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இங்கு தபாலகத்தில் மட்டுமே தொலைபேசி வசதி உள்ளது. இதனால் விடுமுறை தினங்களிலும், இரவு நேரங்களிலும் தொலைபேசி சேவையைப் பெற முடியாத நிலை உள்ளது.

இக்கிராமத்தில் உள்ளவர்கள் வெளியிடங்களுடன் கூடுதல் தொடர்புகள் வைத்திருப்பதனால் தொலைபேசி தொடர்பு இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது.

1500 இற்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட இக் கிராமத்தில் நீண்டகாலத் தேவையாக உள்ள தொலைபேசி தேவை நிவர்த்திக்கப்படுவது அவசியமாகும்.

## பிறந்தநாள் வாழ்த்து

செல்வி விஜுஷா 08.09.98

ஓலுகலை அடாவத்தையை சேர்ந்த ஞானசேகரன்-ஆனந்தி தம்பதியினரின் செல்வ புதல்வி விஜுஷா தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா-அப்பா, தாத்தாமார்கள், அம்மம்மா, மாமாமார்கள், பெரியம்மாமார்கள், அக்கா துசி, அண்ணா பிரவின் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.




**கணிதம்** ஆண்டு 10,11 மாணவர்களுக்கு
* காரணிப்படுத்தல், ஒருங்கமை சமன்பாடு, இருபடிச் சமன்பாடு ஆகிய அலகுகளும் மாதிரி வினாக்களும் கடந்தகால வினாக்களும், புள்ளியிடும் முறையும் காட்டப்பட்டுள்ளது. தொடர்பு:-
S.KUGAN, NO-13, IRRIGATION QUARTER'S A'PURA ROAD, PUTTALAM.
ரூ. 25/= மணியோடர் அனுப்பிபெற்றுக்கொள்ளவும்.

தரமோ உயர்தரம்!
என்றும் நிரந்தரம்!
அதுவே
நியூகலா
வின்
கண்ணைக் கவரும்
வண்ணங்களில்
கலையழகு மிளிரும்
தீபாவளி
வாழ்த்து
மடல்கள்
விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.
ஓடர்கள் ஏற்றுக்
கொள்ளப்படுகிறது
நியூகலா கிரியேசன்ஸ்
192, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொலைபேசி - 332465

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை சந்திக்கும் இடங்கள்
கொழும்பில் ஒக்டோபர் 21 முதல் 31 வரை
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P. 338165, 338166 - செல்டெல் இல.072-609388
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கல்முனையில் ஒக்டோபர் 3,4ம் திகதிகளில்
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-23626
வவுனியாவில் ஒக்டோபர் 10,11,12ம் திகதிகளில்
VANNI INN (2ம் குறுக்குத்தெரு) ஞானவைரவர் ஒழுங்கை, வவுனியா.
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa.
Resident: T.P. 065-24019

மட்டக்களப்பு மாந்திரீகம்
உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.
DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.

New Victors





பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ற்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

METRO COLLEGE INTERNATIONAL
புதிய கல்வி ஆண்டு ஆரம்பமாகியுள்ளது.
நடைபெறும் வகுப்புக்கள்
Nursery முதல் London O/L, A/L வரை.
Laboratory, Computer Lab வசதிகள் உண்டு.
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கு
Mr. K.Arunasalam
(Principal)
Metro College International
No.17, Charlemont Rd,
Wellawatte. T.P : 074-511164.


காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

மிகப் பெரிய அளவிலான
ஜேர்மன்–தமிழ்
அகராதி
50 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்களுடன் இலக்கண விளக்கம் மற்றும் புதிய அணுகு முறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.
உங்கள் தேவைக்கு இன்றே பதிவு செய்யுங்கள்.
தொடர்பு கொள்ளவும்.
K.Chandrasegaran
(Swiss) 01/461 57 49
V.Sivanesarajah
(Swiss) 01/492 02 61





மலையாள மாந்திரிகம்


மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண நடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

எச்சரிக்கை
T.P:- 594492
STUDIO CHHAYA
40 1/1, GALLE ROAD,
(NEXT TO ALEXANDRA ROAD,)
WELLAWATTA, COLOMBO-06




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஆயத்தம் அறிந்து நடந்த முற்றுகைச் சமர்!

கிளிநொச்சியில் படையினரது முன்னரங்க நிலைகள் மீது 01.02.1998 அன்று ஞாயிற்றுக்கிழமை பாரிய தாக்குதல் நடத்தி நகரின் மையம் வரை கைப்பற்றினர் புலிகள். அன்றிலிருந்து கிளிநொச்சி எல்லையான கரடிப்போக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது.

கரடிப்போக்கில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம்வரையான கிளிநொச்சி நகர் பகுதி படையினரிடமும், மிகுதி புலிகளிடமும் இருந்தது.

இது தணிக்கை வரமுன்னர் வெளியான செய்திகள். களநிலவரங்கள்.

அதன்பின்னர் கிளிநொச்சி நகரில் பல மோதல்கள், முன்னேற்ற முயற்சிகள், முறியடிப்பு தாக்குதல்கள் பல நடந்துள்ளன.

மேற்கொண்டு கிளிநொச்சி நகரில் முன்னேறியதாக படைத்தரப்பு செய்தி எதனையும் வெளியிடவில்லை. எனவே முன்னேற்ற முயற்சிகள் பயனளிக்கவில்லை என்பதையே ஊகிக்க முடிந்தது.

1.02.98 அன்று புலிகள் நடத்திய தாக்குதல் சமரின் பின்னர் புலிகளும் கிளிநொச்சிப் பகுதியில் பாரிய தாக்குதல் எதனையும் தாமாக வலிந்து மேற்கொள்ளவில்லை.

முன்னேற்ற முயற்சிகளுக்கு எதிரான முறியடிப்பு சண்டைகளில் மட்டுமே ஈடுபட்டு வந்தனர்.

இடையே ஒய்ந்திருந்த 'ஜயசிக்குறுய்' சமர் மீண்டும் தொடர்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன. எதற்காகவோ காத்திருந்து கைக்கு எட்டியதும் ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன.

வான்பரப்பில் அடிக்கடி பறப்புகள் நடந்தன. அவை ஒன்றும் இரகசியமல்ல. இரகசியமாக போர் விமானங்கள் பறக்கத்தான் முடியுமா? மக்கள் அறியாமல் இருக்கும் தகவல்களையும், களத்தில் உள்ள புலிகள் அறியக்கூடிய வாய்ப்பை வழங்குவதில் விமானப் பறப்புகளுக்கு பிரதான பங்கு இருக்கிறது.

அது மட்டுமல்ல இலங்கை அரசு எங்கெங்கே, எப்போது ஆயுதம் வாங்குகிறது? என்ன ரக ஆயுதங்களை கொள்வனவு செய்கிறது என்பன போன்ற தகவல்கள்கூட புலிகளுக்கு எட்டிவிடுகின்றன.

அதுதவிர 'ஜயசிக்குறுய்' படையினரை புலிகளின் உளவுப்பிரிவு 24 மணிநேரமும் கண்காணித்தபடியேதான் இருக்கிறது.

'ஜயசிக்குறுய்' படையினர் மீண்டும் பாரிய நகர்வுக்கு தயாராகும் தருணத்தில் தாக்குவதற்கு இம்முறை திட்டமிட்டனர் புலிகள்.

புலிகள் தம்மை தேடிவந்து தாக்கக்கூடும் என்று போதிய தற்காப்பு நிலையில் தான் ஜயசிக்குறுய் படையினர் இடைக்கால ஓய்வை கழித்தனர்.

ஆனால் புலிகள் தாக்கவில்லை. யாழ் மாநகர சபை கட்டடத்தில் குண்டு வெடித்தது. மாநகரம் அதிர்ந்தது. பெரும் தலைகள் உருண்டன.

யாழ் குடாநாட்டுக்குள் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தலாம் என்று ஊகங்கள் கிளம்பின. வதந்திகள் பரவின. பிரதான பாதைகள் மூடப்பட்டன.

'ஜயசிக்குறுய்' படைக் குவிப்பை தடுக்க யாழில் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தக்கூடும். திலீபனின் நினைவு தினமான 26.09.98 க்கு முன்பாக அத்தாக்குதல் நடக்கலாம் என்று எதிர்பார்த்த யாழ் படை வட்டாரங்கள் தூக்கத்தை தொலைத்துவிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளில் மூழ்கியிருந்தன.

இக்கட்டத்தில்தான் 'ஜயசிக்குறுய்' களத்தின் இருமுனைகளான மாங்குளத்திலும், கிளிநொச்சியிலும் படை நகர்வுக்கான அறிகுறிகள் தென்பட்டன.

புலிகள் யாழில் கவனம் செலுத்துவதாக படையினர் நினைக்க, புலிகள் கிளிநொச்சி முனையில் பாரிய தாக்குதலுக்கான திட்டங்களை தீட்டிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளின் முன்னாள் தளபதியும், தற்போது வன்னிக் கள புலிகளின் தளபதிகளில் முக்கியமானவருமான கருணா மட்டக்களப்பில் இருந்து புதிய படையணிகள் சிலவற்றை சமீபத்தில் வன்னிக்கு தருவித்தார்.

ஏனைய படையணிகளும் ஒன்று குவிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தன.


ஜயசிக்குறுய் நகர்வுக்கான ஆயத்தங்கள் சூடுபிடிக்கையில் தாக்குதல் தொடுப்பதே புலிகளின் நோக்கம்.

அதற்கான நாளும் வந்தது. 27.09.98 ஞாயிறு அன்று அதிகாலை, திலீபன் நினைவு தினம் நிறைவெய்திய மறுநாள் கிளிநொச்சி, பரந்தன் முன்னரங்க நிலைகள்மீது புலிப் பாய்ச்சல் ஆரம்பமானது.

நகருக்கும் சமர் முழக்கம் கேட்கத் தொடங்கியது. ஆட்டிலெறிக் குண்டுகள் பனம் பழம்போல தொப்பு தொப்பு என்று விழுந்து வெடிக்கும் சத்தங்களும் நகரை உலுக்கியது.

புலிகள் ஆட்டிலெறிகள், மோட்டார்கள் சகிதம் தாக்கியதாக படைத்தரப்பு வெளியிட்ட செய்தியிலும் கூறப்பட்டுள்ளது.

ஆட்டிலெறிகளை முல்லைத்தீவில் உள்ள தமது தளத்தில் வைத்து, அங்கிருந்தே பரந்தன், ஆனையிறவு படைநிலைகள் நோக்கி ஏவியுள்ளனர் புலிகள்.




பல திசைகளில் இருந்து ஊடறுத்தனர் புலிகள். கரடிப்போக்கு, பரந்தன்போன்ற இடங்களில் பலத்த சண்டைகள் மூண்டன.

கரடிப்போக்கு பகுதியில் இருந்த மினி முகாமை புலிகள் கைப்பற்ற முடியவில்லை என்று கடந்த முறை நடந்த சண்டையின்போது படையினர் கூறியிருந்தனர்.

ஆனால்...இம்முறை...?

இதற்கு மேல் கூற தணிக்கை அனுமதிக்காது.

ஞாயிறு, திங்கள் முழுவதும் சண்டைகள் தொடர்ந்தன. பின்னரும் மழைவிட்டும் தூவானம் விடாதது போன்ற சிறு சிறு மோதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

ஞாயிறு அன்று சண்டை நடைபெற்ற போது பரந்தனில் இருந்து உதவிக்கு செல்ல முயன்ற அரச துருப்புக்கள் பலத்த சண்டையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இத்தாக்குதல் சமரை 'ஊடறுப்பு முற்றுகைச் சமர்' என்று புலிகள் உற்சாகமாக கூறியுள்ளனர்.

படையினர் வெளியிட்ட முதல் தகவலில் 19 படை பலி 44 புலிகள் பலி என்று கூறப்பட்டது. பின்னர் 43 படைபலி 194 புலிகள் பலி என்று கூறப்பட்டது.

அதிலும் அரச வானொலி தலைப்புச் செய்தியில் 194 புலிகள் பலி என்றுவிட்டு, பின்னர் செய்தியில் 200 புலிகள் பலியானதாக கூறிமுடிக்கப்பட்டது.

தலைப்புச் செய்திக்கும் செய்தி வாசித்து முடிப்பதற்கும் இடையே 6 புலிகள் பலியாகிவிட்டனரோ?

கிரிக்கெட் ஸ்கோர் கூறும்போதுகூட நிதானமாகக் கூறுவார்கள். அரச வானொலி தன் பங்குக்கு ஸ்கோர் கூறுகிறதோ?

புலிகளின் இரகசிய வானொலியை ஒட்டுக் கேட்டுத்தான் புலிகளது இழப்பு எண்ணிக்கையை தாம் அறிந்ததாக படையினர் கூறுகின்றனர்.

களமுனையில் நின்று தமது தரப்பில் பலியானோரின் கணக்கை மட்டுமே படைத்தரப்பும் அறியத்தக்கதாக அவசர அவசரமாக தலைமைக்கு தெரிவிக்குமளவுக்கு புலிகள் அனுபவம் இல்லாமல் இருக்கிறார்கள் பாருங்கள் (!?) ஆனால் படைத்தரப்போ தமது தரப்பு எண்ணிக்கையை அறிய முன்னர் தமது எதிரிகளின் எண்ணிக்கையை அறிந்து முடிப்பதில் எத்தனை கூர்மையாக இருக்கிறது பாருங்கள் என்றுதான் எக்கச்சக்கமாக வியக்கவேண்டியுள்ளது. (?!) அது கிடக்கட்டும் விடுங்கள்.

பரந்தன்-கிளிநொச்சி படைநிலைகள் மீது புலிகள் தாக்குதல் சமர் நடத்துவது இது மூன்றாவது தடவை.

'சத்ஜய' இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய பின்னர் 9.01.97 அன்று அதிகாலையில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தினர் புலிகள்.

ஆனையிறவுக்கும் கிளிநொச்சி நகருக்கும் இடைப்பட்ட மத்திய பகுதியான பரந்தனை கைப்பற்றி படையினரை இரு கூறாக பிரித்து அழித்தொழிப்பதே அச்சமரின் இலக்காக இருந்தது.

எனினும் புலிகளின் முழுத் திட்டத்தில் பாதிதான் அன்று பலித்தது.

அன்றைய சமரில் புலிகள் தரப்பில் 140 பேரும், படையினர் தரப்பில் அரச தகவல்படி 223 படையினரும் அன்று பலியாகினர். புலிகளின் தரப்பில் 430க்கு மேற்பட்டோர் பலியானதாக அரச தகவல்கள் கூறின.

01.02.98 அன்று ஞாயிற்றுக்கிழமை புலிகள் நடத்திய கிளிநொச்சி, பரந்தன் சமரில் படை யினர் தரப்பில் 300 பேர்வரை பலியாகினர். புலிகள் தரப்பில் 14 கரும்புலிகள் உட்பட 156பேர் பலியாகினர் என்றனர் புலிகள்.

ஆனால் படைத்தரப்பினர் தம்மில் 24பேர் பலியானதாகவும், புலிகள் தரப்பில் 200ற்கு மேற்பட்டோர் பலியானதாகவும் அறிவித்தனர். அதேசமயம் 250 புலிகளது சடலங்கள் படையினரிடம் இருப்பதாக ராய்டர் கூறியதாக அரச வானொலி கூறியது.

ஆனால் படையினரது 42 சடலங்களை புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். புலிகளது சடலங்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை. களத்தில் இருந்து புலிகள் விலகும்போது அவர்கள் கண்களில் படாத சடலங்கள் மற்றும் கரும்புலிகளது சடலங்கள் உட்பட 32 சடலங்கள்வரைதான் படையினரிடம் இருந்தன என்பதை தொலைக்காட்சியில் படம் காண்பித்தபோதும் அவதானிக்க முடிந்தது.

இவை முன்னைய சமர்க்கள நிலவரங்கள். அத்தனையும் பகிரங்கமாக வெளியான செய்திகள்.

இப்போது மூன்றாவது தாக்குதல் சமர். ஊடறுப்பு முற்றுகைச் சமர் நடந்துள்ளது. உக்கிரமோதல்கள்தான். மேற்கண்ட இரு சமர்களைவிட உக்கிரம். பரிணாமம் அதிகம்.

ஒரு சமர் இன்னொரு சமருக்கான அனுபவமாகிறது. அனுபவம் வியூகங்களை நுட்பமாக்குகிறது. நுட்பம் சமரின் இலக்கை எட்டுவதை சுலபமாக்குகிறது. இது போரியல் வல்லுநர்களின் கருத்து. போரில் ஈடுபடும் சகல தரப்புக்களுக்கும் இது பொருந்தும்.

●●

வன்னியில் மழை எட்டிப் பார்க்கத் தொடங்கிவிட்டது. அண்மையில் திடீர் மழை கொட்டியது. இடியுடன் கூடிய மழை. காற்றும் அடித்தது. மின்னலடித்தது.

இயற்கை சொல்லிவைத்தா பெய்யும்? சொல்லாமல் கொள்ளாமல் எதிர்பாராத நேரத்தில் பெய்யும். அதனால் பல நூற்றுக்கணக்கானோர் நனைந்துபோயினர். முன்கூட்டியே தெரிந்திருந்தால் குடையுடன் தற்காப்பாக நடமாடியிருப்பர்.

முற்றாக நனைந்த பல பல நூற்றுக் கணக்கானோர் போக, மழை காரணமாக நோயில் வீழ்ந்தோர் தொகையும் பற்பல நூறுகளை தாண்டுகிறது.

விட்டு விட்டு பெய்யும் மழையால்தான் பாதிப்பு அதிகம். நோய் நொடி பரவுவதும் இந்த மழையால்தான்!

முன்னர் பெய்த மழைகளைவிட பாரிய துன்பம் தந்துள்ள மழை சமீபகால மழைதானாம். பெருமழை என்று அழைக்கலாம். ஓயாத அலைகள் தெரியும்தானே! கப்பலையும் கவிழ்க்கும்! ஓயாத அலைகளைவிட மோசம் ஓயாத மழை.

முன்பெல்லாம் வன்னி நிலை வேறு. இப்போது வன்னி நிலை வேறு. போர்க்கோலம் பூகோள நிலையையும் பூமியில் வாழ்வோர் நிலையையும் மாற்றியுள்ளது.

அதனால்தான் மழையில் உக்கிரம். மழையால் மாபெரும் சேதம் என்றுகூறத் தோன்றுகிறது.

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை. மழையும் நினைக்காத நேரத்தில் பொழிந்து நினைப்பை கெடுக்கும்.

யாழ்ப்பாணத்திலும் மழை இடைக்கிடையே மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கிறது. கொட்டவில்லை.

கொழும்பில் நினைத்தால் வருகிறது. நினைத்தால் போகிறது. சோதனை அரண், பாஸ், பதிவு, கிராம சேவகர் அத்தாட்சி எல்லாவற்றுக்கும் தண்ணிகாட்டுவது மழைதான். இத்தோடு இயற்கை ஆய்வை நிறுத்திக் கொள்வோம்.

□□□

## ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி படை நிலைகள் மீதான மூன்றாவது தாக்குதல்! சமரின் உக்கிரம் அதிகம்!

நாரதர்

யாழ்ப்பாணத்தில் புளொட், படைமோதல்.

சாவகச்சேரியில் புளொட் முகாம் எதிரே காவலரண் ஒன்றுள்ளது. புளொட் முகாமுக்குள் மாடு ஒன்று புகுந்தது. அதனை விரட்டிக் கொண்டு தெருவுக்கு வந்த புளொட் உறுப்பினர் துப்பாக்கி வைத்திருந்தார்.

புலிகள் புகுந்தால்தான் துப்பாக்கியை பயன்படுத்த அனுமதி. மாடு புகுந்தாலும் துப்பாக்கியை தூக்குவதா? என்று நினைத்தோ என்னவோ, காவலரணில் நின்ற சிப்பாய் "உள்ளே போ! துப்பாக்கியுடன் வெளியே நில்லாதே!" என்று எச்சரித்திருக்கிறார்.

புளொட் உறுப்பினருக்கு கோபம் வந்திருக்கிறது. சொல்லிய முறை பிடிக்கவில்லை. வாய்த்தர்க்கம் வளர்ந்திருக்கிறது.

காவலரணில் நின்ற சிப்பாய்கள் இருவரும் இறங்கிவந்தனர். குறிப்பிட்ட உறுப்பினர் தமது முகாமுக்குள் செல்ல, சிப்பாய்கள் பின்தொடர்ந்தனர்.

முகாமுக்குள் இருந்த புளொட் பிரமுகர் அன்ரன் சிப்பாய்களை நோக்கி: "உள்ளே வரவேண்டாம்!" என்று கூறியுள்ளார். மீறி உள்ளே பிரவேசிக்க, துப்பாக்கியை எடுத்து சுட்டுள்ளனர். முன்னால் வந்த சிப்பாய்க்கு தலையிலும், அடுத்தவருக்கு நெஞ்சிலும் சூடு விழுந்திருக்கிறது.

சூடு நடத்திய பின்னர்தான் புளொட் உறுப்பினர்களுக்கு தாங்கள் செய்த காரியத்தின் விளைவு விபரீதமாகப் போகிறது என்பது விளங்கியுள்ளது.

தமது முகாமைவிட்டு அனைவரும் தப்பி ஓடினார்கள்.

விஷயம் அறிந்து முகாமை முற்றுகையிட்டனர் படையினர். சூழ உள்ள பகுதிகளில் தேடியபோது இரண்டு புளொட் உறுப்பினர்கள் பிடிபட்டனர்.

அவர்களை பிடிபட்ட இடத்திலேயே வைத்து தாக்கியதுடன் 'ஏனையோர் எங்கே?' என்று சொல்லுமாறும் கேட்டனர்.

கச்சாய் வீதியில் உள்ள தர்மேஸ் வீட்டில் தங்கள் உறுப்பினர்கள் நிற்பதாக புளொட் உறுப்பினர் ஒருவர் கூறினாராம்.

அதனையடுத்து கச்சாய் வீதியில் உள்ள தர்மேஸ் வீடு முற்றுகையிடப்பட்டது.

செல்வராசா தர்மேஸ் புளொட் ஆதரவாளர். எப்போதாவது புளொட் முகாமுக்கு செல்வதுண்டு. புளொட் உறுப்பினர்கள் அவரது வீட்டுக்கு செல்வார்கள். மற்றப்படி புளொட் நடவடிக்கைகள் எதனுடனும் தொடர்புடையவரல்ல.

தர்மேஸ் வீட்டில் புளொட் இயக்கத்தினர் யாரும் இருக்கவில்லை. தர்மேஸ்தான் குளித்துக்கொண்டு நின்றார். இராணுவத்தினரைக் கண்டதும் பயத்தில் வீட்டுக்குள் ஓட முற்பட, அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அந்த இடத்திலேயே பலியானார்.

தர்மேசுக்கு 18 வயது. புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்து கச்சாய் வீதியில் வசித்தவர். சந்தையில் வியாபாரி. (இவர் மாணவர் என்று நக்கீரன் பகுதியில் தவறுதலாக இடம்பெற்றுள்ளது.)

தர்மேஸ் கைக்குண்டை தம்மீது எறிய முயன்றதால் சுட்டதாக படையினர் செய்தி கொடுத்துள்ளனர்.

இச்சம்பவங்கள் நடந்துகொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் வேட்டுச் சத்தம் கேட்ட பகுதி நோக்கிச் சென்றனர்.

சாவகச்சேரி மருத்துவமனையின் பின்புறமாக செல்ல முற்பட்ட அவர்கள்மீது சந்தேகப்பட்ட படையினர் வழிமறித்துள்ளனர். அவர்கள் ஈ.பி.டி.பி. அடையாள அட்டையை காண்பித்தனர்.

அடையாள அட்டையை கிழித்து முகத்தில் எறிந்துவிட்டு, இருவரையும் தாக்கினார்கள். அதில் ஒருவர் மட்டும் எப்படியோ தப்பி ஓட, மற்றவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் பெயர்: செல்வம் நந்தகுமார். ஈ.பி.ஆர்.எல்.எ.்ப் உறுப்பினராக இருந்து கடந்த ஆண்டுதான் ஈ.பி.டி.பி.யில் சேர்ந்தார். பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினரானார்.

புளொட் அன்ரன்தான் ஈ.பி.டி.பி. உறுப்பினரை சுட்டார் என்று யாழ் படைத் தலைமையகம் கூறியுள்ளது.

சுடப்பட்டது மட்டுமல்ல பலியானவர் உடலில் பலத்த அடிகாயங்களும் உள்ளன. அன்ரன்தான் அடித்தார் என்றும் ஏன் கூறாமல் விட்டார்கள்?!

படைத்தரப்பு புளொட்டை குற்றம் சாட்டுவதை ஈ.பி.டி.பி. மறுத்துள்ளது. படையினரே சுட்டனர் என்று கூறியுள்ளது. அதற்கு சாட்சியாக தப்பிய உறுப்பினரும் உள்ளார்.

படைத் தலைமை நடவடிக்கை எடுக்க நினைத்தால் அடையாள அணிவகுப்பு நடத்தியிருக்கலாம். செய்யவில்லை.

ஏனைய தமிழ்க் கட்சிகள் வாய் திறக்கவில்லை. புளொட் படையினருடன் மோதிய சூழல் சரியா தவறா? என்பதில் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கக்கூடும்.

ஆனால், மோதலின் பின்னர் படையினர் மேற்கொண்ட அணுகுமுறையை நிச்சயம் கண்டித்திருக்க வேண்டும்.

புளொட்டும் படையும் மோதினால், அதனைவைத்து படையினருடன் தாம் நல்ல பெயர் எடுக்க இன்னொரு கட்சி விரும்பும். கோள் கூறும். இதுதான் யதார்த்த நிலை. வாய் திறவாமையின் இரகசியமும் அதுதான்.

# அதிரடி அய்யாத்துரை



**பாலூட்டி வளர்த்த 'கிளி'** பழம் கொடுத்து பார்த்த 'கிளி' பறந்து போய், மீண்டும் முழுதாக கைக்குள் விழுந்த சந்தோசத்தில் இருக்கினமாம் ரெண்டு எழுத்தார்.

**"சிவபாலன் சிந்திய** இரத்தத்தில் இருந்து பல சிவபாலன்கள் தோன்றுவர்" என்று கூட்டான கட்சி சங்கதியார் மீசையை முறுக்கினவராம். கிட்டத்தட்ட 25 வருடத்திற்கு முன்பு இதே வாயால், "சிவகுமாரன் மறைந்தாலும் பல சிவகுமாரன்கள் தோன்றுவார்கள்" என்று கூறினவையல்லோ? சிவகுமாரன் துரையப்பாவைச் சுடத் தேடித் திரிந்தவர். உரும் பிராய் நடராசாவுக்கு குண்டெறிந்தவர். (நடராசா சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்) அப்படியாகப்பட்ட சிவ குமாரன்கள் தோன்றவேண்டும் என்று தான் விரும்பினவை அன்று. ஆனால் இன்று? சிவகுமாரன், சிவபாலன் இரண்டு பெயரிலும் அர்த்தம் ஒன்றுதான். பணிதான் வேறுபாடு!

**மறைந்த குடாநாட்டு** நகர தலைவரும், சங்கதியானவரும் மலையகம் சென்றவையாம். நகரத் தலைவர் யாழ்செல்வதற்கு சிலநாட்கள் முன்னர் நடந்த சம்பவம் இது. அவர்களுடன் பேசிய ஒருத்தர் கேட்டாராம், "அப்படியானால் இனப்பிரச்சனை எப்போது தீரும் என்று நினைக்கிறீர்கள்?" இரண்டு எழுத்துத் தலைவரின் பெயரைக் குறிப்பிட்டு "அவர் எப்போது போய்ச் சேருகிறாரோ அப்போதுதான் தீரும்!" என்று பதில் சொல்லப்பட்டதாம். உள்மன ஆசை புரியுதல்லோ!

**நிறத்துக்குச் சொந்தக்காரப்** பிரதிநிதி 'லோ' காட்டப்பார்க்கிறார். மேலிட நல்லெண்ணம் பெறுவதற்கு பாலகரை பலிக்கடாவாக்கியதே அவர்தான். இப்போது "நாங்கள் புது ஆள்போடமாட்டோம்!" என்று நல்ல பிள்ளைக்கு நடிக்கிறார். ஏதோ மற்ற சகாக்கள்தான் ஒற்றைக்காலில் நிற்பதுமாதிரியல்லோ காட்டிக்கொடுக்கிறார்! சகாக்கள் புரிந்து கொண்டால் சரிதான்.

**அம்மையார் நியுயோர்க்** செல்லும்போது, அங்கு அவரது உரைகளை 'கவர்' பண்ண புறப்பட்டார் ஒரு பத்திரிகையாளர். சாதாரண பத்திரிகையாளரல்ல. பிரபல ஏரிக்கரை ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர். புறப்படும் நாளன்று போத்தலைத் திறந்தவர் முசப்பாத்தியில் மூழ்கிப்போனார். வெளிச்சபிறகு நேரம் பார்த்தவர் திடுக்கிட்டு விட்டார். விமானம் புறப்படும் நேரம் கடந்து பல மணிநேரமாகிவிட்டதாம். இவர் ஒருவிதமாக அடுத்த விமானத்தைப் பிடித்து போய்ச் சேருவதற்கு இடையே அம்மையாரின் சபை உரையும் முடிந்துவிட்டதாம்.

**தலைநகர புதிய வானொலியில்** முக்கிய பங்காளர் தலைவியின் வெகுஜன தொடர்பாளர்தானாம். கலையுலக தொடர்பு உள்ளவர் என்பதால் ஜனரஞ்சக வானொலி சேவை தொடங்க விரும்பினாராம். அரச வானொலியில் வெகுஜன நம்பிக்கை குறைந்துபோய்விட்டது. சில தனியார் வானொலிகள் சேதமும் ஏற்படுத்துகின்றன. அதனையெல்லாம் தகுந்த நேரத்தில் முறியடிக்கத்தான் பவர்ஃபுல் பிரகாசமாக புதியதை உருவாக்கியுள்ளனராம். ஆனால் தற்போதைக்கு நம் பார்வையில் பொழுதுபோக்காக போகிறது. பக்கச்சார்பின்றி சேவை தொடர்ந்தால், யார் நடத்தினால் என்ன, மனம் திறந்து பாராட்டலாம்!

**'கிரிக்கெட்** விளையாடி தோற்று, யாழ்ப்பாண அணியை வீழ்த்திவிட்டோமாக்கும்!' என்று சந்தோசம் கொடுப்பதற்காக தலைநகர் வந்துபோகுது யாழ் அணி. இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து அணி வரவேற்கப்பட்டது. பிறிதொரு நாட்டு அணிதானே விமான நிலையத்தில் வரவேற்கப்படுவது வழக்கம்?

**யாழ் பயண சேவை** பறவை நிறுவனம் இரண்டும் அண்மையில் தீவிரமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தவையாம். சீருடையினரை இனிமேல் ஏற்றிச் செல்வதில்லை என்பதுதான் முடிவாம். இரகசியமாக ஏற்றிச் சென்ற விபரம் ரெண்டு எழுத்தாருக்கு எப்படி எட்டியது என்பதுதான் ஆச்சரியமாம்.

**ரெண்டு எழுத்தாரை** கண்டித்து அறிக்கை விடுவதில் இன்று முன்னணியில் நிற்கும் தமிழ்க் கட்சி புரட்சிகரமான முன்னணிதான். யாழில் ஒரே கூட்டில் உள்ள கழகம்மீது நடந்த தாக்குதலுக்கோ, ஜனநாயக கட்சி உறுப்பினரும், மற்றொரு பொதுமகனும் பலியானதுக்கோ மூச்சுக்கூட காட்டவில்லை. சம்பந்தப்பட்டவைகூட கண்டிக்கவில்லையே என்று சொல்லலாம். மற்ற விஷயங்களில் மட்டும் முந்திக்கொண்டு தானே அறிக்கை பறக்கவிடுகிறவை.

**மீன்பாடும் தேனாட்டின்** நகரத்தில் ஒரு உறுப்பினர் செய்யும் அட்டகாசம் தாங்க முடியவில்லையாம். ரெண்டு எழுத்துத் தலைவரின் பெயர் தனக்கும் இருப்பதைச் சொல்லியே ஆடுகிறாராம். அவரது கைத்தடிகள் சிலர் மக்களிடம் வரம்புமீறி நடக்க, மக்கள் உதைக்க துரத்தினார்களாம். அவர்களை மரத்தடியில் போய்ப்படுக்கச் சொன்ன உறுப்பினர், "பார்த்தியளோ நான் கொடுத்த அடியில் முறிந்துபோய்க் கிடக்கிறார்கள்!" என்று கூறினாராம்.

**திருவானமலை** நகர சூரியரின் ஊழல்களை உறுதிப்படுத்தி விசாரணைக்குழு அறிக்கை கொடுக்க, ஆளுநர்தான் வெளியேவிடாமல் வைத்திருக்கிறாராம். நகரத்தலைவருக்கும் அவருக்கும் அப்படியொரு நெருக்கம். கல்விக்குப் பொறுப்பான அதிகாரியின் ஊழல்களை கண்டிப்பதை வரவேற்கிறோம். நகரத்தின் சூரியரின் ஊழல்களை மட்டும் மறைப்பது ஏனோ? வருத்தப்படுகிறோம்!

**இவ்வாரப் பொன்மொழி** (ஜோஷ் பில்லில்ஸ்)

"புத்திமதி
விளக்கெண்ணெய்
போன்றது!
அதனைக் கொடுப்பது
சுலபம்!
குடிப்பது
மிகவும் கஷ்டம்!"

■



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

201

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

யாழ்ப்பாணம் செம்மணி புதை குழிகள் இரகசியமாக தோண்டப்பட்டு இருக்கலாமோ? அங்குள்ள தடயங்கள் மறைக்கப்பட்டு இருக்கலாமோ? என்ற சந்தேகம் பரவலாகி இருக்கிறது.

இத் தொடரில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலைகள் பற்றிய தகவல்களை படித்த பின்னர் சத்துருக்கொண்டான் அனுபவம் செம்மணியிலும் பின்பற்றப்பட்டுள்ளதோ என்று சந்தேகம் வலுப்பெற்றுள்ளதாக பல நண்பர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

1990 ஜூன் மாதம் 10ம் திகதி சத்துருக்கொண்டானில் படுகொலையான பலர் இன்றுவரை காணாமல் போனோர் பட்டியலில்தான் இருக்கின்றனர்.

"செம்மணிப் புதைகுழி விவகாரம் அம்பலமாகிவரும் இத்தருணத்தில் சத்துருக்கொண்டான் படுகொலைகள் பற்றிய தகவல்கள் வெளியானது மிகப் பொருத்தமே. ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பது ஆதாரபூர்வமாக அம்பலமாகிறது" என்று பலரும் கடிதங்கள் மூலம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே கிழக்கு மாகாணத்திலுள்ள வணபிதா ஒருவர் உட்பட சிலர் தொடர்பு கொண்டு பற்றீஷியா லோறன்சின் கடிதத்தை முழுமையாக பிரசுரிக்கத் தவறி

# கிணறுகளில் மிதந்த பிணங்கள்

விட்டதாக கூறினார்கள். அமெரிக்காவில் இருந்து வந்த மனித வர்க்கவியல் ஆய்வாளரான பற்றீஷியா லோரன்ஸ் என்ற பெண்மணி 1991 முதல் 94 வரை மட்டக்களப்பில் தங்கியிருந்தவர்.

மட்டக்களப்பு மக்களின் விருந்தோம்பலில் தன் மனதைப் பறிகொடுத்தவர்.

சத்துருக்கொண்டான் படுகொலைகள் தொடர்பான உண்மைகளைப் பேச முடியாத பயங்கர சூழ்நிலையிலும், பற்றீஷியா மட்டுமே துணிந்து நின்று, தான் அறிந்த உண்மைகளை அறிக்கையிட்டார்.

அவரது அறிக்கையை முழுமையாக பிரசுரித்தால்தான் திடுக்கிடும் உண்மைகள் அம்பலமாகும் என்பது அவர்கள் கூறிய கருத்து.

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோருக்கான ஜனாதிபதி ஆணைக்குழுத் தலைவரான ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.பாலகிட்னருக்கு பற்றீஷியா லோரன்ஸ் எழுதிய கடிதத்தின் மிகுதிப் பகுதி இதோ:

## சிக்கிய புடவை

சத்துருக்கொண்டானில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான தகவல்கள் பரவியதால் கேணல் பேர்சி பெர்னாண்டோவுடன், தப்பி வந்த 21 வயது இளைஞனும் மட்டக்களப்பு சமாதான சபையைச் சேர்ந்த ஒருவருமாக- 1990 ஜூன் 10ம் திகதி சத்துருக்கொண்டானுக்குச் சென்றனர்.

குறிப்பிட்ட படுகொலைக்குட்படுத்தப் பட்டவர்களின் சடலங்கள் எங்கே வீசப்பட்டன என்பதை நிர்ணயிக்கவே இவர்கள் அங்கு சென்றார்கள். அவ்விளைஞன் ஏற்கனவே தாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட காயங்களினாலும் பல கொடூரச் சம்பவங்களை நேரடியாகவே பார்த்தமையினாலும் மனம் பேதலித்த நிலையிலிருந்தான்.

இதனால் அவனால் எந்த இடத்தையும் சரியாகச் சுட்டிக் காட்ட முடியவில்லை. ஆகவே அவனால் கூறப்பட்ட எத்தகைய சம்பவமும் அங்கு நடைபெற்றமைக்கான ஆதாரங்கள் இருக்கவில்லை என்று சமாதான சபை உறுப்பினரைக் கொண்டு இராணுவ அதிகாரி ஓர் அறிக்கையினை ஒப்பமிட்டுப் பெற்றுக் கொண்டார்.

இவ்வறிக்கையில் ஒப்பமிட்டவரான சமாதான சபையின் தலைவராகவிருந்த திரு.ரி.அருணகிரிநாதன் தமது தலைமைப் பதவியிலிருந்து உடன் விலகினார்.

ஓரளவு பலவந்தமாகப் பெறப்பட்ட கையொப்பத்தைத் தொடர்ந்து சத்துருக்கொண்டான் 'சிறுவர் இல்ல' இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளாகத் தொடர்ந்து பதவிவகித்த மூன்று அதிகாரிகளும்கூட அங்கு படுகொலைகள் நடைபெறவேயில்லை என்று தொடர்ந்து கூறுவதற்கான காரணமாகிவிட்டது.

இச்சம்பவம் நடைபெற்ற அடுத்த வருடம் உயிருடன் தப்பியிருந்த மக்கள் அகதி முகாம்களிலிருந்து தத்தமது வீடுகளுக்குச் சென்று குடியேறத் தொடங்கினர்.

அப்போது அவர்களுக்கு மற்றுமொரு புதிய சிக்கலை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. சத்துருக்கொண்டானில் குடியேறியவர்களில் ஒருவர் தனது வீட்டு வளவிலிருந்து குடிநீர்க் கிணற்றைத் துப்புரவு செய்ய முயன்றார். ஒரு தடியினை கிணற்றுள் செலுத்தியபோது அதில் ஒரு புடவை சிக்கியது. தொடர்ந்து ஒரு மனித எலும்புக் கூடும் தட்டுப்பட்டது. இதே போன்று அங்கிருந்த பல கிணறுகளுக்குள் ஏற்கனவே கொலை செய்யப்பட்டோரின் சடலங்களும் எலும்புக் கூடுகளும் கிடந்தன.

கிராமசேவகர் மூலமாக உதவி அரசாங்க அதிபருக்கும் பின்னர் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கும் முறைப்பாடுகள் அனுப்பப்பட்டன. அக்கிணறுகளை உடனடியாக மூடிவிடுமாறு ஆலோசனை கூறப்பட்டது.

அக்கால கட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் நிலவிய பயம் காரணமாக பல உண்மைச் சம்பவங்கள் வெளிப்படமுடியவில்லை. ஆயுதப் படையினர் பற்றிய குற்றச் சாட்டுக்களை வெளியிட்டால் அவர்களால் மென்மேலும் ஆபத்துக்கள் தங்களுக்கு ஏற்படக்கூடும் என்று அவர்கள் அஞ்சினர். குடி தண்ணீர்க் கிணறுகள் பற்றிய உண்மைகள் வெளியுலகுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டதற்குமாக முக்கிய காரணம் இதுதான்.

கிணறுகளுக்குள் குறிப்பாக பெண்களின் சடலங்கள் அதிகமாகக் காணப்பட்டமைக்கான காரணம் எதுவாக இருக்கலாம் என்று அம்மக்களிடம் கேட்டேன். அவர்கள் இரு காரணங்களைச் சொன்னார்கள்:

(அ) கொலை செய்தவர்கள்-கொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை மறைப்பதற்காக- அல்லது -

(ஆ) பாலியல் வல்லுறவுக்குப் பயந்து தற்கொலை செய்திருக்கலாம்.



## ஆண்கள் இல்லை

சத்துருக்கொண்டான், கொக்குவில், பன்னிச்சையடி மற்றும் பிள்ளையாரடி ஆகிய கிராமங்களில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் மிகவும் வறியவர்கள். தங்கள் அன்றாட உணவுக்காக உழைத்து வந்த ஆண்களைப் பறிகொடுத்துவிட்ட நிலையில் வாழ்க்கை நடத்துவதற்கே பெரும் கஷ்டப்பட்டனர். வன்முறை காரணமாக இறந்தவர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக- உண்மையான காரணங்களைக் கூறினால் இராணுவத்தினரின் தாக்குதலுக்குட்பட வேண்டிவரும் என்பதற்காக, மோதல்களின்போது தற்செயலாகத் தாக்குண்டு இறந்து போனார் என்பது போன்ற காரணங்களைக் காட்டினார்கள். இதனாலும் படையினரின் நீதிக்குப் புறம்பான நடவடிக்கைகளில் இறந்தமைக்கான பல ஆதாரங்கள் இல்லாமற் போய்விட்டன.

# தெரு ஓரத்தில் உயிருடன் எரிந்தனர்

படுகொலைகள் நடைபெற்ற சத்துருக்கொண்டானில் சில இடங்களில் குழிகள் தோண்டப்பட்டு அங்கிருந்து எலும்புகளை படையினர் சேகரிப்பதைத் தாங்கள் கண்டதாக, 1994 மே மாதத்தில் சில தன்னாமுனைவாசிகள் கூறினர். (இரு கிராமங்களுக்குமிடையில் ஒருமைல் தூரம்கூட இருக்காது. கிராமங்களுக்கிடையில் எல்லையாக இருப்பது பரந்த வயல்கள். இதனால் ஒரு கிராமத்தில் நடப்பதை மற்றக் கிராமத்திலிருந்து பார்த்தால் கண்டு கொள்ள முடியும்)

இவ்வாறு சேகரிக்கப்பட்ட எலும்புகளின் குவியல்கள் இருதடவைகள் எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்.

## மறக்க முடியுமா?

சத்துருக்கொண்டானில் 'காணாமற்போனவர்கள்' தொடர்பாக மேற்கொண்டு விசாரணைகள் ஏதாவது நடத்தப்பட்டதா, என்று அப்பதவிக்கு அப்போது நியமிக்கப்பட்டிருந்த பிரிகேடியர் ரோஹன் குணவர்த்தனவிடம் கேட்கப்பட்டது.

மனித உரிமைகள் இயக்க நடவடிக்கையாளர்களே இவ்வினாவை எழுப்பினர்,

மட்டக்களப்பிலுள்ள குறிப்பிட்ட முகாமில் அத்தகைய கொலைகள் எதுவும் நடந்ததாக-தான் அறிந்தமட்டில்- ஆதாரமில்லை என்று கூறிவிட்டார். அத்துடன் ஓர் அறிவுரையையும் பிரிகேடியர் தெரிவித்தார். "பழையனவற்றை மறப்போம், இனிமேல் நடக்க வேண்டியவற்றைக் கட்டியெழுப்புவோம்!"

வரலாற்று ரீதியான உண்மைகள் பலவற்றை மறுப்பதற்கான அதிகாரம் பிரிகேடியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் இத்தகைய கொடுமைகளை அனுபவித்த மக்களின் நினைவுகளிலிருந்து அவை மறைந்து போகப் போவதில்லை.

தன்னாமுனை போன்று இலங்கை முழுவதும் பல கிராமங்களில் எத்தனையோ கொடுமைகள் நடைபெற்றுள்ளன. இவற்றை அனைத்து மக்களும் அறியக் கூடியதாக இருந்தால், இனிமேல் வரப்போகும் காலங்களிலாவது இக்கொடுமைகள் நடைபெறாமலிருப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்படலாம்.

ஏராளமான அப்பாவிப் பெண்களையும் சிறார்களையும் வயதானவர்களையும் சத்துருக்கொண்டானில் கொன்று குவித்த நீதிக்குப்புறம்பான நடவடிக்கைகளுக்கான உண்மைகள் மறைக்கப்பட்டு வருகின்றன.

அகதிகளை தன்னாமுனையிலுள்ள கத்தோலிக்க கன்னிகாஸ்திரிகள் பாதுகாத்து வந்துள்ளனர். சத்துருக்கொண்டான் படுகொலைகளுக்கான ஆதாரங்களை இவர்கள் கண்டிருக்கிறார்கள். (16 வருடங்களாக மூடப்பட்டுக் கிடந்த சத்துருக்கொண்டான் கண்ணகை அம்மன் கோவில் 1995 மார்ச் மாதம் மீண்டும் திறக்கப்படவுள்ளது) இவ்வாலய பக்தர்களும்சிலரும் ஆதாரங்களைக் கண்டுள்ளனர். இவர்களை அணுகி உண்மையான ஆதாரங்களைப் பெறுமாறு நான் ஆலோசனை கூறுகிறேன்.

## கண்ணகி வழிபாடு

இலங்கையிலும் உலகின் வேறுபல பாகங்களிலும் பத்தினி கண்ணகி வழிபாடு வரலாற்று ரீதியாக பரம்பரை பரம்பரையாக நிலவிவரும் பண்பாடாகும். இலங்கையில் தமிழர்களும் சிங்கள மக்களும் கண்ணகியைப் பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

களத்தில் நான் எனது ஆய்வுகளை மேற்கொண்டிருந்த காலத்தில் ஏழ்மை நிலையிலுள்ள ஒரு பெரிய சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்த அரசுபடைச் சிப்பாய் ஒருவரை அடிக்கடி காண நேர்ந்தது.

இவர் மட்டக்களப்பிலுள்ள பல கிராமங்களில் பணியாற்றிவரும் காலத்தில் ஆங்காங்கேயிருந்த கண்ணகி ஆலயங்களில் சென்று வழிபாடியற்றி அம்மன் பக்தராகியிருந்தார்.

இவ்வாலயங்களில் இரவிலோ பகலிலோ நடைபெறும் பூசைகளில் இவர் கலந்து வருவதை நான் அவதானிக்க நேர்ந்தது. தமிழ் மக்களும் இவரை மிக்க மரியாதையுடன் நடத்துவதையும் கண்டிருக்கிறேன். இவர் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டுள்ள நட்புறவைக் குறிப்பிடுவதுடன் எனது சுயாதீனமான இவ்வறிக்கையினை- மிக்க மரியாதையுடன்- பின் வரும் சில வார்த்தைகளுடன் சமர்ப்பிக்கிறேன்:

உடன்பாடெதுவுமில்லாமல் கைதாகி காணாமல் போய்விட்ட பலருடைய விபரங்களை விசாரித்தறிய ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் குழுவுக்குப் பொறுப்பாகக் கடமையேற்றிருக்கும் தங்களுக்கு, சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் பத்தினி அம்மனுடைய கருணை எப்போதும் பொழிய வேண்டுகிறேன்.

அம்மன் ஆலயத்தின் அருகிலுள்ள குளத்தருகில் தங்கள் உயிர்களை இழந்தவர்களை நினைவுகூரும் ஒரு நினைவுச் சின்னத்தை சிறிலங்கா அரசாங்கம் அமைக்கவேண்டும். இந்த எண்ணம் அப்பகுதியில் வாழும் மக்களின் கருத்தில் தோன்றியதாகும்; இருப்பினும் எனது எண்ணமும் அதுவாகவே உள்ளது.

ஒப்பம்: பற்றீஷியா லோறன்ஸ்

## அம்பாறையில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல, கிழக்கில் அம்பாறை மாவட்டத்திலும் தமிழர்கள் மீது படுகொலைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அம்பாறையை தமிழர் தாயகத்தில் இருந்து பிரித்தெடுக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக அங்குள்ள தமிழர்களை விரட்டியடிக்கும் ஆக்கிரமிப்பு எண்ணமும் இக் கொலைகளின் பின்னணியில் இருந்திருக்கலாம்.

அம்பாறை மாவட்ட எம்.பி.களில் ஒருவராக இருந்தவர் பி.தயாரத்ன. வடக்கு-கிழக்குப் பிரிப்பில் தீவிரமாக நின்றதுடன், கிழக்கில் அம்பாறை உட்பட தமிழர் நிலங்கள் பறிக்கப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வமாக இருந்தவர் தயாரத்ன.

புனர்வாழ்வு அமைச்சராக பதவி வகித்த தயாரத்ன, அம்பாறையில் புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களுக்கு உதவினார். அள்ளிக்கொடுத்தார்.

இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமான பின்னர் அம்பாறையில் 'பச்சைப் புலிகள்' என்ற பெயரில் படையினர் அத்துமீறல்களில் ஈடுபட்டனர்.

அம்பாறை கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட 'பச்சைப் புலிகள்' என்னும் படையினர் மல்வத்தை, மல்லிகைத்தீவு, கணபதிபுரம் போன்ற தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து வெறியாட்டம் நடத்தினார்கள்.

பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர். ஏனையோர் உயிர் தப்பிக் கொள்வதற்காக வீரமுனை என்ற கிராமத்துக்கு ஓடினார்கள். அங்கு உறவினர் வீடுகளிலும், பாடசாலை கட்டடங்களிலும், கோவிலிலும் தங்கினார்கள்.

## கண்ணில் குத்து

அங்கும் ஆபத்து தேடி வந்தது. 21.06.90 அன்று சம்மாந்துறைக் கிராமம் ஊடாக வீரமுனைக்குள் புகுந்த (பச்சைப் புலிகள்) படையினர் கிராம மக்களை தாக்கினார்கள்.

கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். அதில் பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர்.

வீரமுனை கிராம மக்களையும், அக்கிராமதுக்குள் புகலிடம் தேடி ஓடி வந்தவர்களையும் ஒரே இடத்திற்கு அழைத்த படையினர், அவர்களில் திடகாத்திரமான 65 இளைஞர்களை தனியாகப் பிரித்தெடுத்தனர்.

அத்தனை இளைஞர்களும் ஆண்டிச் சந்தி என்ற அழைக்கப்படும் வீரமுனைச் சந்திக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அச்சமயம் மல்வத்தையில் இருந்து இரண்டு தமிழ் இளைஞர்கள் சைக்கிளில் வந்தனர்.

அவர்களைப் பிடித்திழுத்த படையினர் அவர்களது சட்டைகளை கழற்றி, அவற்றினால் கைகளை பின்புறமாக கட்டினர். தங்களிடம் இருந்த கத்தியால் அவர்களது கண்களில் குத்தினர்.

கண்களில் இரத்தம் வடிய நின்ற இரண்டு இளைஞர்களையும் ஓடுமாறு கூறினர்.

அவர்கள் ஓடியபோது பின்பக்கமாக நின்று பாறாங்கல்லினால் எறிந்து வீழ்த்தினர்.

அரை உயிருடன் கிடந்த இருவரும் தெரு ஓரத்தில் டயர் போட்டு எரிக்கப்பட்டனர்.

இந்த கொடூரக் காட்சியை கைதான 65 பேரும் தம் கண்களால் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இரண்டு இளைஞர்களும் எரியுண்ட புகை கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 65 பேரினதும் முகத்தில் படுமாறு நிற்கவைக் கப்பட்டனர்.

உயிருடன் எரிந்து கொண்டிருந்த இரு இளைஞர்களும் 'அம்மா...' என்று முனகியபடியே சாம்பலானார்கள்.

இறுதியாக மாலை 4 மணி அளவில் ஆண்டிச் சந்திக்கு விரைந்த இராணுவப் பொறுப்பதிகாரியினால் 65 பேரும் விசாரணை செய்யப்பட்டனர்.

## தலையாட்டி

லொறி ஒன்றின் முன் இருக்கையின் நடுவே கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒருவரை கொண்டுவந்தனர்.

அவர் முன்பாக 65 பேரும் நிறுத்தப்பட்டனர். பின்னர் 10 பேர் விடுவிக்கப்பட்டனர். மீதி 55 பேரையும் லொறியின் பின்னால் அடித்தும் உதைத்தும் ஏற்றினார்கள்.

அவர்கள் 55 பேரும் இயக்கத் தொடர்பில்லாத அப்பாவிகள். குடும்பஸ்தர்கள்.

அவர்களில் கணேசமூர்த்தி ஆசிரியரும், கந்தன் என்பவரும் சகோதரர்கள்.

கணேசமூர்த்திக்கு திருமணமாகி ஒருமாதம்கூட ஆகியிருக்கவில்லை.

லொறியில் கொண்டுவரப்பட்டு தலையாட்டியவரின் பெயர் சிவானந்தன். இவர் புலிகளது ஆதரவாளராக இருந்தவர். பின்னர் காரைதீவு அதிரடிப்படை முகாமில் உதவியாளராக வேலைக்கு சேர்ந்தார்.

அன்று கைது செய்து கொண்டு செல்லப்பட்ட 55 பேரும் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

வளதாப்பிட்டியில் உள்ள வீடொன்றில் வைத்து 55 இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக பின்னர் கூறப்பட்டது.

இக்காலகட்டத்தில் படையினரால் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் சிலர் முஸ்லிம் தீவிரவாதக்குழுவால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

## சூடு

புலிகள் இயக்க சம்மாந்துறை முக்கியஸ்தர் ஏ.சி.முகமட். அவரும் படையினருடன் இணைந்து செயற்படத் தொடங்கினார்.

வைத்தியசாலை வீதியில் முகமட்டின் வீடு இருந்தது. அங்கு சென்ற புலிகள் முகமட்டை சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவத்தின் பின்னர் சம்மாந்துறை முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் சிலர் தமிழர்களைத் துன்புறுத்தினர். சம்மாந்துறை தீகவாபி சந்தியில் வைத்து தமிழர்கள் சிலரை அடித்தே கொன்றனர் ஊர்காவல் படையினர்.

சம்மாந்துறை முஸ்லிம் மக்கள் பலர் இச் செயல்களை கண்டித்தபோதும், ஊர்காவல் படையினரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாமல் இருந்தனர்.

ஒருநாள் இரவு, சம்மாந்துறைக்குள் புகுந்த புலிகள் ஊர்காவற் படையினர்மீது தாக்குதல் நடத்தினர். பூமரத்தடி பள்ளி வாசல் அருகே நின்ற ஊர்காவல் படையினரையும் சுட்டுக்கொன்றனர்.

தாக்குதல் முடிந்து திரும்பும்போது முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான கடையொன்றையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் நடைபெற்ற மறுநாள் காலையில் நெல்லிக்காடு என்னும் வயலுக்கு சென்ற கலந்தன் வட்டை விதானை உட்பட சில முஸ்லிம்கள் புலிகளாலும், அவர்களது ஆதரவாளர்களாலும் கத்தியால் வெட்டி காயப்படுத்தப்பட்டனர்.

அதன்பின்னர் முஸ்லிம் ஊர்காவற்படையினரும், முஸ்லிம் தீவிரவாத குழுவும் படையினருடன் இணைந்து வீரமுனைக் கிராமத்தை முற்றுகையிட்டனர்.

ஒரே நாளில் மூன்று முறை இக்கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது.

200 பேர்வரையான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. வீரமுனை என்ற கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரையும் கூண்டோடு ஒழிக்கக்கூடிய கொடுமை.

வீட்டுக் கிணறுகளில் நஞ்சு கலக்கப்பட்டது!

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஐ.நா.சபையில் இலங்கைப் பிரச்சனை

## அலசுவது- இராஜதந்திரி

சமீபகாலத்தில் தென்னிலங்கையில் தோன்றியுள்ள புதிய சூழ்நிலை உற்று நோக்கப்படவேண்டியதாகும்.

மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து, ஆளும் தரப்புக்கு தோல்விப் பயம் பிடித்துக்கொண்டது என்ற அபிப்பிராயமே மக்களிடம் தோன்றியுள்ளது.

இத்தகைய அபிப்பிராயமானது அடுத்த தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக அமைந்துவிடும் என்று ஆளும் தரப்பு அஞ்சுகிறது.

எனவே தேர்தல் ஒத்திவைப்புக்கு தோல்விப் பயம் காரணமல்ல என்று சிங்கள மக்களை நம்பவைத்தாக வேண்டிய கட்டாயம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

யுத்தத்தில் புலிகளைத் தோற்கடிக்கும் இலட்சியவெறிதான் தேர்தல்கள் பின்போடப்பட்டமைக்கு காரணம் என்பதை பெரியளவில், பல்வேறு வழிகளில் பிரசாரப்படுத்த ஆட்சியாளர்கள் முன்வந்துள்ளனர்.

இப்பிரசாரங்களும், பாரியளவான புலி எதிர்ப்பு முழக்கங்களும் தேர்தல் பின்போடப்பட்டதில் இருக்கக்கூடிய பொதுஜன முன்னணியின் சொந்த அரசியல் இலாப நோக்கங்களை பின்தள்ளி மறைத்துவிடும் என்று நம்புகின்றனர்.

அரசின் இத்தந்திரத்தை புரிந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அதனை முறியடிக்கும் உபாயமாகவே "புலிகளுடன் நிபந்தனையின்றி பேசவேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அதேசமயத்தில் பேரினவாதிகளையும் படையினரையும் திருப்திப்படுத்தும் விதத்தில், "போர் நடந்து கொண்டிருக்கும்போதே பேச்சு நடத்தலாம். போரை நிறுத்துமாறு கூறவில்லை!" எனவும் தெரிவித்திருந்தார்.

ஏனெனில் நாளை பதவிக்கு வருவதற்கு ஐ.தே. கட்சிக்கும் பேரினவாத சக்திகளின் அனுசரணை தேவையாகும். பதவிக்கு வந்தால் இதே படையினரை வைத்துத்தான் அக் கட்சியும் போரைத் தொடரவேண்டி இருக்கும்.

'புலிகளுடன் அரசு பேசவேண்டும்' என்று எதிர்க்கட்சி கோரியதைவைத்தே அக்கட்சியை சிங்கள மக்களிடையே ஓரம் கட்டுவதற்கு துரித வியூகங்களை வகுத்தது பொதுஜன ஐக்கிய முன்னணி.

அதன் ஒரு கட்டமாகவே ஆட்சியைக் கவிழ்க்க புலிகளுடன் சேர்ந்து ஐ.தே.கட்சி சதி செய்வதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா வன்னியில் உள்ள மடுக்கோவில் சென்றுவந்ததை புலிகளுடன் முடிச்சுப்போட்டும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் பேட்டி வெளியாகியிருந்தது. அதனையும்கூட ஜெயலத் ஜெயவர்த்தனாவுடன் தொடர்புபடுத்தி பேசப்பட்டிருக்கிறது.

அப்பேட்டி இரண்டு சிங்கள நிருபர்களால் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டதாகும். இவ்வுண்மை ஆட்சியாளருக்கும் தெரியாமல் இருந்திருக்காது.

பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தவுடன் மடுக்கோவில் திருவிழாவுக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட ஆளும்கட்சி எம்.பி.கள் பலர் சென்றுவந்தனர். புலிகளுடன் பேசிவிட்டு வந்தனர்.

புலிகளையும், அவர்களது கட்டுப்பாட்டு நேர்த்தியையும் பாராளுமன்றத்திலேயே புகழ்ந்துரைத்தும் இருந்தனர்.

1989ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது புலிகளின் ஆதரவை நாடி வன்னிக்காட்டுக்கு சென்றவர்களும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரேயாகும்.

1986ல் மன்னாரில் படையினர்மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்திய புலிகள், கைப்பற்றப்பட்ட படையினரது உடல்களையும், கைப்பற்றிய ஆயுதங்களையும் யாழ்ப்பாணம் நல்லூரில் பார்வைக்கு வைத்திருந்தனர்.

அம்மோதல் நடந்த சூட்டோடு சூடாக யாழ் நகருக்கு விஜயம் செய்திருந்தார் விஜயகுமாரதுங்கா. புலிகளைப் பாராட்டியதுடன் யுத்தம் நிறுத்தப்பட்டு நீதியான அரசியல் தீர்வொன்றை காணவேண்டும் என்பதையும் அவர் யாழ்ப்பாணத்தில் வலியுறுத்தி இருந்தார்.

அதுமட்டுமன்றி, சென்னை சென்று அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்ட அமைப்புக்களையும் விஜயகுமாரதுங்கா சந்தித்திருந்தார்.

இலங்கை அரசை கவிழ்க்கச் சதி செய்வதாக ஐ.தே.கட்சி அரசு ஈ.பி.ஆர்.எல்.எ.ப். தலைவர் பத்மநாபாமீது அப்போது வழக்குத் தொடுத்திருந்தது. அவரையும் விஜயகுமாரதுங்கா சந்தித்திருந்தார். அச் சந்திப்பில் திருமதி சந்திரிக்கா குமாரதுங்காவும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போதும் விஜயகுமாரதுங்கா புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாக ஐ.தே.கட்சி பிரசாரம் செய்யத் தவறவில்லை.

ஆனால், விஜயகுமாரதுங்காவுக்கோ அவரது பாரியாரான சந்திரிக்காவுக்கோ அரசை எதிர்த்து சதி செய்யும் எண்ணம் எதுவும் அன்றிருக்கவில்லை.

அமரர் விஜயகுமாரதுங்கா புலிகளைச் சந்தித்த காலகட்டத்திலும் புலிகளுடன் தொடர்பு கொள்வது பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கடுமையான குற்றமாகவே இருந்தது.

எனவே, ஆட்சியில் உள்ள கட்சி புலிகளுடன் போர் புரியும்போது, எதிர்வரிசையில் உள்ள கட்சிகள் அதற்கெதிரான நிலைப்பாட்டை எடுப்பது என்பது இலங்கை அரசியல் வரலாற்றில் புதியதொன்றல்ல.

ஆனால் இந்த நிலைப்பாடுகள் பல சந்தர்ப்பங்களில் சுயநல அரசியல் நோக்கத்தோடுதான் அமைந்திருந்தன. திறந்த மனதோடு பிரச்சனைகளைத் தீர்க்கும் நோக்கம் காணப்பட்டிருக்கவில்லை.

அதன் காரணமாகவே எதிர்க்கட்சி ஆளும் கட்சியாகும்போது தாம் முன்னர் கூறிய நிலைப்பாடுகளுக்கு முற்றிலும் மாறான நிலைப்பாடுகளை மேற்கொள்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இன்றைய ஆளும்தரப்பும், பிரதான எதிர்க் கட்சியும் இன்று மேற்கொண்டுள்ள நிலைப்பாடுகள் தாம் அமர்ந்திருக்கும் இடங்களுக்கு ஏற்ற நிலைப்பாடுகளேயாகும். இருக்கின்ற பிரச்சனையைத் தீர்க்கின்ற நிலைப்பாடுகளாக இவை அமையவில்லை.

பொதுஜன முன்னணி இப்போதும் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால் ஐ.தே.கட்சி இன்று பேசும் தொனியிலேயே அவர்களும் பேசியிருப்பர்.

எனவே, இன்றைய ஆட்சியாளர்கள் எடுத்திருக்கும் தற்போதைய நிலைப்பாடுகள் அவர்கள் முன்னர் கூறிவந்த கருத்துக்களோடு முற்றிலும் மாறுபட்டுள்ளமை ஆச்சரியமானதல்ல.

இனவாதத்திற்கு எதிரான தலைவி என்றும், இனவாத சக்திகளைத் தோற்கடித்தவர் என்றும் ஜனாதிபதி சந்திரிக்கா போற்றப்பட்டார்.

தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுனை, ஜே.வி.பியுடன் இணைந்து நின்ற சிறீலங்கா முற்போக்கு முன்னணி போன்றவற்றையே இனவாதக் கட்சிகள் என்று அன்று சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால் அக்கட்சிகளை இன்று தமது வாயாலேயே பிரதான கட்சிகள் என்று ஆட்சியாளர்கள் விவரித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளாமை ஒன்றே மேற்படி கட்சிகளை பிரதான கட்சிகள் என்று ஆட்சியாளரே முன்னிலைப்படுத்த வைத்திருக்கிறது.

தாம் தோற்கடித்த பூதங்களை தாமே புத்துயிர் கொடுத்து தூக்கி நிறுத்த வேண்டிய கட்டாயம் இன்றைய ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ளது.

ஐ.தே. கட்சிக்கு எதிரான தமது அரசியல் சமரில் வெற்றிபெறுவதற்காக பேரினவாதப் பூதங்களை உசுப்பிவிடத் தொடங்கியுள்ளனர்.

பௌத்த மதகுருமார் ஆசியுடன் யுத்தத்தை தொடருவது, புலிகளுடனான போரை இலட்சிய வெறியாக சித்தரிப்பது போன்ற அணுகுமுறைகளால் இன்றைய ஆட்சியாளர்கள் தம்மைத்தாமே பௌத்த பேரினவாதப் பூதத்தின் கரங்களுக்குள் திணித்துக் கொண்டுள்ளனர்.

பேரினவாதச் சக்திகள் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்று கூறுவதன் அர்த்தம் தமிழர் தரப்பை தோற்கடிக்க வேண்டும் என்பதேயாகும்.

எனவே, 'புலிகளுக்கு எதிரான யுத்தம்', 'புலிகளைத் தோற்கடித்தல்' என்ற முழக்கங்கள் தமிழர் தரப்பின் பலத்தை சிங்கள சேனை அடக்குதல் என்ற தோற்றப்பாட்டையே சிங்கள மக்களிடம் உண்டாக்கிவருகிறது.

'துட்டகைமுனுவின் வாரிசுகளே தாய்நாட்டை மீட்க வாருங்கள்' என்று படையில் சேர விடுக்கப்பட்ட அழைப்பும், ஜெனரல் ரத்வத்தையை பௌத்த மதகுருமார்கள் 'துட்டகைமுனு' என்று பாராட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய யுத்தத்திற்கு மேலும் பேரினவாத ஆதரவை திரட்டிக் கொள்ளத்தக்க திசையிலேயே இன்றைய ஆட்சியாளர்கள் செல்லத் தொடங்கியுள்ளனர்.

புலிகளுடன் நிபந்தனையில்லாமல் பேசுமாறு ஐ.தே.க. கூறியதையடுத்து 'நிபந்தனையுடன்தான் பேசுவோம்' என்று ஜனாதிபதி சூளுரைத்திருந்தார்.

அதன்பின்னரே பௌத்த மகாசங்கம் உட்பட பல அமைப்புக்கள் ஐ.தே.கட்சிமீது சீறிப்பாய்ந்து கண்டனக் கணைகள் தொடுத்து வருகின்றன.

அதுமட்டுமன்றி ஒருபடிமேலே சென்று "நிபந்தனையுடன்கூட பேசவேண்டாம். போர்தான் முடிந்த முடிவு" என்று பௌத்த மகாசங்கம் உரத்துக் கூறியுள்ளது.

ஐ.தே.கட்சிக்கு எதிரான அரசியல் சமரில் பொதுஜன முன்னணி நாடியுள்ள ஆதரவுச் சக்திகள் அப்பழுக்கற்ற பேரினவாத சக்திகளாகவே காணப்படுகின்றன.

இதே சக்திகள் முன்னர் ஐ.தே.கட்சியாலும் பயன்படுத்தப்பட்டுவந்தன. சிங்கள கமிஷன் போன்ற பெயர்களில் அரசின் தீர்வு யோசனையை பூதாகரமாகக் காண்பித்தன. அதனை ஐ.தே.கட்சி தூண்டிவிட்டிருந்தது.

இப்போது அதே சக்திகள் 'புலிகளுடன் போர்தான் முடிந்த முடிவு' என்ற பொதுஜன முன்னணியின் நிலைப்பாட்டை ஆதரித்து அணிவகுத்திருக்கின்றன.

இச் சக்திகளின் துணையுடன் தம்மை புலிகளுக்கு எதிரான இலட்சிய அரசு என்றும், துட்டகைமுனுவின் நேர் வாரிசுகள் என்றும் நிரூபித்தால்தான், இன்றைய யுத்தம் பொதுஜன முன்னணியின் அரசியல் நலனுக்காக நடத்தப்படும் யுத்தமல்ல, தேர்தல்களை ஒத்திவைத்ததும் சுயநலனால் அல்ல என்று சிங்கள வாக்காளர்களை நம்பவைக்க இயலும்.

அவ்வாறு நம்பவைக்க நடந்துவரும் நிகழ்வுகளையே சமீபகாலமாக அவதானிக்க முடிகிறது.

இவற்றின் பின்னணியில்தான் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஐ.நா.சபை உரையும் தயாரிக்கப்பட்டிருந்தது.

இலங்கை இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணும் தமது அணுகுமுறையை சாகசமான அரசியற் சொற்பதங்களால் நியாயப்படுத்தியுள்ளார்.



சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபாவுடன் அமரர் விஜயகுமாரதுங்க, சந்திரிக்கா, ஒசி அபய குணசேகர, கேதீஸ்வரன்

விடுதலைப் புலிகளை தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்ற அமைப்புக்களுடன் ஒப்பிடுவது அந்த அமைப்புக்களை இகழ்வதாகும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனால், பதவிக்கு வந்த புதிதில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நெல்சன் மண்டேலாவுடனும், யாசீர் அரபாத்துடனும் ஒப்பிட்டு பேசியவர் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களேயாகும்.

### பேரினவாதப் பூதம்

எனவே, நெல்சன் மண்டேலாவையும், யாசீர் அரபாத்தையும் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் ஒருகாலத்தில் இகழ்ந்திருக்கிறார் என்று கருதும்படியான மிகத் தவறான அர்த்தத்தையே தற்போதைய உரை தந்துள்ளது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் அன்றைய புகழாரத்தால் புலிகள் குளிர்ந்து போய்விடவில்லை. யாசீர் அரபாத்துடன் தங்களை ஒப்பிட்டதை புலிகள் விரும்பவும் இல்லை.

'தந்ததை வாங்கி தலை குனிந்துகொள்ள பிரபாகரன் யாசீர் அரபாத்தல்ல' என்று புலிகளின் ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரை எழுதியிருந்தார். அரசுடன் பேச்சு நடந்து கொண்டிருந்தபோதே மேற்குறித்த ஒப்பீட்டுக்கு எதிரான கவிதை 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

எனவே, ஜனாதிபதியின் புகழாரமோ, இகழாரமோ புலிகளுக்கு ஒரு பிரச்சனையல்ல. ஆனால் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் உரை புலிகளை மட்டுமன்றி, கடந்த காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய சகல இயக்கங்களது போராட்டங்களையும் குறைத்து மதிப்பிடுவதாகவே அமைந்துள்ளது.

அயர்லாந்து, தென்னாபிரிக்கா, வியட்நாம், பாலஸ்தீனம் போன்ற முக்கியமான போராட்டங்களுக்கு சற்றும் குறைந்ததல்ல தமிழ் பேசும் மக்களின் போராட்டம். மேற்குறிப்பிட்ட போராட்டங்களும் அவற்றை ஒடுக்க முனைந்த சக்திகளால் பயங்கரவாதப் போராட்டங்கள் என்று முத்திரை குத்தப்பட்டவையேயாகும்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை புலிகளைச் சாடும் சாக்கில் குறைத்துக்காட்டி, மேற்கண்ட போராட்டங்களில் எட்டப்பட்ட தீர்வுகள் போன்று இங்கு அவசியமில்லை என்று சித்தரிக்கவே ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர்.

இலங்கையின் முக்கிய பிரச்சனை இனப்பிரச்சனையல்ல, பயங்கரவாதப் பிரச்சனை என்று வெளியுலகை நம்பவைக்கும் விதமாகவும் ஐ.நா.சபையில் ஜனாதிபதியின் உரை அமைந்திருந்தது.

புலிகளை சாடும் சாக்கில் பயங்கரவாதத்தை பிரதான பிரச்சனையாக்கி, இனப்பிரச்சனையை சாதாரண உப பிரச்சனை போன்றே உரையில் கூறிச்சென்றுள்ளார்.

அதன் மூலம் அரசியல் தீர்வை பின்தள்ளி இராணுவத்தீர்வை முன்னெடுப்பதற்கு உலக கண்டனம் ஏற்படாமல் தடுப்பதற்கே முயன்றிருக்கிறார்.

அதுமட்டுமன்றி, புலிகளுடன் இலங்கை அரசு பேசவேண்டும் என்று சர்வதேச சமூகம் கோரிவிடக்கூடாதே என்ற முன்னெச்சரிக்கையுடனும் அவரது உரை அமைந்துள்ளது.

ஆனாலும் இலங்கை இனப்பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை என்றும், சர்வதேச மத்தியஸ்தம் தேவையில்லை என்றும் கூறிவருகின்ற ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள், ஐ.நா. சபையில் இனப்பிரச்சனை பற்றியும், புலிகள் பற்றியும் பேசவேண்டியவராகியுள்ளார்.

இந்நிலைக்கு அவரை கொண்டு சென்றதும் புலிகளின் பலமே என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கு சமபல சக்தியாக உள்ளனர் என்பது உலகறிந்த விடயமாக இருப்பதால்தான் ஐ.நா.சபையில் அவர்கள் தொடர்பாக பேசியிருப்பதுடன், சர்வதேச ஆதரவையும் ஜனாதிபதி கோரியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனையில் வெளிநாட்டு மத்தியஸ்தம் வேண்டாம் எனக்கூறும் ஜனாதிபதி அவர்கள், புலிகளை ஒடுக்க உலக ஆதரவை நாடியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை இனப்பிரச்சனைபற்றி பேசப்படமாட்டாதா? என்று இலங்கைத் தமிழர்கள் எதிர்பார்த்ததுண்டு.

தற்போது இலங்கை ஜனாதிபதி அவர்கள் மூலம் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது. இலங்கை இனப்பிரச்சனையானது சர்வதேசப் பிரச்சனையாகியுள்ளதின் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே இதனையும் கருதமுடிகிறது. ■

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

யாழ்ப்பாணத்தில் புளொட்மீது படையினர் தாக்குதல். இருதரப்பிலும் உயிர்ப்பலிகள்.

வடக்கு-கிழக்கில் தமிழ்க் கட்சிகளுடன் எவ்வாறான உறவை மேற்கொள்ளுவது என்பதையும் படையினர்தான் தீர்மானிக்கின்றனர். அதிலும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் அந்தந்தப் பிராந்திய அதிகாரிகள்தான் தீர்மானிக்கிறார்கள்.

மட்டக்களப்பில் படையினருடன் நிற்கிறது புளொட். வவுனியாவில் படையினருடன் நல்லுறவு. எரிபொருள் பிரச்சனையில் அந்த உறவு பாதித்தபோதும், புளொட் வவுனியாவில் அதிகாரம் செலுத்த அனுமதி உள்ளது.

எரிபொருள் கட்டுப்பாட்டை புளொட் எதிர்த்தபோது கொதித்த படையினர், புளொட் முகாமிலிருந்து ஒரு இளைஞர் விலங்குடன் தப்பியபோது தலையிடவில்லை. கைதான இருவரை விடுவிப்பதாக கூறி தாம் தடுப்பு முகாம் நடத்துவதை புளொட்டே மறைமுகமாக ஏற்றபோதும் தலையிடவில்லை.

வவுனியாவைப் பொறுத்தளவில் 'எங்கள் பாதையில் குறுக்கிடாமல் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்பதே புளொட் தொடர்பாக இராணுவத்தினரின் அணுகுமுறை.

### யாரை வெளியேற்றப் போகிறார்கள்?

ஆனால் யாழ்ப்பாணத்தில் படை அதிகாரிகள் இயக்கங்கள் விஷயத்தில் கண்டிப்பாக இருக்கின்றனர். ஒரு கணக்காகத்தான் இவர்களை வைத்திருக்க வேண்டும். தேவை முடிந்ததும் ஆயுதங்களையும் பெறவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

அதனால்தான் சாவகச்சேரியில் பிரச்சனை. முகாமுக்கு வெளியே புளொட் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் காட்சியளித்தது படையினருக்கு சகிக்கவில்லை.

எந்தக் கட்சியும் தமது முகாம்களுக்கு வெளியே ஆயுதத்துடன் நடமாடக்கூடாது என்பது யாழில் படையினர் போட்டுள்ள கட்டளை. சாவகச்சேரியில் அதனை மீறியதால் ஏற்பட்டதே புளொட், படை மோதல்.

இம் மோதலில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரும் பலியாகியுள்ளார். அவரது கட்சியின் அடையாள அட்டையை பறித்து கிழித்துவிட்டு செமர்த்தியாக தாக்கியுள்ளனர். பின்னர் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். இன்னொரு ஈ.பி.டி.பி உறுப்பினர் காயங்களுடன் தப்பியோடிவிட்டார்.

தன் வீட்டில் குளித்துக் கொண்டிருந்த ஒரு மாணவனையும் சுட்டுக்கொன்றுவிட்டு, 'கைக்குண்டுடன் பதுங்கிய புளொட் உறுப்பினர்' என்று முத்திரை குத்திவிட்டனர்.

புலிகள் ஆத்திரமூட்டுவதால்தான் சில சமயங்களில் படையினர் உணர்ச்சிவசப்பட்டு அடையாளம் தெரியாமல் நடந்து கொள்கின்றனர் என்று கூறுபவர்களிடம் மேற்கண்ட சம்பவங்களுக்கான விளக்கத்தை தாழ்மையுடன் அறிய [illegible]

இதற்கிடையே ஈ.பி.டி.பி. உறுப்பினரை புளொட் சுட்டதாகவும் ஈ.பி.டி.பி.யிடம் கூறப்பட்டதாம்.

சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள இயக்கங்களுக்கு ஒற்றுமை பற்றி வகுப்பு எடுத்தனர் படை அதிகாரிகள் என்பது நினைவுக்கு வருகிறது. தமக்கு தேவையானால் ஒற்றுமையும் விளக்கப்படும். தமக்கு தேவையானால் பிரிவினையும் விதைக்கப்படும்.

***

வவுனியாவில் புளொட்டின் அறிவித்தல்படி வெளியேற மறுத்த யாழ்ப்பாணக் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகளும், பாஸ்களும் புளொட்டால் பறிக்கப்பட்டுள்ளன.

தங்கள் இளம் பிள்ளைகளை எங்காவது அனுப்பினால் ஏனையோர் குடியிருக்க அனுமதிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளதாம். பல குடும்பங்கள் வெளியேறி விட்டன.

வவுனியாவில் தமது உறுப்பினர்கள் இருவர் பலியானதால் யாழ்ப்பாணத்து குடும்பங்களை வெளியேறச் சொல்கிறது புளொட்.

யாழில் படையினரால் பலியான தமது உறுப்பினர்களுக்காக யாரை வெளியேறச் சொல்லப்போகிறார்கள்?

இன்னொரு வேடிக்கை என்னவென்றால்; திருமலை லிங்கநகரில் இருந்து, தமது முகாம் பாதுகாப்பு கருதி இராணுவம் தமிழ்க் குடும்பங்களை வெளியேறுமாறு கூறிவருகிறது. அதனை மிக வன்மையாக கண்டித்திருக்கிறது புளொட்.

●●●

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினரை தீர்த்துக்கட்டியவர்களுக்கு என்ன நடவடிக்கை?

சண்டையே இல்லாமல் ஈ.பி.டி.பி. என்று தெரிந்தும் மண்டையில் போட்டுள்ளனர். இன்னும் சொல்வதானால் ஈ.பி.டி.பி. என்று தெரிந்த பின்னர்தான் அடியே ஆரம்பித்திருக்கிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் இடையில் சிக்கி பலியானதாக பத்திரிகைகளுக்கு செய்தி தரப்பட்டது. ஈ.பி.டி.பி. உறுப்பினர் விடயத்திலேயே இப்படிக் கூறுகிறபோது, துப்பாக்கிப் பிரயோகத்தின் இடையே பொதுமக்கள் அடிக்கடி மாட்டுப்படுவது எப்படி என்று புரிகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

உகண்டாவில் தங்கியிருந்த வெளிநாட்டவர் பற்றிய விபரங்கள் அமீனின் மேசைக்கு வந்தன.

"நிதி உதவி செய்வது என்றால், வாங்கும் நிதிக்கு கணக்குக் காட்ட வேண்டும் என்றா கூறுகிறார்கள். பார்க்கிறேன். பிரிட்டிஷ்காரர்கள் முகத்திலே கரிபூசிக் காட்டுகிறேன்!" அமீன் சூளுரைமாதிரி பேசிக்கொண்டு போக, சியம்பா மௌனமாக இருந்தார்.

"நீர் எனது அந்தரங்கச் செயலாளராக இருந்தும், என்னைப் புரிந்துகொள்ளவில்லை. நான் எதைச் செய்தாலும் உமக்கு முரண்பாடாகத்தான் தெரிகிறது, இல்லையா?" என்றான் அமீன் சியம்பாவை நேர்பார்வை பார்த்தபடி.

சியம்பா ஆடிப்போனார்; "இல்லை, அப்படியொன்றுமில்லை. ஆனால்.."

"சொல்லும், அந்தரங்கச் செயலாளர் என்பதால், என்னிடம் துணிந்து கருத்துக் கூறும் உரிமை உமக்கு மட்டும்தான் இருக்கிறது!" என்றான். நகைத்தான்.

சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்றுவது பொருளாதார நஷ்டத்தைக் கொண்டுவரும். இங்கு அவர்களது நிறுவனங்களில் வேலை செய்தவர்கள் நடுத்தெருவுக்கு வருவார்கள். நம்மீது அவர்கள்..." என்றுவிட்டு தொடர்ந்து சொல்ல அஞ்சி நாக்கைக் கடித்துக் கொண்டார்.

"நம்மீது அவர்கள் அதிருப்திப் படுவார்கள். கல்லெறிவார்கள். கெட்ட சொல் எறிவார்கள் என்று பயப்படுகிறீரா? சியம்பா! முடிவு எடுக்கத் தயங்குபவன் தலைவனாக இருக்க முடியாது. தயங்குபவன் தலைவ னாக இருந்தால் அவனால் தலைமை தாங்கப்படும் நாடு புலியாக இருக்காது. எலியாகத்தான் இருக்கும்!" என்றான் அமீன்.

அத்தோடு நிறுத்தாமல் அமீன் அடுத்ததாகக் கூறிய செய்தியால், 'இவனுக்கு பைத்தியம்தான் பிடித்துவிட்டதோ?' என்று உள்ளூரச் சந்தேகப்பட்டார் சியம்பா.

"சியம்பா! பிரிட்டிஷ்காரர்களை மட்டுமல்ல, ஆசிய நாட்டவர்கள் அனைவரையும் உகண்டாவைவிட்டு ஓடுமாறு உத்தரவிடப் போகிறேன்!" என்றான் இடிச் சிரிப்போடு.

சியம்பா தனது அதிர்ச்சியை மறைத்துக் கொள்ள மிகவும் சிரமப்பட்டார்.

அன்று இரவு கென்யாநாட்டின் எல்லைக்கு அருகே உள்ள இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தான் அமீன்.

அங்கு தங்கள் மத்தியில் அமீன் ஆற்றிய உரையை நம்பவும் முடியாமல், நம்பாதிருக்கவும் முடியாமல் படையினர் குழம்பி நின்றனர்.

"நேற்று இரவு என் கனவில் கடவுள் தோன்றினார். உகண்டாவில் தங்கியிருந்து உகண்டாவின் வளத்தைச் சுரண்டுகிறார்கள் அந்நியர்கள். அவர்களை 90 நாட்களுக்குள் துரத்த வேண்டும். இல்லையானால் உகண்டாவில் பேரழிவு ஏற்படும்! என்று கடவுள் கூறிவிட்டார். 50 ஆயிரம் பேர்வரை இருக்கிறார்கள். கடவுளின் கட்டளையாச்சே! மீறவா முடியும்? வெளியேற்றப் போகிறேன்!" என்றான்.

அமீன் உணர்ச்சிகரமாகக் கண்களை மூடிக்கொண்டு பேசிய விதம், அவன் கூறியதை நம்பத் தயங்கியவர்களையும் நம்பத் தூண்டியது.

கென்யா எல்லையில் படைகள் மத்தியில் அமீன் ஆற்றிய உரை காட்டில் பற்றிய தீ மாதிரி நாடெங்கும் பரவியது. உகண்டாவில் தங்கியிருந்த ஆசிய நாட்டவர்கள் அமீன் உத்தரவிடமுன்னரே மூட்டை முடிச்சுக்களைக் கட்ட ஆரம்பித்தனர்.

உகண்டாவின் வர்த்தகம், தொழிற்துறை மற்றும் தோட்டத்துறை அத்தனையும் ஆசிய நாட்டவரின் பிடியிலேயே இருந்தன.

நிர்வாகிகள், கணக்காளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் அனைவரும் ஆசிய நாட்டவர்களே.

உகண்டாவில் இவர்கள் வசதியாகவும், தனியான சமுதாயம் போன்றும் இருந்தனர்.

இவர்களது வசதியும், வாழ்க்கை முறைகளும், திறமைகளும் உகண்டா மக்களில் கணிசமானோருக்கு பொறாமையை ஏற்படுத்தியிருந்தது.

ஆசிய நாட்டவர்களை 'கிழக்கு ஆபிரிக்காவின் யூதர்கள்' என்று உகண்டா மக்கள் வர்ணித்தனர்.

1970ல் உகண்டாவில் முப்பதாயிரம் ஆசியர்கள் பிரிட்டிஷ் கடவுச்சீட்டுடன் தங்கியிருந்தனர். மேலும் இருபதாயிரம்பேர் சட்டவிரோதமாகக் குடியேறியிருந்தனர்.

உகண்டாவின் காவலனாக தன்னை உயர்த்திக் காண்பிக்க, உகண்டா மக்களுக்கு ஆசிய நாட்டவர்கள்மீது இருந்த வெறுப்பைப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டான் அமீன்.

அதேசமயம், இஸ்ரேலின் பரம விரோதியாக தன்னைக் காட்டிக்கொண்டு அரபுநாடுகளிடம் பெரும் நிதி உதவி பெறவும் திட்டம் தீட்டினான்.



இந்த இருகாரணங்கள் தவிர இன்னொரு காரணமும் இருந்தது.

அந்தக் காரணத்தை தன் காதலிகளில் ஒருத்தியான இல்மாவிடம் கூறினான் அமீன். கூறும்போது இல்மா அவன் மடியில் இருந்தாள். அமீன் கைகள் இல்மாவின் மேல் இருந்தன. அலைந்தன.

"ஆசியர்களைத் துரத்திவிட்டு என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்ட இல்மா, "ஏராளமாகச் சேர்த்து வைத்திருக்கும் உடமைகளை அவர்கள் எப்படிக் கொண்டுபோகப் போகிறார்கள்? யம்மாடி, அதற்கே நாளாகுமே!" என்றாள் கண்களை அகலவிரித்து.

அகலவிரிந்த கண்களில் அந்த உடமைகள்மீதான அவளது ஆசை கொப்பளித்தது.

அவளது கழுத்துக்கு கீழே கைகளை அலையவிட்டபடி, அவளது உதடுகளுடன் தன் உதட்டை ஒற்றி எடுத்துவிட்டு, உரத்து நகைத்தான், நகைத்தபடியே சொன்னான்: "அந்த உடமைகளை எங்கள் சொந்த உடமைகளாக்கத்தானே அவர்களை 'கெட் அவுட்' சொல்லி இருக்கிறேன்!" என்றான்.



இடைக்கிடையே தனக்குத் தெரிந்த ஆங்கிலச் சொற்களைக் கலந்து கிண்டலாகப் பேசும் புதிய முயற்சியிலும் இறங்கியிருந்தான் அமீன்.

அமீனின் பதிலால் இல்மாவின் கண்கள் மேலும் அகலவிரிந்தன. ஆனந்தமிகுதியால் அவன் கழுத்தைச் சுற்றி தன் கைகளைவீசி அவன் முகத்தை தன் கழுத்துக்கு கீழே அழுத்திக் கொண்டாள்.

கிடைத்த சந்தர்ப்பத்தை அமீன் நன்கு உபயோகித்துக்கொண்டதால், இல்மா அதிகமாகச் சிணுங்க வேண்டியிருந்தது. அதிகமாக உடலை அசைத்து நெளிய வேண்டியிருந்தது.

இல்மாவிடம் அமீன் சொன்னது பொய்யல்ல என்பது மறுநாளே உறுதியானது.

தருவது
ரசிகன்

## உண்மைத் தொடர்
## அதிர் இடி 29

**கடந்தவாரம்**

**மக்ரரே பல்கலைக்கழக அதிகாரிகளை மிரட்டி டாக்டர் பட்டம் பெறுகிறான் அமீன். இஸ்ரேலியர்களை உகண்டாவிடம் இருந்து வெளியேற்றுகிறான். பிரிட்டிஷ்காரர்களையும் வெளியேற்ற திட்டமிடுகிறான்.**

**இனி...**

"உகண்டாவை சுரண்டிச் சுரண்டி இதுவரை சாப்பிட்டது போதும். உங்கள் உடம்பில் ஓடுவது உகண்டாவைச் சுரண்டி எடுத்த இரத்தம். அதற்கு நன்றி சொல்ல உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! இப்போது உங்கள் கைவசம் உள்ள சொத்துப் பத்துகளையெல்லாம் அப்படியே வைத்துவிட்டுப் புறப்படுங்கள். கைச்செலவுக்கு மட்டும் நூறு டொலர் எடுத்துச் செல்ல இரக்கமுள்ள உகண்டா உங்களை அனுமதிக்கிறது!" என்று அறிவித்தது உகண்டா வானொலி.

அமீன் கூறியதைத்தான் அரசின் ஆணையாக வானொலியில் வாசித்தனர்.

"1972 நவம்பர் 8ம் திகதிதான் ஆசிய நாட்டவர் உகண்டாவைவிட்டு வெளியேறுவதற்கான இறுதி நாள்!" என்றும் அறிவித்தது வானொலி.

அந்த அறிவித்தல் அடிக்கடி வானொலியில் ஒலிபரப்பானது.

திடீரென்று ஒருநாள் அமீன் கூறினான்: "நாட்டைவிட்டு வெளியேறுமாறு கூறப்பட்ட ஆசிய நாட்டவர்கள் இங்கேயே இருக்க சில தந்திரங்களைச் செய்கிறார்கள். தங்கள் முகங்களுக்கு சப்பாத்துப் பொலிஷ்பூசிக்கொண்டு உகண்டா வாசிகள் போல நடமாடுகிறார்கள். அப்படி யாராவது கைது செய்யப்பட்டால் அரசு கருணைகாட்டாது!"

இவ்வாறு கூறிய அமீனிடம், "சப்பாத்துப் பொலிஷ் பூசிக்கொண்டு நடமாடுவது சாத்தியம் தானா?" என்று அப்பாவித்தனமாகக் கேட்டார் சியம்பா.

அவரை நோக்கி அமர்த்தலான சிரிப்பொன்றை உதிர்த்த அமீன்: "உமக்கு ஒபேடேயுடன் இருந்து மூளை மங்கிவிட்டது. அமீன் ஆட்சியில் அப்படியெல்லாம் துணிவதற்கு யார் இருக்கிறார்கள்? எல்லாம் ஒரு கற்பனைதான்! மக்களுக்கு பரபரப்பான செய்திகள் வேண்டாமோ? இப்படி புதிது புதிதாகப் புரளி கிளப்பிக் கொண்டிருந்தால்தான் மக்கள் நம் பக்கம் திரும்பமாட்டார்கள்! இதெல்லாம் இரகசியமான இராஜதந்திரம். வெளியே சொல்லி விடாதேயும்...!" என்றுவிட்டு வழக்கமான இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

அமீன் மக்களை ஏமாற்றும் கலையில் தேர்ந்து வருகிறான் என்பது மட்டும் சியம்பாவுக்கு தெளிவாகப் புரிந்தது.

உகண்டா இராணுவத்தினரை குஷிப்படுத்தும் காரியம் ஒன்றையும் அமீன் செய்தான்.

ஆசியர்கள் எதனையும் கொண்டு செல்லாதவாறு அவர்களது வீடுகள், தொழில் நிலையங்களைக் கண்காணிக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டான்.

கண்காணிப்பு என்று சென்ற இராணுவம், ஆசியர்களின் வீடுகள், தொழில் நிறுவனங்கள் என்பவற்றுக்குள் புகுந்து பெறுமதியான பொருட்களைச் சுருட்டிக் கொண்டது; சூறையாடியது.

இத் தகவல் சிம்பாவுக்குக் கிடைத்தது. அவர் அமீனிடம் ஓடோடிச் சென்று முறையிட்டார்.

அமீன் கோபப்படுவான் என்று எதிர்பார்த்து நின்றார் சியம்பா. அவனோ உரத்துச் சிரித்துவிட்டு; "சியம்பா! நீர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இன்னும் நிறைய இருக்கிறது. 'அமீன் மட்டும் ஆடம்பரமாக வாழ்கிறான். நாட்டைக் காக்கும் நாம் மட்டும் நாயாக வாழ்கிறோம்' என்று இராணுவம் நினைத்துவிடக் கூடாது. அதனால் அவர்கள் இஷ்டத்திற்கும் இடைக்கிடையே ஆடவிடவேண்டும்; அனுபவிக்க விட வேண்டும்; ஆசைப்படுவதை அடையவிட வேண்டும். பெண், பொன், பொருள் மூன்றில் எது தேவையோ அதனை எடுத்துக்கொள்ளட்டும்!" என்று கண் சிமிட்டினான்.

'எப்படி என் மூளை?' என்பது போல் இருந்தது அந்தக் கண்சிமிட்டல்.

மறுநாள் அமீன் போட்ட உத்தரவு முதல் நாள் கூறியதற்கு முரணாக இருந்தது.

ஆசியர்கள்கூட-அமீனின் மனம் இரங்கி விட்டதா? என்று வியந்தனர்.

வியப்பையும், ஆச்சரியத்தையும் முதலில் கொடுத்துவிட்டு, பின்னர் அதிர்ச்சியைக் கொடுக்கப்போகிறான் அமீன் என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை.

(இடி தொடரும்)

# நன்கொடைச் சாதனை

உலகில் மிகப் பிரபலமான உணவு நிறுவனம் 'மெக் டொனால்ட்.' இது அமெரிக்காவில் உள்ளது. மிதமிஞ்சிய பணம் அதனிடம் இருக்கிறது.

சமீபத்தில் தொண்டர் இராணுவம் ஒன்றுக்கு இந்த நிறுவன அதிபர் வழங்கிய நிதி உதவி எவ்வளவு தெரியுமா? அதிகமில்லை, ஒரு 400 கோடி ரூபாய்.

தொண்டர் இராணுவம் ஆரம்பிக்கப்பட்டு 118 ஆண்டுகள் ஆகியுள்ளன. இத்தனை கோடி ரூபாய்கள் நிதி கிடைத்தது இதுதான் முதற் தடவை.

உணவு நிறுவன முதலாளியின் பெயர்: ஜோ ஆன் சிராஜ். இவர் ஒரு அம்மணி. அமெரிக்காவின் பணக்காரர்கள் வரிசையில் 68வது இடத்தில் இருக்கிறார்.

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் பிரபலமானது 'மெக் டொனால்ட்' உணவு வகைகள். பல்வேறு நாடுகளில் கிளைகள் உள்ளன. கணவரும் மனைவியும் இணைந்து இதனை நடத்தினர்.



கணவர் இறந்துவிட்டார். இப்போது மனைவி திறம்பட நிர்வகித்து வருகிறார். கணவர் நினைவாகத்தான் பெரிய நன்கொடையைத் தந்தாராம்.

அம்மணியின் நிறுவன உணவை மக்கள் சாப்பிடுகிறார்கள். அம்மணி மட்டும் கரன்ஸிகளைத்தான் சாப்பிடுகிறாராக்கும்.

# கழுதை வாங்கலியோ கழுதை

ஆசியாவின் மிகவும் புகழ் பெற்ற கழுதைச் சந்தை எங்கு இருக்கிறது தெரியுமா? இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்பூரில் இருக்கிறது.



ஆண்டுதோறும் நான்கு நாட்கள் இந்தக் கழுதைச் சந்தை நடைபெறும். இந்தச் சந்தையை ஆரம்பித்து வைக்க அரசியல் வாதிகளை அழைப்பர். அவர்களும் முன்பெல்லாம் சந்தோசமாகச் சம்மதித்தனர். ஆனால் இப்போதெல்லாம் தலைதெறிக்க ஓடுகின்றனர்.

கழுதைச் சந்தையை திறந்து வைப்பவர்கள் தோல்வியைத் தழுகிறார்களாம். அதுதான் இம்முறை ஆரம்பித்து வைக்க அரசியல் வாதிகள் எவரும் கிடைக்கவில்லையாம்.

ஆனால் இம்முறை கழுதைகளுக்கு மவுசு ஏறியுள்ளது. ஒரு கழுதையின் விலை பதினொரு ஆயிரம் ரூபாய். 1996ல் 25 ஆயிரம் ரூபாய்க்கும் போயிருக்கிறது என்கிறார்கள்.

# கத்தியுடன் ஆசிரியர்



சீனாவைச் சேர்ந்த சிகவான் பகுதியில் நடந்த சம்பவம் இது.

அங்குள்ள பாடசாலை ஒன்றில் ஆரம்பப்பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றுகிறார் ஒரு வாலிபர்.

அந்த வாலிபர் ஒரு பெண்ணைக் காதலித்தார். கனவுகளும் கலர் கலராகக் கண்டார்.

என்ன காரணத்தினாலோ காதலி அவரை கைகழுவிவிட்டாள். காதலுக்கு முற்றுப்புள்ளி விழுந்ததும் காதலர் கெட்ட புள்ளியாகிவிட்டார்.

கையில் கத்தியுடன் பாடசாலைக்கு சென்றவர் அங்கு கண்ணில்பட்ட சிறுவர்களை வெட்டியும், குத்தியும் காயப்படுத்தி இருக்கிறார்.

23 சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர். ஒரு சிறுவனின் காது துண்டிக்கப்பட்டது.

பொலிசார் வந்து அந்த வாலிப ஆசிரியரை அமுக்கிக் கொண்டு போனார்கள். ஆசிரியர் கற்றுக் கொடுப்பார். கத்தி எடுத்தும் குத்துவார் என்று யார் கண்டார்கள்.

# சாந்த ஆண்கள்

இலண்டனில் சமீபத்தில் நடந்துள்ள ஆராய்ச்சி ஒன்று சாந்தமான முகம் கொண்ட இளைஞர்களுக்கு சந்தோசம் தரக்கூடியது.



பெண்மை கலந்த முகத்துடன் உள்ள ஆண்களைத்தான் பெரும்பாலான பெண்கள் விரும்புகிறார்கள் என்று கூறுகிறது அந்த ஆராய்ச்சி.

முரட்டுத்தனமான ஆசாமிகள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்பது இலண்டன் பெண்களின் அபிப்பிராயமாம்.

இந்த ஆராய்சி முடிவு வெளியானதும் சாந்த சொரூபிகள் கொலரைத் தூக்கி விட்டுக்கொண்டு வீதிகளில் அலைகிறார்களோ தெரியவில்லை.

# அழகிப் பசுக்கள்

நியூசிலாந்து நாட்டில் பசுக்களுக்கு அழகுப் போட்டி நடத்துகிறார்கள் என்பது கொஞ்சம் ஆச்சரியமான விஷயம்தான்.

நியூசிலாந்தில் மட்டுமல்ல அவுஸ்திரேலியாவிலும் ஆண்டுதோறும் பசு அழகுப் போட்டிகள் நடந்து வருகின்றன.

சாதுவானவையும், பெரிய மடியும் கொண்டவையுமான பசுக்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இந்தப் போட்டிகளில் விவசாயிகள் போட்டி போட்டுக்கொண்டு ஏராளமாக கலந்துகொள்கிறார்கள்.

இப்போட்டியிலும் குறுக்கு வழிகள் இல்லாமல் இல்லை. பசுவுக்கு பெரிய மடி இருப்பதாக காட்டுவதற்கு 'ஸ்டிராய்ட்' என்னும் மருந்தை செலுத்திவிடுகிறார்கள். பசு பொறுமையாக சாதுவாக இருக்க போதையும் கொடுக்கிறார்கள்.

இவ்விடயத்தை போட்டி நடத்துபவர்கள் கண்டுபிடித்துவிட்டனர். 'போதையுடன் வரும் பசுக்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது' என்று இம்முறை கண்டிப்பான உத்தரவு போட்டனர். அதனையும் மீறி போதையுடன் தமது பசுக்களை கொண்டுவந்த இரு விவசாயிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் போட்டிகளில் பங்கு கொள்ள ஆயுற்காலத் தடை விதிக்கப்பட்டது.

# கூந்தல் திருடன்

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் செக்ஸ்டன் என்ற திருடன் ரொம்ப ரொம்ப வித்தியாசமானவன்.

பெண்களின் கூந்தல்கள்மீதுதான் கைவரிசையைக் காண்பிப்பான்.

விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் என்பவற்றில் காத்திருக்கும் பெண்களின் கூந்தல்களை அவர்கள் அயர்ந்திருக்கும் சமயம் பார்த்து நறுக்நறுக்.

சில பெண்கள் தூங்கிக் கொண்டிருக்கையில் ஜன்னல் வழியாகவும் நறுக்கி எடுத்திருக்கிறானாம்.

நீண்ட முயற்சியின் பின்னர் பொலிசார் அவனை லபக் என்று மடக்கினர். அவன் வீட்டு அலுமாரியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கூந்தல்களையும் கைப்பற்றினர்.





படிப்பகம்

www.padippakam.com


## கண் பார்க்க கமரா செய்யும்

கண் பார்க்கக் கை செய்யும் என்பது பழமொழி. கண் பார்க்க கமரா செய்யும் என்பது நவீன தொழில் நுட்பமொழி.

நல் இளம் நங்கை அணிந்திருக்கும் மூக்குக் கண்ணாடியின் ஓரமாக இணைக்கப்பட்டுள்ளதுதான் வீடியோ கமரா. மிகக் குட்டிக் கமிரா. கண்ணாடியோடு இதனை அணிந்துகொண்டால் போதும். நீங்கள் கண்ணாடியூடாக காணும் காட்சிகளையெல்லாம் வீடியோக் கமரா லபக் லபக் என்று விழுங்கிக் கொண்டிருக்கும். இந்தக் கமராவுக்கான ரெக்கோட்டரை நமது இடுப்பு பெல்டில் அணிந்து கொள்ளலாம்.

உலகில் மிக நவீன கமரா இதுதான். அக் கமரா பதிவு செய்த காட்சிதான் அருகிலுள்ள ரீ.வி. திரையில் விழுகிறது. ஃபிரான்ஸ்சில் நடந்த கமரா கண்காட்சியில் இந்த குட்டிக் கமரா இடம்பெற்றது.

இது விற்பனைக்கு வந்தால் விழாக்களில் பெரிய வீடியோ கமராவை தூக்கிக்கொண்டு அலையத் தேவையில்லை. அதற்காக பணம் கொடுத்து ஆள் பிடிக்கவும் தேவையில்லை. செலவும், சிரமமும் மிச்சம். யார் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.






## கண்ணுக்குள் என்ன கோலம்?

இது கண் பார்வைக்காக செய்த கோலம். கண்பார்வைக்கான 'காண்டாக்ட் லென்ஸ்'தான் கண்ணுக்குள் இருக்கிறது. உதைபந்தாட்ட உலகக் கிண்ணப்போட்டி நடந்த சமயத்தில் ஜெர்மனியில் உள்ள 'பேக் ஆப்டிக் கொலோன்' நிறுவனம் இதனை தயாரித்தது. கிரேஸி லென்ஸ் என்று இதற்கு பெயர் சூட்டியுள்ளது.

இந்த லென்ஸ்சுக்கு ஏகப்பட்ட வரவேற்பு. தயாரான அனைத்தும் விற்றுத்தீர்ந்துவிட்டதாம்.

## ஒலிம்பிக்கேக்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர் பற்றியே 2000ம் ஆண்டில் நம்நாட்டு தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள் எல்லாம் பேசப்போகின்றன. ஏன் தெரியுமா? அங்குதானே ஒலிம்பிக் போட்டிகள் நடக்கவுள்ளன.

2000ம் ஆண்டுப் போட்டிக்காக இப்போதே சுறுசுறுப்பாக தயாராகி வருகிறது சிட்னி. அதனை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய கேக்கையே படத்தில் காண்கிறீர்கள். இதன் நீளம் 16 மீட்டர். இந்த ஒலிம்பிக் கேக்கை வெட்டுபவர் அமைச்சர் மைக்கேல் நைட். அவருக்கு அருகில் ஒலிம்பிக் சின்னங்கள் உள்ளன. பின்னணியில் சிட்னி நகரின் ஒரு பகுதியும் தெரிகிறது.






## கையேந்தும் நாடு

ரசியாவில் சோசலிச ஆட்சிக்கு வீழ்ச்சி வந்தபின்னர், ரசியாவுக்கு மீட்சி வந்துவிட்டதாக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் கொக்கரித்தனர். ஆனால் இப்போதுதான் ரசியா அழுது வடிகிறது. பட்டினி, விபச்சாரம், சீரழிவுகள் என்று கெட்டுக் குட்டிச் சுவராகிவிட்டது.

ரசிய வீதிகளில் மனிதர்கள் மட்டுமல்ல, நாய்களும் பிச்சை எடுக்கின்றன. 'உதவி செய்யுங்கள்' என்று ரசிய மொழியில் எழுதப்பட்ட வாசகங்களுடன் பெட்டியோடு கையேந்தும் நாயைப் பாருங்கள். இதுதான் இன்றைய ரசியா.

## 30 வருட பழைய விலை

உலகில் சிறந்த ஐந்து நட்சத்திர ஹொட்டல்களில் ஒன்று மெக்டொனால்ட். 1986ம் அண்டு திறக்கப்பட்ட அக் ஹொட்டலின் 30ம் ஆண்டுவிழா சமீபத்தில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. புதுமையாக என்ன செய்யலாம்? என்று மூளையைக் குடைந்து, பிரமாண்டமான ராட்சத சாண்ட்விச்சை செய்தனர். அதனை வெட்டுகிறார் ஒரு பெண்மணி.

இதில் மற்றொரு விசேஷம் யாதெனில்: 1968ம் ஆண்டு ஹொட்டல் திறக்கப்படும்போது அங்கு உணவுப் பொருட்கள் என்ன விலைக்கு விற்பனையானதோ அதே விலைக்கு 30ம் ஆண்டு கொண்டாட்டத்தில் உணவுப் பொருட்கள் விற்கப்பட்டன. சாப்பாட்டுப் பிரியர்கள் ஹொட்டலை முற்றுகையிட்டனர். அமோக வியாபாரம் நடந்தேறியதாம். நம்நாட்டிலும் செய்யலாமே என்கிறீர்களா?

தகவல் பெட்டி

## தலையெழுத்து?

சின்னச் சிறுவனின் தலையெழுத்தை படித்து குறி சொல்கிறதோ இந்தக் கிளி? சீட்டுப் பார்த்து கிளி ஜோசியம் சொல்லுவதாக நம்நாட்டிலேயே எத்தனைபேர் 'அல்வா' கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இதனை மட்டும் நம்பமாட்டீர்களாக்கும்!

சிறுவனின் பொறுமையும், கிளியின் பாசமும் கமராவுக்குள் கச்சிதமாக பொருந்தியதுதான் இதிலுள்ள சிறப்பு.







படிப்பகம்

www.padippakam.com

# மணிமீது தாக்குதல்

## தீவிரவாதமா? தேசியப் போராட்டமா?

மணிரத்னம் இய்க்கி 'தில்சே' என்ற பெயரில் இந்தியில் வெளியான படம், தமிழில் 'உயிரே' என்ற பெயரில் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது.

'இருவர்' படத்தின் பின்னர் வீழ்ந்த மணிரத்னம் மார்க்கெட்டை 'உயிரே' படமும் எதிர்பார்த்தளவுக்கு உயர்த்தவில்லை.


இதற்கிடையே மணிரத்னம்மீது தமிழ்நாட்டில் உள்ள முற்போக்கு அமைப்புக்கள் கண்டனம் ஏவியுள்ளன.

'தீவிரவாதம்' என்று தேசிய விடுதலைப் போராட்டங்களை கொச்சைப் படுத்தியுள்ளார் மணிரத்னம்.

இந்தியாவில் மணிப்பூர், நாகாலாந்து, அசாம் போன்ற மாநிலங்களில் அரச அடக்குமுறையும், நிலப்பறிப்புக்களுமே அங்குள்ள மக்களை ஆயுதம் ஏந்திப் போராடவைத்தன.

எனவே போராடும் மக்களுக்கு மணிரத்னம் அகிம்சை போதிக்கத் தேவையில்லை. அடக்கும் அரசுக்கும், திட்டமிட்ட குடியேற்றங்களுக்கும் மணிரத்னம் என்ன பதில் வைத்திருக்கிறார்?

போராட்டங்களைப் பற்றியே அறியாத, அவற்றோடு சம்பந்தமில்லாத மணிரத்னம், போராட்டங்களை கொச்சைப்படுத்தவே படமெடுக்கிறார். அதனை சில பத்திரிகைகள். சஞ்சிகைகளும் பாராட்டியுள்ளன!" என்று 'நந்தன்' என்னும் சஞ்சிகை தாக்கியுள்ளது.



ஷாருக்கான்-மனிஷா கொய்ராலா
படம்: உயிரே

## இரண்டு சாந்தி

சூப்பர் ஸ்டாரினி விஜயசாந்தி இரட்டை வேடங்களில் பல படங்களில் தூள் கிளப்பியிருக்கிறார்.

தற்போது "பாரத ரத்னா" என்ற படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கப்போகிறார். கதாநாயகன் முடிவாகவில்லை.

கோடி ராமகிருஷ்ணா இயக்குகிறார். அதனால் பிரமாண்டமான படம்தான் என்பதில் ஐயமில்லை. இராணுவ அதிகாரியாக நடிக்கப்போகிறார் விஜயசாந்தி. தெலுங்கில் தயாராகி தமிழில் மொழிமாற்றம் செய்யப்படும்.

## ப்ரீதாவுக்கு அழகுச் சிகிச்சை

மூக்கு ஒப்பரேசன் சமாச்சாரம் ப்ரீதாவையும் விட்டு வைக்கவில்லை. பல படங்களில் மளமளவென்று நடித்தும் இன்னமும் நம்பவர் வன் இடத்தை பிடிக்கமுடியவில்லை ப்ரீதா விஜயகுமார்.

அதற்காக ப்ரீதா கவலைப்படுகிறாரோ இல்லையோ அம்மா மஞ்சுளா ரொம்பவும் கவலைப்படுகிறார்.

சென்னை அப்போலோ மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர்களில் ஒருவர் முருகேசன். நடிகைகளின் எடுப்பான அழகுகளுக்கு இவரது கைவண்ணமும் ஒரு காரணம்.

மந்த்ராவுக்கு மெருகு கொடுத்தவர் முருகேசன் தானாம். அவரது உதவியை நாடியுள்ளார் மஞ்சுளா.

'ப்ரீதாவுக்கு மூக்குப் பெரிதாக இருக்கிறது. அதனை சீராக்கினால் சரியாகி விடும்' என்றுள்ளாராம் முருகேசன். விரைவில் சிகிச்சை நடக்க இருக்கிறது.

## புது இயக்குநர்

பலரையும் முணு முணுக்க வைத்த 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ' பாடலை எழுதிய ரவிசங்கர் விரைவில் படம் ஒன்றை இயக்கப்போகிறார். இவர் இயக்குநர் விக்ரமனிடம் உதவியாளராக இருந்தவர்.

திரையுலக மறுபக்கம் 72

## சஞ்சீ

மிமிக்ரி செய்
நடித்துக்காட்டுபவர்
அந்த நடிகருக்
நடித்து இப்போது
பிரியம்.
ஸ்ரீ நடிகைகள்
ஸ்ரீநடிகைகளும் த
காதலில் சிக்கியவ
இரண்டு ஸ்ரீந
உறவினர் என்பது
நட்பு நாடுவதில்
பார்வை பட்டுள்ள
முன்னொரு க
என்று பெயர் எடு
இந்த நடிகையி
இருவரும் படப்பி
ஜொள்ளுவிட்டிருக்
"நீங்கள் இப்



மீனா

காரைக்குடி சிட்டு
படம்: புண்ணியவதி

"வா என்றது உருவம்—நீ
போ என்றது நாணம்
பார் என்றது பருவம்—அவர்
யார் என்றது இதயம்!"

## மினிசினி

☆ அகத்தியன் இயக்கத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் 'காதல் கவிதை' படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக இஷா கோபிகர் நடிப்பது தெரிந்த செய்தி. இன்னொரு ஜோடியாக கஸ்தூரி நடிக்கிறார் என்பது புதிய செய்தி.

☆ உலகெங்கும் ஓடி வசூலைக் குவித்த 'டைட்டானிக்' ஆங்கிலப் படத்தில் ஜக் என்ற பெயரில் நாயகனாக நடித்தவர் லியார்னடோ டிக்காப்ரியோ. 'லவ் பண்ணுங்க சார்' என்ற படத்தில் கவுண்டமணி டிக்காப்ரியோ போன்ற கெட்-அப்பில் நடிக்கிறார்.

☆ 'அமைதிப் படை' படத்தில் கதாநாயகன்-வில்லன் என இரட்டை வேடத்தில் சத்யராஜ் நடித்தது போன்று கிருஷ்ணா புதிய தெலுங்குப் படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். இதில் சௌந்தர்யா, ஹீரா, ரக்ஷனா ஆகியோர் கிருஷ்ணாவுக்கு ஜோடியாக நடிக்கின்றனர்.

☆ இந்த வருடம் இந்தியாவில் இருந்து ஒஸ்கார் விருதுப் போட்டிக்குச் செல்லும் ஒரேபடம் 'குரு'. மோகன்லால், சுரேஸ் கோபி நடித்து மலையாளத்தில் தயாரான இப்படத்தை இயக்கிய ராஜீவ் அஞ்சல் அடுத்து 'ரிஷி வம்சம்' என்ற படத்தை இயக்கவுள்ளார்.

☆ 'காதலுக்கு மரியாதை' வெற்றிப்பட ஜோடியான விஜய்-ஷாலினி மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளார்கள். ஷங்கரிடம் இணை இயக்குநராக இருந்த மாதேஷ் முதன்முறையாக இயக்கும் படத்திலேயே இவர்கள் நடிக்கிறார்கள்.

☆ ராதா மோகன் இயக்கத்தில் பிரகாஷ் ராஜ் கதாநாயகனாக நடிக்கும் படம் 'ஸ்மைல் ப்ளீஸ்.' தற்போது இந்தப் படத்தின் பெயர் 'அனந்த கிருஷ்ணா' என்று மாற்றப்பட்டிருக்கிறது.

☆ விக்ரமன் இயக்கிய 'சூர்யவம்சம்' இந்தியில் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில், அவரது அடுத்த படமான, கார்த்திக்-ரோஜா நடித்த 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படமும் இந்தியில் தயாராகப்போகிறது.

☆ 'சொல்லாமலே' வெற்றிப் படத்தைத் தொடர்ந்து லிவிங்ஸ்டன் புதிதாக நடிக்கும் படம் 'நெஞ்சுக்குள்ளே.' ஈரோடு முருகேசன் என்பவர் இயக்கும் இப்படத்தின் கதை-திரைக்கதை-வசனத்தையும் லிவிங்ஸ்டனே எழுதுகிறார்.

## விறுவிறு சத்யா

இந்தியில் வெற்றி நடை போட்ட படம் 'சத்யா'. தமிழிலும் அதே பெயரில் வந்திருக்கிறது. விறுவிறுப்பான படம். பிரபல இயக்குநர் ராம்கோபால் வர்மா இயக்கியுள்ளார்.

சக்கரவர்த்தியும், ஊர்மிளாவும் ஜோடியாக நடித்துள்ளனர். இப்படத்தின் இயக்குநர் ராம் கோபால் வர்மாவுடன்தான் ஊர்மிளா கிசுகிசுக்கப்பட்டு வருகிறார்.



ப்ரீதா விஜயகுமார்

## மூக்கு அழகி

'சீமைப்பசு' என்று நடிகர் பார்த்திபனால் வர்ணிக்கப்பட்டவர் நடிகை ரவளி. பார்த்திபனின் மனைவி சீதா இந்தப் பசுமீது பாய்ந்துவிட்டதால் பார்த்திபன்-ரவளி உறவு முறிந்தது பழைய கதை.

சினிமா உலகில் நிலைப்பதற்கு தேவையான திறமைகள் உள்ள ரவளிக்கு தமிழைவிட தெலுங்கில்தான் வாய்ப்புக்கள் குவிகின்றன.

அப்படியிருந்தும் தன் அழகுகளை பேணுவதில் ரவளி அக்கறை காட்டுகிறார். ஏறகனவே ஒருதடவை மூக்கு ஒப்பரேஷன் செய்துகொண்டார். மேலும் மூக்கை செம்மைப்படுத்த இரண்டாவது தடவையும் மூக்கு ஒப்பரேஷன் செய்யப்போகிறார்.

ஸ்ரீதேவி அந்தக் காலத்தில் மூக்கு ஒப்பரேஷன் செய்தாலும் செய்தார். ஏனைய நடிகைகளும் அவரை பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

## டயானா பாடல்

பிரசாந்த், இஷா கோபிகர், கஸ்தூ
ஆகியோர் நடிக்கும் படம் 'காத
கவிதை'.
'காதல் கோட்டை' பட இயக்கு
அகத்தியன் இப்படத்தை இயக்குகிறா
காதல் கோட்டையில் அகத்தியன் எழு
நலம் நலமறிய ஆவல், நீ இங்கு நல
நான் அங்கு நலமா? என்ற பாடலு
பிரபலமானது.
'காதல் கவிதை' படத்திலும் அகத்
யன் ஒரு பாடல் எழுதியுள்ளார். டயா
வைப் பற்றிய பாடல் அது.
"மம்மா.. மம்மா.. டயானா.. டயா
நீ தூங்கும் கோவிலில் ஒரு கா
பிறந்தது. நான் தேடும் பெண்மை
உன் தேசம் தந்தது. இந்த உலகம் மு
தும் விரும்பும் காதலி-எனது நெஞ்
வணங்கும். அன்னை நீ, காதலா
தாயே வாழ்கவே, வாழ்கவே நீ மம்ம
மம்மா... டயானா.. டயானா.." என்
தொடர்கிறது பாடல்.

## துயர் துடைத்த அருணாச்சலம்

### வலை வீசிய நாடாளுமன்ற உறுப்பின

நடிகை மீனா பெரும் சிக்கல் ஒன்றில் மாட்டியிருக்கிறார். மீனாவின் தாயார் காங்கிரஸ் கட்சியில் ஒரு சேவகி. முன்னாள் நடிகையான மீனாவின் தாயார் சில பெரும் காங்கிரஸ் தலைகளு சேவகியாக இருந்துள்ளார்.

தமிழ் நாட்டின் காங்கிரஸ் பெரும் தலையான மூத்த தலை கட்சியை விட்டு விலகியதோடு மீனாவின் தாயாரும் காங்கிர இருந்து விலகி, மூத்த தலைவர் ஆரம்பித்த கட்சியில் இணை கொண்டார்.

அக்கட்சியில் மூத்த தலைவருக்கு வலதுகரமான நாடாளும உறுப்பினர் மீனாவுக்கு வலை விசியிருக்கிறார்.

'ஒரே ஒரு நாளாவது என்னுடன் தங்கியிருக்க வேண்டும்!' எ மிரட்டல் பாணியில் அடிக்கடி தொல்லை கொடுக்கிறாராம்.

மூத்த தலைவரிடம் மீனாவின் தாயார் முறையிட்டபோதும் அவ கண்டுகொள்ளவில்லையாம்.

இறுதியாக அருணாச்சலத்தின் ணையைத் தேடி மீனாவே நேரில் போயி கிறார். மீனாவின் கண்ணீரை தன் வி களால் துடைத்த அருணாச்சலம் மு தலைவருடன் ஃபோனில் பேசினாராம்

அதன்பின்னர்தான் மூத்த தலை குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 'மீனாவை தொந்தரவு செய்யக்கூடாது' எ கண்டிப்பாக உத்தரவு போட்டாராம்.

மீனாவின் துயர் துடைத்த அ அருணாச்சலம் யார்? ரஜினியேதான்.

## கூச்சம்

தாஜ்மஹாலில் நடிக்கும் மனோஜ் காதல் காட்சிகளில் கூச்சப்படுகிறார். அது வேறொன்றும் இல்லை. தந்தையாரான பாரதிராஜா முன்பாக காதலித்து கட்டியணைத்து நடிக்கத் தான் கூச்சம்.

www.padippakam.com

# மிக்ரி நடிகரின் புது நட்பு

## கே.ரீ.வி. சூடான மோதல்

ல் பிரபலம் பெற்ற நடிகர் அவர். சூப்பர் ஸ்டார்போல அடிக்கடி
க நடிகருக்கு ஒரு விதத்தில் உறவினரும்கூட. பெயரில் ஜெயம் வைத்திருக்கிறார்.
ாட்ட சாட்டமான நடிகைகள் மீதுதான் ஒரு கண். முன்னர் நாயகிகளாக
மா வேடத்திலும், துணைவேடங்களிலும் நடிப்பவர்கள் என்றால் அலாதிப்

ருவருடன் தன் ஆசைகளை பகிர்ந்து கொண்டார் நடிகர். இரண்டு
ாது குணசித்திர நடிகைகள். அதில் ஒரு ஸ்ரீநடிகை கார்த்திக்குடன்
ன்னொரு ஸ்ரீநடிகை கமலுடன் காதல் வயப்பட்டவர் .
களும் நடிகருக்கு முகம் கோணாமல் இடமளித்தனர். திலக நடிகரின்
டிகைகள் ஒத்துழைக்க ஒரு காரணம். அதுதவிர குறிப்பிட்ட நடிகைகளும்
ம் உடையவர்கள். சமீபத்தில் இன்னொரு அம்மா நடிகைமீது நடிகரின்

தில் சிவகுமாரின் ஜோடியாக பல படங்களில் நடித்து ராசியான ஜோடி
நடிகை அவர். பெயரில் மித்திரம் வைத்திருக்கிறார்.
களும் தற்போது நடிக்க வந்துள்ளார். மகளுடன் தாயாரும் நடிக்கிறார்.
க்கு வந்தபோது, முன்னாள் நாயகியான மித்திர நடிகைமிடம் நடிகர்
ர்.
ம் இளமையாக இருக்கிறீர்களே" என்று நடிகர் கூற, "அப்படி
எனக்கென்ன வயதாகிவிட்டது. உங்களுடன் ஜோடியாக நடிக்கவும்
தயார்" என்று நடிகை கூறினாராம்.

இதுதான் தக்க சமயம் என்று நினைத்த நடிகர்; "எனக்கும் உங்களுக்கும் ஜோடிப் பொருத்தம் எப்படி என்பதை நான் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்" என்று குழைந்தாராம்.

நடிகர்களின் குழைவுகள் பற்றிய அனுபவ ஞானமுள்ள நடிகை, மறுநாளே நடிகரை தன் வீட்டுக்கு அழைத்து, ஜோடிப் பொருத்தம் அறிய உதவினாராம்.

ஜோடிப் பொருத்தம் சரியாக இருந்துவிட்டதால், தற்போது நடிகர் அடிக்கடி மித்திர நடிகை வீட்டின் பக்கம் காணப்படுகிறார்.

### தயாரிப்பாளர்களுக்கு சந்தோசம்

கிராமப்புற கதைகளையும், கலைகளையும் வைத்து படமெடுப்பவர் அந்த இயக்குநர். ஆனால் பாரதிராஜாவல்ல. இவரும் ஒரு ராஜாதான்

இவரது படங்களுக்கு முதலீடு செய்யும் தயாரிப்பாளர்களுக்கு குறையே இருக்காது.

தனது படத்தில் நடிக்கும் கதாநாயகியை தயாரிப்பாளருக்கு அறிமுகம் செய்து வைப்பாராம் இயக்குநர். பிரபலமான கதாநாயகிகள் இயக்குநரின் இதுபோன்ற வேலைகளுக்கு ஒத்துழைக்க மறுத்துவிடுவர். அந்தச் சந்தர்ப்பங்களில் ஏனைய நடிகைகளை தயாரிப்பாளரின் அறைக்கு அனுப்பிவிடுவாராம் இயக்குநர்.

ஆரம்பத்தில் கணக்குப் பார்த்து செலவு செய்யும் தயாரிப்பாளர்கள் இயக்குநரின் கவனிப்பால் மெய் மறந்து களை களையாக பணத்தை இறைப்பார்களாம்.

தயாரிப்பாளர்களே நடிகைகளை அழைப்பதைவிட, இயக்குநர்கள் மூலமே சமாச்சாரம் நடந்து விடுவதால் தயாரிப்பாளர்கள் வட்டாரத்தில் இதுபோன்ற இயக்குநர்களுக்கு ஏகப்பட்ட மரியாதை.

'நான் மட்டுமல்ல, புதிதாக படம் இயக்க வாய்ப்புத் தேடும்போது இன்றைய பெரும் இயக்குநர்கள் சிலரும் ஒரு காலத்தில் இப்படித்தான் நடந்து கொண்டனர்' என்று தன் உதவி இயக்குநர்களுக்கு போதிக்கிறாராம் அந்த ராஜ இயக்குநர்.

### மந்திரி மகன்

கீர்த்தனையுடன் தொடர்புடைய பெயர் கொண்டவர் அந்த நடிகை. சில படங்களில் கதாநாயகியாகவும் நடித்தவர்.

தி.மு.க.வின் பிரபலமான தலைவர் ஒருவரது மகனுக்கும் நடிகைக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு, சந்திப்பது வழக்கமாகி நெருக்கமாகிவிட்டனர்.

ஆரம்பத்தில் வெறும் நெருக்கமாக இருந்த உறவு, தற்போது சென்னை கொட்டிவாக்கம் என்ற பகுதியில் நடிகைக்கு வீடுவாங்கிக் கொடுக்கும் அளவுக்கு கடும் நெருக்கமாகியுள்ளதாம்.

இந்த விடயம் பிரபல புள்ளிக்கும் தெரியும். அவரும் சினிமா நடிகைகளுடன் தொடர்பு உள்ள புள்ளிதான். 'தந்தை எட்டடி பாய்ந்தால் மகன் பதினாறடி பாய்கிறான்' என்று விஷயமறிந்தவர்கள் விளக்குகிறார்கள்.

குறிப்பிட்ட பிரபல புள்ளி சில காலத்தின் முன்னர் இந்திய மத்திய அரசில் மந்திரியாகவும் இருந்தவர்.

### இவரும் நெருக்கம்

சூரியனின் பெயர் கொண்ட இரண்டெழுத்து தொலைக்காட்சிக்கும், மலரின் பெயர் கொண்ட தமிழக சஞ்சிகைக்கும் இடையே மோதல் சூடுபிடித்திருக்கிறது.

அந்த பிரபல சஞ்சிகை கிசுகிசு ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட தொலைக்காட்சியில் குளிர்பான நிகழ்ச்சியின் பெண் அறிவிப்பாளருக்கும், தொலைக் காட்சி நிறுவனத் தலைவருக்கும் இடையே நெருக்கமாம்.

அந்த அறிவிப்பாளரனியின் குளிப்பான குரலில் மட்டுமன்றி, உடலிலும் மயங்கிய நிலையத் தலைவர் ஒரு மாளிகையும், காரும் வாங்கிக் கொடுத்துள்ளாராம்.

குறிப்பிட்ட அறிவிப்பாளரணி சிங்கப்பூரில் குமார நடிகருடன் சிங்காரம் கண்டவர்.

### பந்தா சந்தோஷ்

புதிய இயக்குநர் இந்திரஜித் இயக்கும் பந்தா படத்தின் நாயகன் சந்தோஷ். இவர் புதியவர் என்றாலும் சினிமா உலகுக்கு தேவையான கராத்தே, நீச்சல் போன்ற கலைகளை கற்றுள்ளார்.

'பந்தா' படம் நகைச்சுவையை பின்னணியாகக் கொண்ட படம். சந்தோஷ் கலக்குகிறார். படம் வந்தால் கலக்குமா தெரியவில்லை.



அஜித்குமார்-ரிச்சா
படம்: உயிரோடு உயிராக


ரசிகா
படம்: என்றும் ஆனந்தம்

### இதயத்தில் நீ

'கோடீஸ்வரன்' படத்தில் தயாரிப்பாளர் குஞ்சுமோனின் மகன் எபி கதாநாயகன். சிம்ரான்தான் ஜோடி. குஞ்சுமோனின் அடுத்த படத்திலும் எபிதான் நாயகன். படத்திற்கு 'என் இதயத்தில் நீ' என்று பெயரும் சூட்டிவிட்டனர். புதிய இயக்குநரான பாலாஜி இயக்கவுள்ளாராம்.

### அப்பா சிவாஜி

'படையப்பா' படத்தில் ரஜினியின் தந்தையாக சிவாஜி நடிக்கிறார் என்பது தெரிந்த செய்திதானே. சிவாஜியும், ரஜினியும் 'நான் வாழவைப்பேன்', 'ஜஸ்டிஸ்கோபிநாத்', 'படிக்காதவன்', 'விடுதலை' போன்ற பல படங்களில் முன்னரும் இணைந்து நடித்துள்ளனர். கமலைவிட ரஜினியுடன்தான் அதிக படங்களில் நடித்துள்ளார் சிவாஜி.

'படையப்பா'வில் ரஜினியின் தங்கையாக நடிக்கிறார் ஷாலினி. ஜோடியாக நடிக்க விரும்பினாராம் ஷாலினி. ரஜினிதான் 'அது நன்றாக இருக்காது' என்று கூறினாராம்.

### காதோடு சொல்லுகிறோம்

'காதலுக்கு மரியாதை' கொடுத்த 'ஷா' நடிகை வீட்டில் தந்தைக்குலம் பெரும் தலைவலியாம். நடிகைகளின் தாய்க்குலம்தான் பந்தா பண்ணுவதும், நிபந்தனைகள் போடுவதும் வழக்கம். 'ஷா' நடிகை வீட்டில் தந்தைக்குலம் தான் சட்டம் போடுகிறார். 'தமிழ்ப் படங்கள் என்றால் நடிக்காதே, தமிழ்ப் பத்திரிகைகள் என்றால் பேட்டி கொடுக்காதே' என்று கூறிவைத்திருக்கிறாராம். மலையாளப்படம் என்றால் உடனே ஓ.கே. சொல்லிவிடுகிறார்கள். மொழிப் பற்று.

முதல் படத்திலேயே தேசிய விருது பெற்ற கறுப்பழகி நடிகை அவர். தற்போது அவருக்கு படவாய்ப்புக்கள் குறைந்துவிட்டன. அதனால் தன் தங்கையை களத்தில் இறக்க முடிவு செய்திருக்கிறாராம். நடிப்புப் பயிற்சி இப்போதே ஆரம்பமாகிவிட்டதாம். பயிற்சி கொடுப்பவர் நடிகைக்கு நெருக்கமான இயக்குநராம். பயிற்சி மட்டும் கொடுத்தால்போதும் என்று முன்னெச்சரிக்கையாக கூறியிருப்பாரோ நடிகை?

அமெரிக்காவில் இருந்து திரும்பிவந்த 'பிகா' நடிகை நகைச்சுவை வேலுடன் நெருக்கமாக இருப்பது பரகசியம். இந்தளவுக்கு ஏன் இறங்கிப்போனார்? என்று நடிகையின் முன்னாள் நண்பர்களான சில பிரபல நடிகர்கள் கிண்டல் பண்ணுகிறார்களாம். 'அவர்களை என் முன்னாடி கிண்டல் பண்ணச் சொல்லு, அத்தனைபேர் வண்டவாளங்களையும் சுண்டல் பண்ணித் தருகிறேன்' என்கிறாராம் நடிகை.

தமிழ்நாட்டுக்கு வந்தால் தொல்லை கொடுக்க மாட்டேன் என்று சரச நடிகர் கூறியதை நம்பி, மும்பையிலிருந்து திரும்பினார் மூன்றெழுத்து 'மா' நடிகை. ஆனால் நடிகர் வாக்குத் தவறி விட்டார். மாவீர நடிகருடன் நடிகை ஜோடி சேரப்போவதை அறிந்து ஃபோன் செய்தாராம். "அந்த நடிகையுடன் ஜோடியாக நடிக்காதே!" என்றாராம். ஆனாலும் மாவீர நடிகருக்கு 'மா' நடிகையில் முன்பிருந்தே ஒரு இதுவாம். அதனால் சரச நடிகரின்வேண்டுகோளையும் மீறி 'மா' நடிகையுடன் ஜோடி சேரப்போகிறார். அது மட்டுமல்லாமல் நடிகையிடம் நெருக்கமாகிக் கொள்வதற்காக, சரச நடிகரின் வேண்டுகோள் பற்றியும் கூறிவிட்டார் மாவீர நடிகர். நெகிழ்ந்து போன நடிகை மாவீர நடிகரின் மீசையை செல்லமாக முறுக்கி விட்டாராம். நெருக்கம் தொடரும்.


சிரஞ்சீவி-ரோஷினி
படம்: மாஸ்டர்

### முரளியின் ஆகாயம்

மார்க்கெட் நிலவரப்படி ரஜினி, கமல், விஜய்க்கு அடுத்த
லையில் இருப்பவர் முரளி. அதனால் தயாரிப்பாளர்கள்
ரட்டுகிறார்கள். முரளி வெகு உஷார். கதை கேட்டுத்தான்
டிக்கச் சம்மதிக்கிறார். இடையே ஏற்பட்ட பயங்கர
ழ்ச்சியை அவர் மறக்கவில்லை.
முரளி புதிதாக நடிக்கும் படம்: 'ஆகாயம்'. கதாநாயகி
ன்னமும் முடிவாகவில்லை. பிரகாஷ்ராஜ், மணிவண்ணன்,
வேக், வையாபுரி, டெல்லி கணேஷ் ஆகியோர் நடிக்
ன்றனர். இயக்கம்: நாகராஜ். இவர் 'தினந்தோறும்'
டத்தை இயக்கியவர்.

### பொண்ணுவீட்டுக்காரன்

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் சத்யராஜ்
நடித்த 'வேலை கிடைச்சிடுச்சு', 'நடிகன்',
வால்டர் வெற்றிவேல்' போன்ற படங்கள் ஹிட்.
'வாத்தியார் வீட்டுப் பிள்ளை', 'ரிக்ஷா மாமா'
டன் பிறப்பு' போன்ற படங்கள் சுமார் ரகம்.
பி.வாசு இயக்கத்தில் சத்யராஜ் தற்போது
நடித்துவரும் படம் 'பொண்ணு
வீட்டுக்காரன்'. இப்படம் ஹிட்டாகும்
என்று அடித்துச்
சொல்கிறார்
வாசு.


படிப்பகம்

www.padippakam.com

## ஏகாந்த பொழுதுகள்

'உன்னைக் காணாமல்
இன்னுமொரு பொழுது
கழிந்துவிட்டது-
கண்மணி...!'

காதலை-நாம்
தத்தெடுத்தோமா...?
காதல்-நம்மை
தத்தெடுத்ததா...?
தொடர்புகள்
இல்லாமலே
தொடர்ந்து
அன்பில் நாம்!

எங்காவது-நாம்
எதேச்சையாய்
கண்டு கொண்டாலும்,
வாயுள்ள ஊமைகளாய்
இருப்பது-நம்
காதலின்
புனிதம் என்பதை
யாரும் அறியார்!

ஏன்-
நல்லெண்ணத் தூதுவனாம்
கடிதம் கூட
நாம்-
கைமாறாமல் இருப்பதும்
காதலின்-
பொறுமையான
நம்பிக்கையால்தானே..?

இப்போதெல்லாம்
என்-
தெருக்களில்
தபால்காரனின்
மணிச் சத்தம்-
உன்-சேதிக்காய்
ஒலிப்பதில்லை!
மாறாக...
எப்போதோ-
என்னுள் பதிவான
உன்-
சிரிப்பொலியை
கேட்டுக்
கொண்டிருக்கிறேன்!

உன்னைக் காணாத
இந்தப் பொழுதுகளில்
அந்த-
நெருக் கொழுங்கைகள்..
வாகை மர நிழல்...
கோயில் மண்டபம்...
தென்னந் தோப்பு...
கல்வி வளாகம்...
இன்னும்...
இன்னும்...
உன்னைக் கண்டு-
களிப்படைகிறேன்!

ரெட்ணம் சாந்தசீலன்-
பொத்துவில்.

## அகதி முகாம்!

அகதியாகி
அவதிப்பட்டு
புகலிடம் இன்றி
புலம்புகின்றோம்!
சொந்தம்...
உறவுகள்..
தூர ஓடின!
சொந்தக் காலை
இழந்து நொந்து
இரவல் காலில்
அகதி முகாமில்
அல்லல்பட்டு,
அடி உதைபட்டு...
அடிமைப்பட்டு...
கண்ணீர் விட்டு
புலம்பியழுது...
கஞ்சியின்றி,
கந்தையின்றி,
ஒட்டிய வயிறு..?
பிச்சையுமில்லை;
கச்சையுமில்லை!
ஓலம் போடும்
கூட்டம் பாரீர்!
ஆட்டு மந்தைகள்
வாழ்வும் மேலாம்...!
அரச பண்ணை
மந்தைகள் எல்லாம்
நேரம் தவறா
உணவு உண்டு
போஷாக்காக...
கொழுப்பு ஏறி...
வாழும்போது...
மனிதர் நாங்கள்
மனிதம் இல்லை!
புனிதம் இல்லை!
தமிழர் நாங்கள்
தரம் குறைந்த...?
'பண்டித்தெமிளு!'

கயல்வண்ணன்-வவுனியா.

## சொட்டு இரத்தம்

இந்தப் பிரபஞ்சம்
உயிரோடு கொளுத்தப்படுகின்றது...
மனிதா உன்னை நீ மாற்றிக்கொள்!
--!--
வளி கெட்டுப் போனதால்
சுவாசப்பைகள் கெட்டுப் போயின;
எனினும்
பிளாந்திக்கு சுவாசப்பைகள் உண்டு!
--!--
நீரும் மாசடைந்ததால்
சிறு நீரகம் மாசடைந்தது...!
அதற்கும், இறப்பரோ பிளாந்திக்கோ!
--!--
ஓசோன் கிழிந்து
நஞ்சு இறங்குகிறது...!
அது பற்றி எவருக்கும் கவலையில்லை!
--!--
ஏனெனில் இங்கு
மனிதங்களை
நேரடியாகக் கொல்லுவதற்கு
'புரமோசனும்' வழங்கப்படுகிறது!
--!--
இப்போது
அணுகுண்டு தடைதேவையில்லை;
மரம் வெட்டுவதை நிறுத்து!
--!--
எப்படியோ
மனிதர்களை ஒழித்து விடும் இவர்கள்
ரோபோக்களையாவது-
வாழவிடுவார்களா?

மெய்.யே. தஸ்ரிப்- அக்கரைப்பற்று.

## தேன் கிண்ணம்

## அந்த எல்லைகள் நோக்கி...!

அதோ!
பொங்கு கடலில் தென்படும் கதிரவன்
இன்றைய விடியலாய்
எழுந்து வருகையில்...
நீ மட்டும் ஏன்?
நிம்மதி இழந்தவனாய்...?
**
"பஞ்சமும்; பசியும்
எனைக் கொஞ்சி விளையாடுகையில்...
வாழ்வில் மிஞ்சுவதென்ன நமக்கு?"
என்று-
விரக்தி
உனக்கு வேண்டாம்!
**
முடிவின்றிப்போகும்
இந்த வாழ்க்கைப் பயணத்தில்
சுமந்து செல்லும் துயரங்களை
தூசியாக உதறி விட்டு
நீ-
எழுந்து நட...
ஒரு
விடிவு தெரியும் வரை...!
நீ-
தொடர்ந்து நட!

அலெக்ஸ் பரந்தாமன்.



அன்று - குழந்தையாக



இன்று - குடும்பஸ்தனாக

மட்டையை தூக்கினால் ஆவேசம். டென்ஷன். ஓய்வற்ற போட்டிகள். ஓய்வு கிடைப்பது அரிது. கிடைக்கும் நேரத்தை தன் மனைவியுடனும் பெண் குழந்தையுடனும் கழிப்பதில் ஆனந்தம். 'மிக ஜாலியான மனிதர் சச்சின்.' என்கிறார் அஞ்சலி.

# இன்னுமொரு பிரட்மன்

கிரிக்கெட் உலகின் அசத்தல் மன்னர் பிரட்மனுக்கு ஈடாக இதுவரை வேறெந்த வீரரும் உருவாகவில்லை. டெண்டுல்கர் அந்த இடத்தை நிரப்பக்கூடும் என்பது கிரிக்கெட் விமர்சகர்களின் அபிப்பிராயம்.

பிரட்மனுடன் டெண்டுல்கரும், ஷேன் வோர்னும். களத்தில் இருவரும் எதிரும் புதிருமாய் மோதுவர். ஷேன் வோர்னின் பந்துகளை சிதறடிப்பது டெண்டுல்கருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. களத்திற்கு வெளியே இருவரும் நல்ல நண்பர்கள்.

டெண்டுல்கருக்கு ராஜீவ் விருது வழங்குகிறார் இந்திய ஜனாதிபதி. இன்னமும் பல விருதுகள் காத்திருக்கின்றன.





## இந்த வாரம் உங்கள் பலன்

(04.10.1998 தொடக்கம் 10.10.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| சிம்மம் | – | செவ்வாய், ராகு. |
| கன்னி | – | சூரியன், சுக்கிரன். |
| துலாம் | – | புதன். |
| மீனம் | – | சனி. |
| கும்பம் | – | குரு, கேது. |

சந்திரன்- மேடம், இடபம், மிதுனம், கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| திங்கள்- காரியக்கேடு, கவலை மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, நிம்மதி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- இல்லச் சிறப்பு, பொருள் சேர்க்கை. | மாலை | 6 | மணி |
| வெள்ளி- ஆலயதரிசனம், குடும்ப சுகம். | பி.ப. | 1 | மணி |
| சனி- பெரியோர் வரவு, நிம்மதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- இனசனச் சேர்க்கை, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்-தெய்வானுகூலம், காரிய சித்தி. | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் மந்தம், மனக்கிலேசம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | மாலை | 5 | மணி |
| வெள்ளி- வாக்குப் பலிதம், சுபகாரிய சித்தி. | பி.ப. | 1 | மணி |
| சனி- கௌரவக் குறைவு, மனச்சஞ்சலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்- ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் அலைச்சல், பொருள் விரயம். | காலை | 6 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, காரியசித்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- குடும்ப சுகம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன ஒற்றுமை, சுபகாரியம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் சந்திப்பு, முயற்சி பலிதம். | மு.ப. | 9 | மணி |
| சனி- மனச்சஞ்சலம், வீண் வாக்குவாதம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணவரவு | காலை | 7 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவம். | மாலை | 6 | மணி |
| புதன்- இனசன நன்மை, இல்லச் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, பொருள் செலவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பணச் செலவு, நிம்மதியின்மை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்பழி கேட்டல், கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, அரச அனுசரணை | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பண விரயம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- இனசன ஒற்றுமை, பணவரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, புதிய அனுபவம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- தெய்வதரிசனம், இனசன சேர்க்கை. | பகல் | 11 | மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், விருந்தோம்பல். | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- புதிய தொழில், கௌரவம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- சுற்றத்தார் பகை, மனச்சஞ்சலம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- காரியக்கேடு, அலைச்சல். | மாலை | 6 | மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தெய்வதரிசனம், நிம்மதி. | பகல் | 11 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், விருந்தோம்பல். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தெய்வதரிசனம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- இனசன வரவு, இல்லச் சிறப்பு. | மாலை | 4 | மணி |
| செவ்வாய்- அலைச்சல், பொருட் செலவு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பணவரவு. | மாலை | 6 | மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், கௌரவம். | காலை | 8 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், அலைச்சல். | பகல் | 12 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதறகால)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனப்போராட்டம், பண விரயம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், நிம்மதி | காலை | 6 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசனவரவு, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தெய்வதரிசனம், காரியம் கைகூடல். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| சனி- காரியசித்தி, நிம்மதி. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | காலை | 8 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- சுபகாரியம், பணவரவு. | பகல் | 11 | மணி |
| புதன்- அந்நியர் பகை, மனச்சஞ்சலம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- குடும்பசுகம், பிரயாணம். | பகல் | 12 | மணி |
| சனி- அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | மாலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தேகசுகம் பாதிப்பு, நிம்மதியின்மை. | மு.ப. | 10 | மணி |
| புதன்- நல்ல தகவல், மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கவலை நீங்கும். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- இல்லற சுகம், கௌரவம். | மு.ப. | 9 | மணி |
| சனி- பெரியோர் பகை, மனச் சஞ்சலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்பழி, கடன் தொல்லை. | காலை | 8 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, புதிய ஒப்பந்தம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பெரியோர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- குடும்பம் பற்றிய கவலை, நிம்மதியின்மை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், பணவரவு. | மாலை | 6 | மணி |
| வெள்ளி- ஆலயதரிசனம், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | காலை | 8 | மணி |
| திங்கள்- உறவினர் பகை, பொருள் நட்டம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனச்சஞ்சலம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவம். | மாலை | 6 | மணி |
| வியாழன்- குடும்பசுகம், இனசன வருகை. | காலை | 7 | மணி |
| வெள்ளி- இல்லச் சிறப்பு, மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி- புதிய சிந்தனை, மனப் பயம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## மென் கேக்



வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு கேக் தயாரிக்க விரும்புபவர், அது மென்மையாக இருக்க வேண்டுமானால் பின்வரும் முறைகளைப் பின்பற்றுங்கள்.

◆ கேக் தயாரிக்க புதிய மாவு, புதியமுட்டை, சுத்தமான வெள்ளை சீனி ஆகியவற்றைப் பயன் படுத்த வேண்டும்.

◆ கேக் கலவையை கேக் தட்டில் ஊற்றும் போது, தட்டின் அரைப் பகுதி அல்லது அரைப்பகுதிக்கு சற்றுக் கூடுதலாக மட்டுமே ஊற்ற வேண்டும்.

◆ கேக் தயாரிக்கும் போது முதலில் மாஜரின், பின் முட்டை மஞ்சட்கரு, அதன் பின் சீனி ஆகியவைகளைச் சேர்த்து நன்றாக அடிக்க வேண்டும்.

◆ கேக் தயாரித்தபின் அதை துண்டுகளாக வெட்டி டின்னில் அடைத்து வைக்கும் முன் ஒரு சில வெட்டிய பாண் துண்டுகளைப் போட்டு வையுங்கள். கேக் காய்ந்து போகாமல் இருக்கும்.

## இள நரை போகுமா?



**பற்கள் பளபளக்க...**

சிலரது பற்கள் மஞ்சள் நிறமாகவும் கறைபடிந்தும் காணப்படும். இதைப் போக்க சிறிது உப்புத்தூளுடன், நன்றாகக் காயவைத்துப் பொடியாக்கிய தோடம்பழத் தோலைச் சேர்த்து பற்களைத் துலக்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்தால் பற்களின் கறைகள் நீங்கி, வெண்மையாகப் பளபளக்கும்.

**தலையில் பொடுகுப் புண்ணா?**

தலையில் உண்டாகும் பொடுகு, அதனால் ஏற்படும் புண் ஆகியவற்றிற்கு தயிர் ஒரு சிறந்த மருந்து. அதுமட்டுமன்றி தலைமுடியையும் தயிர் நன்கு பாதுகாக்கிறது. தயிரை தலையில் நன்கு தேய்த்து, சிறிது நேரம் ஊறிய பிறகு குளித்தால் போதும். தலையிலும் முடியிலும் படிந்துள்ள அழுக்கு, அதனால் உண்டாகும் பொடுகு, புண் முதலியன நீங்கி கூந்தல் பளபளப்புப் பெறும்.

**இளநரை மறைய...**

இளநரையை நீக்க வேண்டுமா? தேயிலைச் சாயத்தை (கடும் சாயமாக இருக்க வேண்டும்) சிறிதளவு எடுத்து, அதில் பொடியாக்கிய மருதோன்றியை இரண்டு மேசைக்கரண்டியைக் கலக்கவும். குறைந்தது 5 மணித்தியாலம் ஊறவைத்துப்பின் நரையுள்ள பகுதியில் இந்தக் கலவையைத் தேய்க்க வேண்டும். ஒரு மணிநேரம் சென்றபின் தலையை அலசி விடுங்கள். இப்படித் தொடர்ந்து செய்தால் கூந்தல் கருமையடையும்.

**ஹேயார் பின் வேண்டாமே...**

தலையில் குத்திக் கொள்ளும் ஹேயார் பின்களோடு இரவில் தூங்காதீர்கள். இவை தலைமுடியை இழுத்து வலுவிழக்கச் செய்யும்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர். செல்வி கே.பிரபா, காலி வீதி, வெள்ளவத்தை.

பரிசை அணிந்து காட்சி தருகிறார்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EM

பெயர்:........................

முகவரி:........................

................................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-10-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1778, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

**55** புவனா

தனது உடல் அழகை கட்டுக்குலையாமல் வைத்திருக்க டயானா உடற்பயிற்சி செய்வது வழக்கம்.

இலண்டன் நகரில் பிரபலமான உடற்பயிற்சி கழகம் இருக்கிறது. அதன் உரிமையாளர் பிரைஸ் டெய்லர்.

டயானா அதிகாலையிலேயே சென்று உடற்பயிற்சியை முடித்துக்கொண்டு திரும்பி விடுவார். அவருக்காக பிரத்தியேகமான பயிற்சிக் கூடம் ஒன்றை உருவாக்கித் தந்திருந்தார் டெய்லர்.

ஆனால் டயானா பயிற்சி செய்வதை யாரும் பார்க்க முடியாது.

டயானாவை பின் தொடர்ந்த பத்திரிகையாளர் ஒருவருக்கு, அவர் தினமும் காலையில் பயிற்சி கூடத்திற்கு செல்வது தெரிந்து விட்டது.

தனது பத்திரிகை நிறுவனத்திற்கு தகவலைக் கூறினார்.

டயானா பயிற்சி செய்யும் காட்சியை படமாக எடுத்து வெளியிட்டால் பத்திரிகையின் பெயரும் பிரபலமாகும். விற்பனையும் எகிறும் என்று கருதியது பத்திரிகை நிறுவனம்.

குறிப்பிட்ட படங்களை சர்வதேச செய்தி ஸ்தாபனங்களுக்கு விற்பனை செய்தாலே போதும். ஏராளமான பணம் கறக்கலாம். ஒரே இரவில் கோடீஸ்வரராகிவிடலாம் என்று நினைத்தார் பத்திரிகையாளர்.


உடற் பயிற்சிக் கழக உரிமையாளரை அணுகுவதற்கான வழிகளை தேடினர். தேடலுக்கு பயன் கிடைத்தது.

டெய்லரின் நண்பர் ஒருவர் குறிப்பிட்ட பத்திரிகையாளருக்கும் நண்பர். அவர் மூலம் தான் டெய்லருடன் பரிச்சயம் ஏற்பட்டது.

டெய்லர் முதலில் மறுத்தார். "என்னை நம்பி இங்குவரும் இளவரசிக்கு நான் எப்படித் துரோகம் செய்வது? சரிவராது, ஆளைவிடுங்கள்" என்று கூறினார்.


மறுத்தவர் முன்பாக பணக்கட்டை தூக்கி ஆட்டினார்கள். டெய்லரின் மனம் பேதலித்தது.

"இங்கு வைத்துத்தான் படம் எடுக்கப் பட்டது என்று தெரிந்தால் பெண்கள் எவரும் இங்கே பயிற்சிக்கு வரமாட்டார்கள். என் தொழில் என்னாவது?" என்று கேட்டார்.



"இந்தத் தொழிலை உமது வாழ்நாள் முழுக்கச் செய்தாலும் கிடைக்காத பணம் உமக்கு தரப்போகிறோம். உமது பெயரும் பிரபலமாகும். பின்னர் என்ன யோசனை? ஒப்புக்கொள்ளும். தேடிவரும் சொர்க்கத்தை நிராகரிப்பது முட்டாள்தனம்!" என்று நண்பரும் போதித்தார்.

## கூரைக்குள் இருந்த கமரா



டெய்லர் சம்மதித்தார். டயானாவின் உடலை இரகசியமாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசை டெய்லருக்கும் இருந்தது.

### இரகசிய இரசிப்பு

குறிப்பிட்ட பத்திரிகையாளர் அணுகுமுன்னரே டெய்லர் ஒரு திருட்டுத்தனம் செய்திருந்தார்.

டயானாவின் உடல் மீது கொண்ட ஆசையால், அவர் பயிற்சி செய்வதை காண சிறு துவாரம் ஒன்று அமைத்திருந்தார். அந்தத் துவாரம் வழியாக டயானா பயிற்சி செய்யும்போது பார்த்து இரசித்து வந்தார்.

என்றாவது ஒருநாள் டயானா தன் உடைகளை களைந்து மாற்று உடை அணியக்கூடும் என்று, அந்நாளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்.

ஆனால் டயானா பயிற்சி உடைக்குமேல் கவுண் அணிந்து வருவார். பயிற்சி முடிந்ததும் கவுணை அணிந்து கொண்டு சென்று விடுவார்.

டெய்லருக்கு தினமும் ஏமாற்றம்தான். டயானாவை நேரில் பார்க்கும் போது மிகவும் நாகரிகமான மனிதர்போல ஒதுங்கி நடந்து கொள்வார்.

'இந்தப் பூனையும் பால் குடிக்கும்' என்று டயானா நினைத்தாரில்லை. அதனால் டெய்லரை மரியாதையாக நடத்தினார். தினமும் ஹலோ சொல்லி புன்னகைத்து விட்டுப் போவார்.

1990ம் ஆண்டு செப்டம்பர் மாதம் டயானா உடற்பயிற்சிக் கழகத்தில் சேர்ந்தார். உறுப்பினர் அட்டையில் அவரது பெயர் 'மேன்மை தங்கிய இங்கிலாந்து இளவரசி' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

முதுகு, மார்பு, கழுத்து, வயிறு, கைகள் ஆகிய பகுதிகளுக்கு என்று விசேஷ உடற்பயிற்சிகளை டயானா செய்வார்.

டயானாவை படம் எடுப்பதற்கு கமராவை எங்கு பொருத்தலாம் என்று ஆராய்ந்தனர்.

பயிற்சிக் கூடத்தின் கூரையில் வீடியோ கமராவை பொருத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. கூரையில் இருந்தால்தான் கண்ணில்படாது. காட்சிகளும் கச்சிதமாக பதிவாகும் என்று கருதினர்.

பயிற்சிக் கூடத்தோடு நிறுத்தினால் போதுமா? குளியலறையிலும் படமெடுக்க வேண்டுமா? அங்கும் ஒரு இரகசிய கமரா பொருத்தினால் அரிய காட்சிகள் காணலாமே என்றும் நினைத்தனர்.

"ஏனையோர் போன்று டயானா பயிற்சி முடிந்ததும் குளியல் அறைக்குச் செல்ல மாட்டார். நேராக காரில் ஏறி வீட்டுக்குப் போய்விடுவார். ஆகவே குளியலறையில் படம் எடுப்பது முடியாத காரியம்!" என்று கூறிவிட்டார் டெய்லர்.

கூரையில் தன்னை குறிவைத்துக் கொண்டு கமரா ஒன்று குந்தியிருப்பதை அறியாமல் டயானா பயிற்சியில் ஈடுபட்டார்.

பல மாதங்களாக கூரையில் இருந்தது கமரா. அம்சமான காட்சிகள் அகப்படுவதற்காக பொறுமையாக காத்திருந்தனர்.

### உக்கிர கோபம்

அவர்கள் எதிர்பார்த்த காட்சி கிடைக்கவில்லை. இறுதியில் கிடைத்த வரை இலாபம் என்று டயானா பயிற்சி செய்யும் காட்சிகளை பரபரப்பாக செய்தி நிறுவனங்களுக்கு வழங்கி, பத்திரிகையிலும் பிரசுரித்தனர்.



'டயானா பயிற்சி செய்யும் காட்சி. அந்தரங்கமாக எடுத்த புகைப்படங்கள்' என்று வெளியான செய்தியும், படங்களும் உலகெங்கும் சலசலப்பை ஏற்படுத்தின.

டயானாவுக்கு உக்கிரமான கோபம் வந்தது. தனது சட்டத்தரணியை தொடர்பு கொண்டார். உடனே நீதி மன்றத்திற்கு செல்லுமாறும், தடை உத்தரவு வாங்குமாறும் கூறினார்.

ஆனால் பத்திரிகைகள் விடவில்லை. பயிற்சிக் கூட உரிமையாளரின் பேட்டியை வெளியிட்டன.

"இரண்டு குழந்தைகளுக்கு அம்மா என்றால் நம்பவே முடியாது. மிகவும் அழகான உடம்பு. கட்டுக்குலையாமல் இருக்கிறது. டயானாவுக்கு பளிச்சிடும் கண்கள். வெள்ளை வெளீரென்ற பற்கள். தலைச்சிறந்த மொடல் அழகிகளைத் தவிர, டயானாவைவிட வேறு அழகான பெண்களை யாராவது காட்டுங்கள் பார்க்கலாம்?" என்று சவால்விட்டார் டெய்லர்.

'உலகில் மிகப் பெரிய மோசடிப் பேர்வழி ஒருவர் இருக்கிறார் என்றால் அது இந்த ஆசாமியேதான்!' என்று கூறினார் டயானா.

எனினும் பத்திரிகைகளில் படங்களைப் பார்த்த ஆண்கள் டயானாவின் உடலழகில் கிறங்கினர். பெண்கள் பொறாமைப்பட்டனர். பலர் தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க டயானா போல உடற்பயிற்சி செய்யவும் ஆரம்பித்தனர்.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எஸ். சகாயராணி,**
40/16, மோர்கன் வீதி, கொழும்பு-02.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 21


- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





எண்ணிய முடிதல் வேண்டும்!
நல்லவே எண்ணம் வேண்டும்!
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!
தெளிந்தநல் லறிவு வேண்டும்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சிறு துரும்பும்.....

அது ஒரு சிறிய காடு. அந்தக் காட்டில் ஒரு மான் வசித்து வந்தது. அது அதிக கர்வம் கொண்டது.

ஒரு நாள் மான் காட்டில் இரை தேடிச் சென்றபோது துளசிச் செடி ஒன்று அதன் கண்ணில் பட்டது. நன்கு வளர்ச்சியடைந்து, அடர்த்தியாக இருந்த அந்தத் துளசிச் செடியைச் சாப்பிட எண்ணி அதனருகில் வந்தது மான்.



தன்னை தின்பதற்குத்தான் மான் வருகிறது என்பதைக் கண்ட துளசிச் செடி,

"மான் நண்பரே! என்னை நீங்கள் சாப்பிட்டு விடாதீர்கள். நான் இப்போதுதான் நன்கு வளர்ச்சியடைந்துள்ளேன். இனி நான் பூவாகப் பூத்து, காயாகக் காய்த்து மனிதர்களுக்கு மருந்தாக உதவ வேண்டும். ஏதோ ஒரு வகையில் உங்களுக்கும் நான் உதவுவேன். அதனால் தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டது.

அதைக் கேட்டு மான் ஏளனமாகச் சிரித்தது.

"உன்னைப் பார்க்கப் பாவமாய் இருக்கிறது. இருந்த இடத்தை விட்டு ஓரடி கூட உன்னால் நகர முடியாது. எனக்கு எப்படி உதவுவாய்? நன்றாகச் செழித்து வளர்ந்திருக்கும் நீ என் பசியைப் போக்க மட்டும்தான் எனக்கு உதவ முடியும்." என்று சிரித்தபடி அலட்சியமாகச் சொன்னது மான்.

அதைக் கேட்ட துளசி மிகவும் பணிவுடன், "என்னைச் சாப்பிடாமல் விட்டுவிட்டால் உங்களை நான் ஒரு போதும் மறவேன். எந்த விதத்திலாவது உங்களுக்கு உதவுவேன்!" என்று சொன்னது.

அதைக் கேட்ட மான் மீண்டும் கேலிச் சிரிப்புச் சிரித்தது.

அப்போது யாரோ, நடந்து வருவது போல் சத்தம் கேட்டது. சத்தம் வந்த திக்கில் வேடன் ஒருவன் அம்பு- வில்லுடன் வந்து கொண்டிருந்தான். வேடனைக் கண்டு விட்டு ஓடினால் நிச்சயம் அவன், அம்பெய்து தன்னைக் கொன்று விடுவான் என்று பயந்து நடுங்கியது மான்.

உடனே துளசிச் செடி மானிடம்,

"நண்பரே! அடர்ந்து வளர்ந்திருக்கும் என் இலைகளுக்குள் பதுங்கிக் கொள்ளும். அச்சம் வேண்டாம்!" என்றது.

துளசி சொல்வது சரியெனப்படவே அதன் அடர்ந்த கிளைகளுக்குள் ஒளிந்து கொண்டது மான். துளசிச் செடிகளால் மூடியிருந்த மான். வேடனின் கண்களுக்குத் தெரியவில்லை. அதை அறியாமல் அவன் தன் வழியே சென்றான்.

வேடன் சென்ற சிறிது நேரத்தின் பின் வெளியே வந்த மான் துளசிச் செடியை நன்றியுடன் பார்த்தது.

நாம் எதையும் அலட்சியப் படுத்தக் கூடாது. 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பார்கள். அதுபோல் எமக்கு எந்தவொரு பொருளும் ஏதாவது விதத்தில் பயனளிக்கும்.

## அதிசயம் - ஆனால் உண்மை!




### ஒக்கிட் தொப்பிகள்:

இந்தோனேஷியாவில் ஹால் மஹாரா என்ற இடத்தில் வாழும் பழங்குடிகள் ஒக்கிட் பூவின் இதழ்களால் செய்யப்பட்ட தொப்பியை அணிகிறார்கள். இது மாதக் கணக்கில் வாடாமல் நறுமணம் வீசும்.

### மணல் நாணயம்:

முற்காலத்தில் சீனாவில் மணல் கொண்டு உருவாக்கப்பட்ட நாணயம் புழக்கத்தில் இருந்தது. இது பார்வைக்கு, குதிரை தேய்க்கும் இரும்புச் சீப்புப் போல் இருக்கும்.





### பாடும் ஜாடிகள்:

16,17,18 ஆகிய நூற்றாண்டுகளில் ஜெர்மன் நாட்டில் உள்ள சில பீங்கான் ஜாடிகளில் மதுவை நிரம்பும்போது இனிய இசை ஒலிக்கும்.

### எரியாத படம்:

இத்தாலி நாட்டில் பெட்ரோஸ் என்பவரது வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலாகியது. ஆனால் அந்த வீட்டில் இருந்த அன்னை மரியாளின் படம் மட்டும் அப்படியே இருந்தது. இத்தனைக்கும் இது மரப்பலகைமீது வர்ணம் தீட்டப்பட்ட படமாகும்.



## வாரம் ஒரு நாடு

### ஸ்லோவேனியா

| | |
|---|---|
| தலைநகர் | - ஜுப்ல்ஜானா |
| பரப்பு | - 20,251 சதுரகிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 19 இலட்சம் |
| மொழி | - ஸ்லோவேனியன் |
| எழுத்தறிவு | - 90% |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - டொலர் |
| தனி நபர் வருமானம் | - 6330 டொலர். |

**அமைவிடம்:**

யூகோஸ்லாவியாவின் முன்னாள் குடியரசுகளில் ஒன்றான ஸ்லோவேனியா ஆஸ்திரியா, ஹங்கேரி, குரோஷியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளின் நடுவே அமைந்துள்ள ஒரு நாடாகும்.

**வரலாறு:**

யூகோஸ்லாவியாவில் இருந்து 1991ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதி சுதந்திரம் பெற்றது. யூகோஸ்லாவியாவின் இன்னொரு முன்னாள் குடியரசான குரோஷியாவுக்குப் பின்துணை அளித்து வருகிறது. 1992 பெப்ரவரியில் ஐரோப்பிய பொருளாதார அமைப்பு இதற்கு அங்கீகாரம் வழங்கியது.



**பொருளாதாரம்:**

ஸ்லோவேனியா ஒரு வளமான பூமி. கோதுமை, உருளைக்கிழங்கு போன்றவை அதிகம் உற்பத்தியாகின்றன. நிலக்கரித் தொழில் வளர்ச்சியடைந்துள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.10.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 265**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 263

**பரிசுக்குரியவர்:**
**செல்வி பா. மணிமேகலை,**
**கடவளை தமிழ் மகா வித்தியாலயம், கினிகத்தேனை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நிஷாந்தனி ரத்னம்,<br>இ/தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | இராமையா ஸ்டாலின்,<br>பெரிய மண்வெட்டித் தோட்டம், கொட்டகலை. |
| கே.என்.டி.பெரோர,<br>புனித மிக்கேல் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு. | கணேசதாசன் கார்த்திக்,<br>பரகஹதெனிய தேசிய கல்லூரி, வேவுட, மாவத்தகம. |
| ஆர். சுரதிஸ்,<br>க/கலாபொக்க தமிழ் வித்தியாலயம், மடுல்கல. | பி. சத்தியராஜ்,<br>மின்னா தமிழ் வித்தியாலயம், சாமிமலை. |
| எஸ். தர்ஷன்,<br>சென் வில்பிரட் ஒழுங்கை, மோதர, கொழும்பு-15. | எம்.என். பாத்திமா சப்னா,<br>அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. |
| பாத்திமா நிஷ்மா நஜீம்,<br>ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | ம. ஹரிபிரசாத்,<br>விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. |

## நீல் ஆம்ஸ்ட்ரோங்

சந்திரனில் முதன் முதலில் காலடி வைத்தவர் என்ற பெருமைக்குரியவர் அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ட்ரோங்.

இவர் 1930ம் ஆண்டு பிறந்தவர். சிறு வயதிலேயே பறப்பதில் ஆர்வமாக இருந்த ஆம்ஸ்ட்ரோங் 16 வயதிலேயே விமானியானார். 1947ம் ஆண்டு கொரியப் போரில் அமெரிக்க விமானப்படையில் சேர்ந்து வீரராக போர்முனை சென்றார்.

1950ம் ஆண்டு 'நாஸா' விண்வெளி நிலைய சோதனை விமானியாக மாறினார். 1962ம் ஆண்டு 'அப்பல்லோ' விண்வெளி ஆராய்ச்சிக் குழுவில் இணைந்து பணியாற்றினார்.

1966ம் ஆண்டு 'ஜெமினி 8' என்ற விண்கலம் மூலம் இவர் விண்வெளியில் பறந்தார். இது விபத்துக்குள்ளாகும் நிலையில் இருந்த



போது, பசிபிக் சமுத்திரத்தில் பத்திரமாக இறங்கினார்.

1969ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதிதான் இவருக்கு மறக்கமுடியாத நாள். அன்றுதான் 'அப்பல்லோ 11' விண்கலத்தின் மூலம் முதன் முதலில் சந்திரனில் இறங்கினார். இவருடன் எட்வின் ஆல்ரிடின் என்ற இன்னொரு வீரரும் சந்திரனில் இறங்கினார்.

## கிவி

நியூஸிலாந்து நாட்டின் பிரபல பறவை கிவி ஆகும். உலகில் அருகி வரும் உயிரினங்களில் இதுவும் ஒன்று. 25 வருடங்களுக்கு முன்பு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வாழ்ந்த இப்பறவைகள் தற்போது 11 ஆயிரம் மட்டுமே உள்ளன.

இதன் மூக்குத்துவாரம் அலகின் முனையில் அமைந்திருக்கிறது. இதன் மூலம் பூமிக்கடியில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு அந்த இடத்தில் தோண்டி இரையை எடுத்துக் கொள்ளும்.



இப்பறவைக்குப் பறப்பதற்கேற்ற சிறகுகள் இல்லாததால் இவற்றால் பறக்க முடியாது. இதேவேளை இதன் கால்கள் மிக வலிமையானவை. இதனால் எதிரிகளைப் பலமாகத் தாக்கும்.

அடர்ந்த காட்டிற்குள் மிக வேகமாக ஓடக்கூடிய இவற்றின் பிரதான உணவு மண்புழு. இரவு வேளைகளில்தான் இவை இரை தேடப் புறப்படும்.

பொதுவாக விலங்குகள், பறவைகள் மற்றும் கடல் வாழ் பிராணிகள் எல்லாவற்றிலுமே பெண்ணை விட ஆணே நிறை கொண்டதாக இருக்கும். அரிதாக ஒரு சில விலங்குகள் விதிவிலக்காக இருக்கும். அவற்றில் கிவியும் ஒன்று.

ஆண் கிவி பறவையின் நிறை சராசரியாக 2 1/2 கிலோ இருக்கும். ஆனால் பெண் கிவியின் நிறை சுமார் 3 1/2 கிலோவாக இருக்கும்.

## ஏன் முடியாது?

நாம் ஒரே நேரத்தில் சாப்பிட்ட உணவை விழுங்கவும், மூச்சு விடவும் முடியுமா? முடியாது.

ஏன் தெரியுமா? நாம் சாப்பிடும் உணவும், மூச்சுவிடும் காற்றும் தொண்டை வழியாக ஒரே குழாய் மூலமாகத்தான் உள்ளே செல்கின்றன. அதன் பின்தான் அது இரண்டாகப் பிரிந்து 'ட்ராக்கியா' என்னும் குழாய் வழியாக காற்று சுவாசப்பைக்கும்,



'கல்லெட்' எனப்படும் குழாய் வழியாக உணவு இரப்பைக்கும் செல்கிறது.

சிலவேளைகளில் நாம் உண்ணும் உணவுப்பொருள் சுவாசக்குழாய்க்குள் சென்றால், அதை வெளியேற்ற நமக்குப் புரையேறுகிறது. அதே போல காற்று உணவுக்குழாய்க்குள் புகுந்தால் அது ஏப்பமாக வெளியேறுகிறது.

## குட்டிச் செய்திகள்

* ஆந்தை, திமிங்கிலத்தின் கண்கள் அங்குமிங்கும் அசையாது. முகத்தைத் தான் திருப்பிப்பார்க்கும்.
* மனித இரத்தத்தோடு ஒத்துப்போகக் கூடிய இரத்தம் விலங்குகளில் குரங்குகளுக்கு மட்டுமே உண்டு.
* டொல்ஃபின்கள் ஒரு கண்ணை மூடிக் கொண்டுதான் தூங்கும். மற்றொரு கண் திறந்தபடி இருக்கும்.
* 'ஹைட்ரோ ஃபோன்' என்பது நீருக்கடியில் பேசும் குரலைக் கேட்க உதவும் சாதனமாகும்.
* 3 ஆயிரம் அடிக்கு அப்பால் இருக்கும் மனிதனை யானை அடையாளம் கண்டு கொள்ளும்.

## எப்படி வந்தது?

இன்றைய தேசப்படங்களின் தொகுப்பை அட்லஸ் என்று அழைக்கிறோம். இப்படி ஏன் அழைக்கப்படுகிறது என்று தெரியுமா?

இந்தத் தேசப் படங்களின் தொகுப்பிற்கு அட்லஸ் என்று பெயரிட்டவர் ஜெராட்ஸ் மொர்க் என்பவர். இவர் தான் தேசப் படங்களைத் தயாரித்தவர்.



இந்தத் தேசப்படங்களை முதன்முதலாக வெளியிடும் போது, புத்தகத்தின் முகப்பில் அட்லஸ் என்ற பலம் பொருந்திய கிரேக்க தேவதையின் படத்தைப் பிரசுரித்தார்.

அதுமுதல் உலக நாடுகள் பற்றிய தேசப்படங்கள் அடங்கிய தொகுப்பை அட்லஸ் என உலகம் அழைக்க ஆரம்பித்தது.



படிப்பகம்

www.padippakam.com

# மேற்கே ஒரு குற்றம்

இரண்டாம் பாகம்

அங்கம் 06

எழுத்துலக வேந்தன் சுஜாதா



மரநிழல்களில் ஹிப்பி இளைஞர்கள் சித்திரங்கள் விற்றுக் கொண்டிருந்தார்கள். சற்று உயர்ந்த பகுதியில் கண்ணாடிக்குள் கார்கள் அகப்பட்டிருந்தன. சார்லஸ் பிரான்ஸன் சினிமா ஒன்று டப்பிங் படமாக ஒரு தியேட்டரில் ஓடுகிறது போலும். பொதுவாக மேல்மட்ட ஜனங்களுக்கு என்று ஏற்பட்ட கடைத்தெருபோல தோற்றமளித்தது. அதைக் கடந்து ம்யூனிக்கின் சிக்கலான பகுதிகளுக்கு உள் சென்றது கார். வீடுகள் சற்றுப் பழங்காலமாகப்பட்டது. குழந்தைகள் அவ்வளவு சுத்தமாக இல்லை. குப்பைத் தொட்டிகள் நிரம்பி வழிந்தன. வீதியில் சிறுவர்கள் கால் பந்து ஆடிக் கொண்டிருந்தார்கள்.

கார் நிற்க, ஏற்கனவே மற்றொரு கார் காத்திருந்தது! ஸ்டைன் ஹாஃப் காத்திருந்தார். அவர்கள் வந்ததும், "கம் மிஸ்டர் கணேஷ்! மிஸ்டர் வசந்த், நீங்கள் அங்கேயே இருங்கள்." என்றார்.

அந்த மூன்று மாடிக்கட்டடத்தின் மாடி ஏறும்போது ஸ்டைன் ஹாஃப் பேசிக்கொண்டே வந்தார். "அந்த ஃபோட்டோவிலிருந்து கம்ப்யூட்டர் ஐடெண்டி கிட் மூலம் அடையாளம் கண்டுபிடித்து விட்டோம்."

உடனே, "எப்படி அவன் இங்கே இருக்கிறான் என்று தீர்மானமாகச் சொல்கிறீர்கள்?" என்றான்.

"அவன் சாதாரணமாகப் புழங்கும் இடங்களையும் கம்பியூட்டர் சொல்லி விடுகிறது!"

"என்னைப் பற்றி உங்க கம்ப்யூட்டருக்குத் தெரியுமா?"

"தெரியும். என்ன தெரியும் என்பதை ஒருநாள் காட்டுகிறேன். இந்த விவகாரம் நல்லபடியாக முடியட்டும்!"

வால்பேப்பரில் மிகப் பெரிய மலர் வடிவங்கள் ஒட்டியிருக்க, அறை வாசலில் பிளாஸ்டிக் பையில் பால் காத்திருக்க, அந்த அறைக் கதவைத் தட்டினார்கள். சற்று நேரம் தட்டியும் பதில் இல்லாததால் கதவில் கைப்பிடியைத் திருகிப் பார்த்தார். திறந்து கொண்டது. உள்ளே அலங்கோலமாக இருந்தது. டெலிவிஷனின் குரல் தணிக்கப்பட்டு மௌனப் படங்களாக அசைந்து கொண்டிருந்தன. படுக்கை கசங்கியிருக்க மிக வெண்மையான பெட்ஷீட்டில் இரத்தத்திட்டு தெரிந்தது. திடுக்கிட்டான்.

ஸ்டைன் ஹாஃப் ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்த்தார். சமையலறை போலிருந்த இடத்தில் அந்த உடல் கிடந்தது. ஒரு கால் மடங்கி தரையில் அலங்கோலமாக, தலைப்புறம் ஸிங்க் அடியிலும், கால் கதவுப் பக்கமும், வாய் திறந்திருந்தது. நெற்றியில் துப்பாக்கி வைத்து சுட்ட இடத்தில் சிறிய இரத்த வட்டம் சுருங்கி உறைந்திருந்தது.

"மை காட்!" அந்த சதுரமுகம். தலைமயிரின் ஸில்க் வெண்மை! அவன் தான். நேற்று என்னை சந்தித்துப் பேசினவன்தான்! சதுரமுகம்.

"மிஸ்டர் கணேஷ், இவனைத் தெரிகிறதா?"

"இவன்தான் என்னை வந்து நேற்று சந்தித்தான்! மிஸ்டர் ஸ்டைன் ஹாஃப் எனக்கு அச்சமாக இருக்கிறது. இது எப்படி நிகழ்ந்தது?"

"நேற்று இரவே இவனைப் பற்றிய விவரங்கள் எங்களுக்கு கம்பியூட்டர் மூலம் தெரிந்துவிட்டன. இவன் தற்போது எங்கிருக்கிறான் என்று பொலிஸ் ஸ்டேஷன்கள் மூலம் விசாரிக்கச் சொன்னோம். அப்படி விசாரித்தது இவன் எஜமானர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். முந்திக் கொண்டு விட்டார்கள். தீர்த்து விட்டார்கள்."

ஸ்டைன் ஹாஃப் தன்னிடமிருந்த பாக்கெட் ரேடியோவில் பேசினார். ஜன்னல் கதவைத் திறந்து வெளியே பார்த்தார். அவர் நெற்றி நரம்புகள் புடைத்திருந்தன.

"மூன்று பெரிய கைகள் இருக்கின்றன. அவர்களில் ஒருவர் கோஷ்டி செய்த வேலை இது! யார்? மிஸ்டர் கணேஷ், நீங்கள் பயப்படுகிறீங்களா? உங்கள் உதவி எங்களுக்கு நிச்சயம் தேவையாக இருக்கிறது. விவகாரம் பெரியதாகிவிட்டது."

கணேஷ் மௌனமாக இருந்தான்.

'ஸீன் ஆஃப் க்ரைம்ஸ்' ஆசாமிகள் உள்ளே படையெடுத்தார்கள். 'பளிச் பளிச்' என்று ஃபோட்டோ. விரல் ரேகை தேடல்...

அந்த அறையைப் பார்த்தான். சில புத்தகங்கள்! அழுக்காக ஒரு ஸோபா, காலி காப்பிக் கோப்பை. சுவரில் சிரித்துக் கொண்டு ஒரே ஒரு ஃபோட்டோ! அவன் தான்!

அந்த உடல் மூடப்பட்டு மெதுவாக வெளியே எடுத்துச் செல்லப்பட, கணேஷும் கீழே இறங்கி வந்தான். வசந்த் கலவரமாக நின்றான்.

"எனக்கு என்னவோ ஒரு நாள் நம்ம ரெண்டு பேரையும் கூட இப்படி..."

"ஷட் அப்!"

அவர்கள் நடந்தார்கள்.

"மிஸ்டர் கணேஷ், ஒரு காரில் உங்களை ஹொட்டலுக்குக் கொண்டு விடுகிறோம். கலங்காதீர்கள். இது எல்லாம் சகஜம்! போய் சற்று நேரம் ஆசுவாசம் கொள்ளுங்கள். அவர்கள் உங்களைத் தொடர்பு கொண்டால் எனக்குச் செய்தி சொல்லுங்கள்."

"எப்படி?"

"971756ல் எனக்கு டெலிஃபோன் செய்யுங்கள். எங்கிருந்தாலும் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்."

கார் அவர்களை ஹொட்டலில் கொண்டு வந்து விட்டுவிட்டது. கணேஷுக்கு ரூமுக்குப் போக இஷ்டமில்லை. அந்த இளைஞனின் மரணம் மறுபடி நினைவில் உறுத்தியது.

அங்கு திணித்திருந்த அந்த முகத்தைப் பிடுங்கித் திருப்பி ஸ்டைன் ஹாஃப், "இவன் தானா பாருங்கள்!" என்று கேட்க, வீங்கியிருந்த முகத்தில் மியூசியத்தில் கண்ணாடி மூலம் பார்த்தவனின் அடையாளத்தைத் தேட, அந்த வீக்கங்களைக் கழித்துவிட்டு அந்த முகத்தை மனதில் ஆராய வேண்டியிருக்க... கணேஷ் சிலிர்த்துக் கொண்டான்.

"வா வசந்த், மூடு சரியா இல்லே! ஏதாவது சினிமால போய் உக்காந்துடலாம்."

"சும்மா அடிச்சு நொறுக்கிப் போட்டிருக்காங்க பாஸ். எனக்கு அவ்வளவு அடி தாங்காது!"

"உன்னை யார்றா அடிக்கப்போறா?"

"அவன் அடிபடலை. சுடப்பட்டிருக்கான்"



"ஏன் பாஸ்! சரக்கு இருக்குன்னு புளுகி இருக்கீங்க. இன்னிக்கு சாயங்காலம் தர்றதா வேற சொல்லியிருக்கீங்க!... அவுங்களுக்கு நீங்க சொல்றது பொய், வெத்து வேட்டுன்னு கண்டுபிடிக்க எத்தனை நாளாகும்? கண்டு பிடிச்சு நம்ப ரெண்டுபேரையும் சத்தக் சத்தக்!"

"சேச்சே, கொல்லமாட்டாங்க! பேத்தாதே! எங்கே இருக்கு சரக்குனு அதை கண்டு பிடிச்சுட்டா போதும்டா!"

ஒரே கட்டடத்தில் ஐந்து தியேட்டர்கள் இருந்தன. ஐந்திற்கும் ஒரே ஒரு டிக்கெட் கவுண்டர். எந்த கொட்டகை என்று நம்பர் சொல்லி அதில் போய் உட்கார வேண்டும். வசந்த் அந்தப் படங்களைப் பார்த்தான்.



"ஆரம்பிச்ச உடனே எல்லாத்தையும் அவுத்துப் போடற படம் வேண்டாம்!" என்றான் கணேஷ்.

"சிலதில் பத்துப் பதினைஞ்சு நிமிஷம் கழிச்சுக் கழட்டுவா! அவ்வளவுதான் வித்தியாசம். வாங்க ஏதாவது ஒன்னுக்கு. எனக்கு மூடு அவுட்டாயிடுச்சு."

மிகச்சிறிய சினமாக் கொட்டகை. நூறு பேர்தான் உட்காரலாம். ஐந்து பேர்தான் உட்கார்ந்திருந்தார்கள். ஏறக்குறைய படுத்துக் கொண்டு, புகை பிடித்துக் கொண்டு, பக்கத்தில் பெண்களை வைத்துக் கொண்டு, பீர் குடித்துக் கொண்டு.

இருவரும் ஒரு ஓரத்தில் உட்கார்ந்தார்கள்.

கதாநாயகி ஒரு பதினான்கு வயது இளம் பெண். அவள் அக்கா புருஷன் வீட்டில் தங்க வருகிறாள். அக்கா புருஷனுக்கு இவள் மேல் நப்பாசை ஏற்படுகிறது. இவள் குளிக்கும் போது ஒரு தடவை திருட்டுத்தனமாகப் பார்க்கிறான். மாடிப்படி ஏறும் போது கீழே இருந்து அவள் ஸ்கர்ட் அலைச்சலை நோக்குகிறான். ஒரு நாள் அக்கா எங்கேயோ பியானோ வாசிக்கப் போயிருக்கிறாள். தங்கையும் அக்கா புருஷனும் மட்டும் தான் இருக்கிறார்கள். அவளைக் கூப்பிட்டு "உள்ளே வா, உனக்கு சில ஃபோட்டோ படங்கள் காண்பிக்கிறேன்!" என்கிறான். அவள் உள்ளே செல்ல, அவளை அருகில் உட்கார்த்திக் கொண்டு அவள் மடியில் உடையை உயர்த்துகிறான். கணேஷின் பின் பக்கம் ஒரு குரல் கேட்டது.

"இன்று மாலை ஒலிம்பியா பார்க்குக்கு பொருளுடன் வரவேண்டும்."

கணேஷ் திரும்பிப் பார்க்காமல், "எத்தனை மணிக்கு?" என்றான்.

"ஆறரைக்கு" என்று பதில்.

"மிகுந்த சிரமம்."

"ஏன்?"

"பொலிஸ் என்னை எங்கு பார்த்தாலும் தொடர்கிறார்கள். எனக்குப் பயமாக இருக்கிறது." என்றான். ஸ்டைன் ஹாப்பின் திறமை புரிந்தது. பொலிஸ் என்னைத் தொடர்கிறார்கள் என்று சொன்னால்தான் அந்த மியூசியம் ஆசாமியை பொலிஸ் கண்டு கொண்டதற்கு அர்த்தம் ஏற்படும். கணேஷ் உடந்தையாக இருப்பது பற்றி சந்தேகமும்வராது!

"தெரியும். சரக்கை ஒரு பெட்டியில் வைத்துக்கொண்டுவா. ஐஸ் போர்ட் ஹால் என்ற ஒரு இடத்தை விசாரித்துக் கொண்டு அதன் அருகே நில். கிளம்பும்போது பொலிஸ் தொடர்ச்சியை வெட்டி விட்டுக் கிளம்பு. ஞாபகமிருக்கட்டும். ஒலிம்பியா பார்க். ஐஸ்போர்ட் ஹால்."

"பணம்?" என்றான் கணேஷ்.

"பணம், சரக்கின்... தரத்தைப் பார்த்து அதன் பின் கொடுக்கப்படும்."

"பணம் வாங்காமல் பொருள் கைமாறக் கூடாது என்று எனக்கு உத்தரவு."

"எவ்வளவு தெரியுமா?"

"அது அப்போதே தீர்மானமாகி விட்டது அல்லவா? உனக்கும் எனக்கும் என்ன அதைப்பற்றி? நீ ஒரு வேலைக்காரன், நான் ஒரு வேலைக்காரன்!"

திரையில் அந்தப் பெண்ணுக்கும் அந்தக் கணவனுக்கும் பலப்பட்டுக் கொண்டிருந்த விபரீத உறவு கணேஷின் கவனத்திலிருந்து மிகவும் விலகியிருந்தது. "நண்பனே, நாம் இருவரும் ஒரு பீர் சாப்பிடலாமா?" என்றான்.

"அது மிகவும் தப்பு. இந்த ஊர் பொலிஸ் பற்றி உனக்குத் தெரியாது. காரியம் முடிந்ததும் பீர் சாப்பிடலாம். அப்புறம் திரையில் நடப்பதை நிஜமாகவே பார்க்கலாம்!"

"ஒலிம்பியா பார்க், ஐஸ் போர்ட் ஹால்."

"மறக்கமாட்டேன்!"

"வார்த்தை தவறிவிடாதே! விபரீதமாகிவிடும்!"

"தவறமாட்டேன்!" சட்டென்று அவன் விலகி விட்டான்.

"வசந்த். வசந்த்."

வசந்த் அந்தத் திரைப்படத்தில் முழுவதும் ஆழ்ந்திருந்தான். அந்தக் கணவன் எக்கச்சக்கமாக உடைகள் எதுவும் அணியாமல் மாட்டிக் கொண்டு விட்டான். தங்கையையும் கணவனையும் மனைவி மாறிமாறிப் பார்க்கிறாள்.

"வசந்த், வா வேலையிருக்கு. உடனே போகணும்!"

"சரியான கட்டத்தில வந்துட்டமே பாஸ்."

"சரியான கட்டம் நிஜமாகவே ஆரம்பிச்சுடுச்சு. வசந்த், சரியான ஆபத்தில சிக்கிக் கிட்டிருக்கோம்! ஒரு பக்கம் பொலிஸ், ஒரு பக்கம் இவுங்க. இப்ப சரக்கைக் கொண்டுவான்னு கேக்கறாங்க. சாயங்காலம் 6-30க்கு ஒலிம்பியா பார்க்காம். அங்கே கொண்டு வந்து கொடுக்கணுமாம்! என்னத்தைக் கொடுக்கிறது! என்ன செய்யறது! ஸ்டைன் ஹாஃப் சொன்ன நம்பர் ஞாபகம் இருக்கா?"

"971756."

டெலிபோன் சப்தமே வேறு மாதிரி இருந்தது. ஒரு வித எலக்ட்ரானிக்கல் தன்மை இருந்தது. முதலில் காசு போட்டு விட்டால் அப்புறம் கவலையே இல்லை. நம்பர் எங்கேஜ்டு ஆக இருந்ததால் காசு திரும்பிக் கிடைத்தது. இரண்டாவது தடவை கிடைத்தது.

(தொடர்ந்து வரும்)

# சதாம் உசேன்

## அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

09

ராஜையா

ஜனாதிபதி காசிம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை உறுதியுடன் பின்பற்றினார். பணக்கார நாடுகளுக்கு பணிய மறுத்தார். சோவியத் யூனியனுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டார்.

இவை சதாமை கவர்ந்த போதிலும், அவனுக்குப் பிடிக்காத ஒரு அம்சம் காசிமிடம் இருந்தது.

அரேபிய இனத்தினர் வாழும் பகுதிகளெல்லாம் ஒரே தேசமாய் இணைய வேண்டும் என்ற கொள்கையை உள்ளடக்கிய அராபிசத்தை காசிம் ஏற்றுக் கொள்ளவில்லை. அராபிசக் கொள்கையை உயிருக்கு உயிராய் மதிக்கும் சதாம் இதனால் ஏமாற்றமடைந்தான்.

மன்னராட்சியைக் கவிழ்க்க காசிமுக்கு உறுதுணையாக இருந்தவரும், இராணுவப் புரட்சி நடந்தவுடன் அதன் வெற்றியை வானொலியில் அறிவித்தவரும், தற்போதைய அரசை காசிமோடு சேர்ந்து கூட்டாக நிர்வகித்து வருபவருமான அப்துல் சலாம் ஆரீப், அராபிசக் கொள்கையை தீவிரமாக ஆதரித்தார்.

காசிமுக்கும், ஆரீஃபுக்கும் இடையிலிருந்த கருத்து வேறுபாடு வளர்ந்தது. அதிகாரத்துக்கான போட்டியாய் அது மாறியது...

'அராபிசக் கொள்கை ஜெயிக்கணும்னா காசிமை ஆட்சியிலிருந்து இறக்கணும். நான் அதிபராகணும்' என்று முடிவு செய்த ஆரீஃப் அதற்கான முயற்சியில் இறங்கினார்.

ஆரீஃப்பின் சதிவேலைகள் பற்றி உளவுத் துறை அதிகாரிகள் மூலம் கேள்விப்பட்ட ஜனாதிபதி காசிம் அதிர்ச்சியடைந்தார்.

அவர் ஆரீஃபை கைது செய்ததோடு, அராபிசத்தை ஆதரிப்பவர்களை நாடு முழுக்க வேட்டையாட ஆரம்பித்தார். இதனால் சதாமின் மறுமலர்ச்சிக் கட்சியினர் அரசின் பயங்கர ஒடுக்குமுறைக்கு ஆளானார்கள்.

ஜனாதிபதி காசிமின் இந்நடவடிக்கைக்கு கம்யூனிஸ்டுகள் முழு ஆதரவு கொடுத்தார்கள். சோஷலிசத்தை ஏற்றுக் கொண்டாலும் கம்யூனிஸத்தை எதிர்க்கிற மறுமலர்ச்சிக் கட்சிக்காரர்களை கம்யூனிஸ்டுகள் வெறுத்தார்கள். மேலும், ஏக அரபு தேசக் கொள்கை நடைமுறைக்குச் சாத்தியமற்றது; சமூகப் பிரச்சனைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவது என்று அவர்கள் நம்பினார்கள்.

இதனால், காசிமை ஆதரித்த கம்யூனிஸ்டுகளுக்கும், அவரை எதிர்த்த மறுமலர்ச்சிக் கட்சியினருக்கும் இடையே பயங்கர மோதல்கள் ஏற்பட்டன. இரு கட்சியினருமே துப்பாக்கி அரசியலில் நம்பிக்கை வைத்திருந்ததால், இந்த மோதல்கள் துப்பாக்கிச் சண்டையாய் வெடித்தன.

கம்யூனிஸ்டுகளுக்கும், மறுமலர்ச்சிக் கட்சிக்கும் இடையே தெருத் தெருவாக நடந்து வந்த மோதல்கள் சதாமின் குடும்பத்துக்குள்ளும் நுழைந்து அஸ்திவாரத்தை அசைத்தன....

சதாமின் குடும்பத்தினர், உறவினர்கள் எல்லோருமே மறுமலர்ச்சிக் கட்சியில் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள். இவர்களில் சிலர் கட்சியில் முக்கியப் பதவிகளைப் பெற்று செல்வாக்கை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இதனால் சதாமின் மாமாவீடு, கட்சியின் குட்டி அலுவலகம்போல் செயல்பட்டு வந்தது. கம்யூனிஸ்டுகளை ஒழிக்க கட்சி எடுக்கும் இரகசிய முடிவுகள் அங்கு சற்று சுதந்திரமாக பரிமாறிக் கொள்ளப்பட்டு, கண்டிப்புடன் அமுல் செய்யப்பட்டு வந்தன.

இத்தனை கட்டுக்கோப்புடன் இருந்த குடும்பத்துக்குள், அத்தனை கட்டுப்பாடுகளையும் தாண்டி கம்யூனிசக் கருத்துக்கள் புகுந்தன. சதாமின் மைத்துனர் ஒருவர் கம்யூனிஸ்டாக மாறினார். அவர் மறுமலர்ச்சிக் கட்சியைத் தீவிரமாக எதிர்த்தார். இதனால் குடும்பத்துக்குள் அரசியல் தகராறு வெடித்தது. இது குடும்ப ஒற்றுமைக்கு உலை வைக்கும் ஆபத்தாக வளர்ந்தது.



சதாமின் மாமா கயருல்லா பயந்தார்: தங்களை வேவு பார்ப்பதற்காக தங்களில் ஒருவரையே கம்யூனிஸ்டுகள் பிடித்து 'எட்டப்பனாக' மாற்றிவிட்டார்களோ என்று அஞ்சினார். சதாமை அழைத்தார். இரகசியமாகச் சொன்னார்: "தாயா, பிள்ளையா இருந்தாலும் அரசியல்னு வந்துட்டா ரெண்டும் வேற வேற தான். கம்யூனிஸ்டுகள் நம்ம எதிரிகள். அவங்கள ஒழிக்கிறது நம்ம கடமை. இதுதான் கட்சியின் கட்டளை. அதனால, உன் மச்சினனைத் தீர்த்துக் கட்டணும். அது உன் பொறுப்பு" என்றார். சதாமிடம் துப்பாக்கியைக் கொடுத்தார்.

சதாம் சிந்தித்தான். மாமா சொல்வது சரியென்று பட்டது. துப்பாக்கியை வாங்கிக்கொண்டான்.

மைத்துனனை எங்கே கொல்வது? எப்படிக் கொல்வது? என்று சுயமாய் திட்டம் தீட்டினான்.

திட்டமிட்டபடி அதை வெற்றிகரமாக செய்து முடித்தான். சதாம் திட்டமிட்டு செய்த முதல் அரசியல் கொலை இதுதான்...! அதை எவ்வளவு கச்சிதமாக செய்து முடித்தான் என்பதை மாமா உட்பட யாரிடமும் அவன் சொல்லவில்லை.

இக்கொலைக்காக சதாமும் கயருல்லாவும் கைது செய்யப்பட்டார்கள்.

அந்தச் சமயத்தில், அரசியல் போட்டி காரணமாக எங்கு பார்த்தாலும் அராஜகம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. அரசியல் கொலைகள் சர்வ சாதாரணமாக நிகழ்ந்து கொண்டிருந்தன. இந்தக் குழப்பத்தில் யாரைப் பிடிப்பது? குற்றத்தை எப்படி நிரூபிப்பது? என்ன தண்டனை கொடுப்பது? என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்த காசிம் அரசு பெரும்பாலான குற்றவாளிகளை தண்டனையின்றி விடுவித்துக் கொண்டிருந்தது. அந்த வகையில் சதாமும், கயருல்லாவும் கூட கைது செய்யப்பட்ட சில நாட்களிலேயே தண்டனையின்றி விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள்...!

இலட்சியத்துக்காக மைத்துனனையே கொன்ற சதாமின் கொள்கைப் பிடிப்பு, மறுமலர்ச்சிக் கட்சி வட்டாரத்தில் பெருமையாக பேசப்பட்டது. அவனது துணிகரம் சிலாகிக்கப்பட்டது. கட்சித் தலைமையின் நம்பிக்கைக்கு உரியவன் ஆனான் சதாம்.

காசிம் தங்கள் இனத்துக்கும் தேசத்துக்கும் துரோகம் செய்வதாக முழுமையாக நம்பிய மறுமலர்ச்சிக் கட்சி இனியும் அவரை விட்டு வைக்கக்கூடாது என்று முடிவு செய்தது.

ஜனாதிபதியை கொல்ல இரகசியமாக அதிரடிப்படை ஒன்றை அமைத்தது. அந்தப் படைக்கு இருபத்திரண்டு வயது சதாம் தலைமை ஏற்றான்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com



**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள 'விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் 'இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

# முள் நிலவு

நிலவு 15

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"இது" ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி தபால்ல வந்த கவர். ஏர் இந்தியா நிறுவனம் அனுப்பியிருக்காங்க. கிருஷ்ணகாந்த் விபத்துல பலியானதுக்காக முதல் தவணை இழப்பீட்டுத் தொகையாய் ஒரு இலட்ச ரூபாய்க்கான செக்கை இஷ்யூ பண்ணியிருக்காங்க."

நான் வெங்கடேஷ்வரனையே பார்த்துக் கொண்டிருக்க அவர் தொடர்ந்தார்.

"இது கிருஷ்ணகாந்தோட உயிருக்கு விலையாய்க் கொடுத்த பணம். இந்தப் பணத்தை எந்த வகையில் செலவு பண்ணினா கிருஷ்ணகாந்தோட ஆத்மா சாந்தியடையும்னு யோசனை பண்ணினோம் நானும் என்னோட மனைவியும். கடைசியா ஒரு முடிவுக்கு வந்தோம்."

"என்ன முடிவு...?"

"நேர்ல பார்க்காமப் போனாலும் கிருஷ்ணகாந்துக்கு நிலா மேல விவரிக்க முடியாத ஒரு அன்பு இருந்தது. நிலா தன்னோட வீட்டை விட்டு எங்க வீட்டுக்கு வந்து தங்கியிருந்தபோது, ஃபேட்ஸிலிருந்து ஃபோன் பண்ணி பேசிய கிருஷ்ணகாந்த், நிலாவை மிஸஸ் நிலா கிருஷ்ணகாந்த்ன்னுதான் சொன்னார். அதாவது நிலாவை அவன் மனப்பூர்வமா மனைவியாவே ஏத்துக்கிட்டான்... ஸோ...!"

"சொல்லுங்க..."

"கிருஷ்ணகாந்துக்கு கொடுக்கப்பட்ட இந்த இழப்பீட்டுத் தொகையை நிலாவோட பேரண்ட்ஸுக்கு கொடுத்திடலாம்ங்கிற எண்ணத்துல வந்தேன்..."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சிவராஜன் கோபமாய் தன் குரலை குறுக்கே நுழைத்தார்.

"இதோ பாருங்க மிஸ்டர் ஆர்.கே.! எம் பொண்ணோட ட்ரீட்மெண்ட்டுக்கு எவ்வளவு இலட்சம் செலவானாலும் அதை ஃபேஸ் பண்ண எனக்கு திராணியிருக்கு... அவர் போடற பிச்சையை ஏத்துக்க நாங்க தயாரா இல்லை..."

"ப்ளீஸ்! ஆத்திரப்படாதீங்க..."

"ஆத்திரப்படாம எப்படி இருக்க முடியும் ஆர்.கே. ஸார்...? அன்னிக்கு ஏர்போர்ட்ல இவரோட ஒய்ஃப நிலாவைப்பேசின பேச்சு இருக்கே... அதை இப்ப நினைச்சாலும் என் உடம்புக்குள்ளே நெருப்பாறு பாயற மாதிரி இருக்கு..."

வெங்கடேஷ்வரன் இப்போது சிவராஜன் பக்கம் திரும்பி அவரை ஏறிட்டார்.

"வாஸ்தவம்தான்! அன்னிக்கு அப்படி என்னோட மனைவி பேசியிருக்கக் கூடாது. ஏதோ எமோஷனலா பேசிட்டா. அப்படி அவ பேசினதுக்கான தண்டனையை இப்போது அனுபவிச்சுட்டிருக்கா. நடந்து போன சம்பவங்கள் எல்லாத்தையுமே ஒரு கெட்ட கனவா நினைச்சு தள்ளி வெச்சுட்டு இனிமே நடக்க வேண்டியதைப் பார்க்கணும். இருட்டறைக்குள்ளே காதை பொத்திக்கிட்டு உட்கார்ந்திருக்கிற நிலாவை பழையபடி வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அவளை ஒரு நல்ல வாழ்க்கைக்கு தயார் படுத்தணும்."

"அதை எப்படிச் செய்யணும்னு எங்களுக்குத் தெரியும். நீங்க ஒண்ணும் என்னோட பொண்ணுக்காக உருகி வழிய வேண்டாம்." குரலில் உஷ்ணம் வீசப் பேசிய சிவராஜனை நான் கையமர்த்தினேன்.

"நீங்க இப்படிப் பேசறது சரியில்லை ஸார்... உங்க ரெண்டு பேருக்குமே ஏற்பட்டிருக்கிற இழப்புக்கள் சாதாரணமான இழப்புக்கள் கிடையாது. நடக்கக்கூடாத சம்பவங்கள் நடந்துட்ட இந்த நிலைமையில் இப்படி ரெண்டு பேருமே பகைமை உணர்ச்சியோடு இருக்கக்கூடாது. கிருஷ்ணகாந்த் இனி திரும்பி வரப்போறதில்லை. உடலளவில் உயிர் வாழ்ந்துகிட்டு, மனசளவில் இறந்து போயிருக்கிற நிலாவை பழைய நிலைமைக்கு கொண்டு வரக்கூடிய கடமை உங்க ரெண்டு பேருக்குமே இருக்கு."

இரண்டு பேருமே இப்போது மௌனப் பார்வைகளை பரிமாறிக்கொள்ள நான் தொடர்ந்தேன்.

"வெங்கடேஷ்வரன் கொண்டு வந்திருக்கிற இந்த செக்கை மறுக்காமே வாங்கிக்கிங்க சிவராஜன் ஸார். கிருஷ்ணகாந்த் என்னிக்கு உங்க பொண்ணு நிலாவை தன்னோட மனைவின்னு சொன்னாரோ அந்த நிமிஷத்திலிருந்து எல்லா உரிமையும் உங்க பொண்ணுக்கு வந்தாச்சு... இது நியாயமா நிலாவோட பணம்தான். வாங்கிக்கிங்க. டோண்ட் ஹெசிடேட்."

வெங்கடேஷ்வரன் கையில் இருந்த செக்கை நீட்ட, சிவராஜனின் கை நீண்டது.

செக்கைக் கொடுத்த வெங்கடேஷ்வரன் மறுபடியும் என்னை நிமிர்ந்து பார்த்து, "இன்னொரு விஷயம்..." என்றார்.

"என்ன..?"

"ஃப்ளைட் வெடிச்சு சிதறியபோது, அதுல பயணம் செஞ்ச எல்லா பயணிகளுமே அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி உருக்குலைந்து போனாலும் சிலபேருடைய லக்கேஜுகள் மட்டும் உருப்படியா கிடைச்சிருக்கு. அதுல கிருஷ்ணகாந்தோட லக்கேஜும் இருந்தது. ரெண்டு பெரிய சூட்கேஸ்... அதையும் ஏர் இண்டியா ஸ்டாஃப் கொஞ்ச நேரத்துக்கு முந்தி கொண்டுவந்து குடுத்துட்டுப் போனாங்க... ரெண்டு சூட்கேஸையும் ஓப்பன் பண்ணிப் பார்த்தோம்... ஒரு சூட்கேஸ்ல இந்த சின்ன 'ஜுவல் பாக்ஸ்' இருந்தது."

தோல் பையை மறுபடியும் பிரித்து உள்ளேயிருந்து நீலநிற வெல்வெட் உடம்போடு இருந்த சிறிய ஜுவல் பாக்ஸ் ஒன்றை வெளியே எடுத்தார் வெங்கடேஷ்வரன்.

அதன் லாக்கை விடுவித்துத் திறந்தார்.

உள்ளே-

இரண்டு வளையல்களும் இதய வடிவ டாலரோடு கூடிய செயினும் ஒரு கல் பதித்த மோதிரமும் மின்னியது.

ஜுவல் பாக்ஸின் உட்பக்க காலியிடத்தில் ஒரு செவ்வக அட்டை செருகப்பட்டிருக்க அதில் ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட வாசகங்கள் தெரிந்தன. நான் படித்துப் பார்த்தேன்.

*பூமியில் உள்ள*
*என் நிலாவுக்கு*
*இந்தச் சின்னத் தங்கச் சுரங்கம்*
*என் அன்பளிப்பு.*

கிருஷ்ணகாந்த்.

கிருஷ்ணகாந்த் எழுதியிருந்த வார்த்தைகள் என் இதய ஓரங்களை வலியோடு நீவிக்கொண்டிருக்க, வெங்கடேஷ்வரன் தொடர்ந்தார்.

"இது நிலாவுக்காக கிருஷ்ணகாந்த் ஆசையாய்க் கொண்டுவந்த அன்பளிப்பு. இதுவும் நிலாவுக்கு சேரவேண்டியதுதான். இதையும் நீங்க வாங்கிகிட்டா எனக்கு சந்தோஷமா இருக்கும்..."

"வே...வேண்டாமே..." சிவராஜன் மறுக்க, நான் ஜுவல் பாக்ஸை வாங்கினேன்.

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா சிவராஜன் ஸார். நமக்கு மிகவும் பிரியமானவங்க ஒரு பொருளை அன்பளிப்பா கொடுக்கும்போது அந்தப் பொருளில் உள்ள 'பாஸிட்டிவ் வேவ்ஸ்' நம்ம உடம்புக்குள்ளே பாய்ந்து நல்லதைச் செய்யுமாம். அதுமாதிரியான வேவ்ஸ் உலோகப் பொருள்கள் கிட்டே அதிகமாகவே இருக்கும்.... நிலா மேல கிருஷ்ணகாந்த் வெச்சிருந்த பிரியம் அபரிமிதமானது. இந்த நகைகளை நிலா போட்டுக்கிட்டா... இதுல இருக்கிற 'பாஸிட்டிவ் வேவ்ஸ்' நிலாவைக் குணப்படுத்தக்கூடிய சாத்தியம் இருக்கு...."

என் மனைவி உட்பட எல்லோரும் என்னை நம்பாத பார்வை பார்க்க நான் புன்னகைத்தேன்.

"அப்படியெல்லாம் நடக்குமாங்கிற சந்தேகத்தோட நீங்க எல்லாரும் என்னைப் பார்க்கிறது புரியுது. நான் சொன்னது உங்களுக்கு மூடநம்பிக்கைத்தனமாப் படலாம். ஆனா இது விஞ்ஞான பூர்வமான உண்மை. அமெரிக்காவின் புகழ்பெற்ற பௌதீக பேராசிரியர் 'ஹோமில்க்ஸ்' என்பவர் பொருள்கள் வெளிப்படுத்தற 'பாஸிடிவ்-நெகடிவ் வேவ்ஸ்' பற்றி ஒரு பெரிய புத்தகமே எழுதியிருக்கார். ப்ராக்டிகலா அதை பெரிய அளவில் ஆராய்ச்சி பண்ணி பல உண்மைச் சம்பவங்களையும் கொடுத்திருக்கார். ஒரு பொருளின்மீது மனிதனின் ஸ்பரிசம் படும்போது அந்த மனிதனின் மனோபாவம் எண்ணங்களுக்கு ஏற்ற மாதிரி அவன் உடம்பில் இருக்கிற வேவ்ஸை அந்தப் பொருள் கிரகித்துக் கொள்ளுமாம்..."

சிவராஜனின் கண்களில் இப்போது சின்னதாய் ஒரு ஆர்வம் மின்னியது.

"ஆர்.கே.ஸார்! நீங்கள் சொல்றது நிஜமா...?"

"நிஜமோ நிஜம்..."

"இந்த நகைகளை நிலா போட்டுகிட்டா அவ மனநிலையில் தெளிவு பிறக்கும்னு சொல்லவர்றீங்களா?"

"ஆமா..."

"அப்படீன்னா இதை வாங்கிக்கறேன்..! என் பொண்ணு பழையபடி என்னை அப்பான்னு கூப்பிட்டாப் போதும்..."

நகைப்பெட்டி கை மாறியது.

**சூ**ரியன் நான்கு தடவை உதித்து, நான்கு தடவை மறைந்து ஐந்தாவது நாள் புதிதாய் உதித்த வேளை.

காலை ஆறுமணி.

நான் வாக்கிங் புறப்பட்டுப்போக கான்வாஸ் ஷூக்களில் கால்களை நுழைத்துக்கொண்டிருந்தபோது-

உள்ளே டெலிஃபோன் கூப்பிட்டது.

என் மனைவி வாசலில் கோலம் போடும் முயற்சியில் இருக்க, நான் போய் ரிஸீவரை எடுத்தேன்.

"ஹலோ..."

மறுமுனையில் டாக்டர் மிருதுபாஷினியின் குரல்,

"குட்மார்னிங் டாக்டர்..."

"நிஜமாவே குட்மார்னிங்தான் மிஸ்டர் ஆர்.கே."

"என்ன சொல்றீங்க டாக்டர்...?"

"நிலா இப்போ வெளிச்சமான அறைக்கு மாற்றப்பட்டிருக்கா. காதுகளை பொத்திக்கிட்டு கத்தற கொடுமையான காட்சியெல்லாம் கிடையாது..."

"வெரிகுட்...வெரிகுட்..."

"இது ஒரு பத்து சதவீத சந்தோஷம் தான்..!"

"இப்போதைக்கு இது போதுமே டாக்டர்... அடுத்த வாரத்துல இன்னும் ஒரு அஞ்சு சதவீத சந்தோஷம் அதிகமா கிடைக்கலாம்."

"மே...பி...! இன்னொரு விஷயம் மிஸ்டர் ஆர்.கே."

"சொல்லுங்க..."

"நிலாவுக்கு இப்போ ஒரு இம்ப்ரூவ்மெண்ட் இன்ஸ்டன்டா தெரிஞ்சாலும் வேற ஒரு ஆபத்து உருவாயிட்டு வருது..."

"வேற ஒரு ஆபத்தா...?"

"ஆமா..."

"என்ன அது...?"

"காலையில ஒரு பத்துமணி சுமார்க்கு ஹாஸ்பிடல் பக்கம் வர முடிஞ்சா நேர்ல பேசிடலாம்..."

"வர்றேன்..."

கலக்கத்துடன் சொன்னேன்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

# கவியரசுவின் சுயசரிதை 17



**அ**டுத்தது வயல் வரப்பு சம்பந்தப்பட்ட கொலைகள்.

தண்டனையை எதிர்பார்த்தே அந்தக் கொலையைச் செய்தவர்கள்போல் அவர்கள் காணப்பட்டார்கள்.

ஜாமீன் கேஸ் என்பது மிக விசித்திரமானதாகும்.

அனாதையாக ஒருவன் ஊரிலே சுற்றிக்கொண்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்படுவான்.

உடனே நீதிபதி அவனைப் பார்த்து, "உனக்கு ஜாமீன் கொடுக்க யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்பார்.

அப்படி யாரும் இல்லையென்றால் அவனை மூன்று மாதம் நீதிபதி தண்டித்து விடுவார்.

ஆதரிக்க ஆளில்லாத காரணத்தால் ஒரு நிரபராதி குற்றவாளியாக்கப்படுவான்.

அது ஒன்று போதும் அவனுக்கு.

அவன் வாழ்க்கையே சிறை வாழ்க்கையாகிவிடும்.

ஜாமீனுக்கு ஆளில்லை என்று தண்டிக்கப்பட்டவன் விடுதலையானதும், இன்னோர் ஊரிலே பொலிசார் அவனைப் பிடிப்பார்கள்.

கோர்ட்டிலே கொண்டுபோய் நிறுத்துவார்கள்.

'சந்தேகத்துக்கிடமான நிலையில்' என்ற பழைய பல்லவியோடு குற்றச்சாட்டு துவங்கும்!

அவன் சந்தேகத்துக்கிடமான ஆசாமிதான் என்பதை ஏற்கனவே அவன் ஜெயிலிலிருந்ததைக்கொண்டு நிரூபிப்பார்கள்.

அவன் மறுபடியும் தண்டிக்கப்படுவான்.

பிறகு விடுதலை. மறுபடியும் கைது; தண்டனை!

நான்கு நாட்கள் வெளியேயும், மூன்று மாதம் உள்ளேயுமாக அவன் காலம் கழிய வேண்டியதுதான்.

சிறைப்பறவைகளான சில 'கேடி'களைப் பொலிசார் துணைக்கு வைத்துக்கொள்வார்கள்,

பல சிறைச்சாலைகளையும் கண்ட அந்தக் கேடிகள், கைதிகள் விடுதலையான உடனே அவர்களைப் பொலிசாருக்குக் காட்டிக்கொடுப்பார்கள்.

பிடிப்பதற்கு வேறு ஆள் கிடைக்காத போது அந்தக் கேடிகளையே சந்தேகத்துக்கிடம் என்று பொலிஸார் உள்ளே பிடித்துக் கொண்டு வந்துவிடுவார்கள்.

பொலிசாருக்கு உளவு சொல்பவர்களுக்குச் சிறைச்சாலைப் பரிபாஷையில் 'கை காட்டிகள்' என்று பெயர்.

"இவன்தான் என்னைக் காட்டிக்கொடுத்த கைகாட்டி" என்று சொல்லிவிட்டால் போதும். உடனே எல்லாக் கைதிகளும் ஒன்று சேர்ந்து சிறைச்சாலைக்குள் அந்தக் 'கைகாட்டி'யை அடித்து நொறுக்கிவிடுவார்கள்.

ஜாமீன் வழக்குக் கைதிகளின் பரம விரோதிகள் இந்த 'கைகாட்டி'களும் லோக்கல் பொலிசாரும்தான்.

லோக்கல் பொலிஸ்காரர்களில் யாராவது குற்றம் செய்துவிட்டு உள்ளே வந்துவிட்டால் எல்லாக் கைதிகளும் அவர்களைப் பந்தாடிவிடுவார்கள்.

காரணம் அவர்களில் பலர் நிரபராதிகள்.

ஒரு நிரபராதி நிரந்தரக் குற்றவாளியாவது ஆச்சரியமே!

சட்டத்தின் எந்தப் பாதுகாப்பும் அவர்களுக்கு இல்லை.

பொலிஸ்காரர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அவர்கள் ஆட்டிவைக்கப்படுகிறார்கள்.

ஜாமீன் கொடுக்க ஆளில்லை என்று ஒரே காரணத்திற்காக நூற்றுக்கணக்கான நிரபராதிகள் சிறைச்சாலைக்கு வந்திருப்பதை அவன் கண்டான்.

சட்டம் தவறானதென்று அவன் கருதவில்லை.

சட்டத்தின் சந்துகளுக்குள் நுழைந்து விளையாடுகிற பொலிசாராலேயே இந்த நிலை ஏற்படுகிறது.

அசல் குற்றவாளி கிடைக்காதபோது நிரபராதியைக் குற்றவாளியாக்குவது அவர்கள் வழக்கம்.

பலதடவை ஒருவன் சிறைச்சாலைக்கு வந்தால் அவனுடைய குல்லாவில் கறுப்புப் பொட்டு வைத்துவிடுவார்கள். அவன் சிறைப் பறவை என்பது அதன் பொருள்.

கொலைகாரர்களின் குல்லாவில் சிவப்புப் பொட்டு வைத்துவிடுவார்கள்,

அங்கே கறுப்பும் சிவப்பும் நிரந்தரக் குற்றவாளிகளின் சின்னமாகும்.

மனிதன், சமுதாயம் என்பதைப் பற்றியெல்லாம் அவன் அங்கேதான் சிந்திக்கத் தலைப்பட்டான்,

குற்றவாளிகளின் உலகத்திலேதான் நிரபராதிகள் வணங்கப்படுகிறார்கள்.

நல்ல மனிதர்களைப்பற்றிய சிந்தனையெல்லாம் அவனுக்கு அங்கே வந்தது.

குடும்பக் கவலை அவனுக்கு அடிக்கடி தோன்றிற்று என்றபோதிலும், சிறை வாழ்வு அத்தனை துன்பகரமாக இல்லை.

அவனுக்கும் 'சி' வகுப்புத்தான் தரப்பட்டிருந்தது.

சிறை டிரௌசரும், சட்டையும் தரப்பட்டன. அவனுடைய அளவுக்குப் பற்றாத டிரௌசரைப் போட்டுக்கொண்டு இரண்டு நாள் படாதபாடுபட்டான்.

சிறைக்கு வந்து பத்து நாட்கள்தான் ஆயின.

'செஷன்ஸ் கோர்ட்'டில் அவர்களுக்காக அப்பீல் செய்யப்பட்டது.

அப்பீலை ஏற்றுக்கொண்ட இராமன் நாயர் என்ற நீதிபதி அவர்களை ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அவனும் ஜாமீனில் வெளிவந்தான்.

மறுபடியும் ஏழாவது நாளே செஷன்ஸ் விசாரணை போடப்பட்டது.

அதற்குள் ஒருமுறை ஊருக்குச் சென்று குடும்பத்தினரைப் பார்த்துவந்தான்.

செஷன்ஸ் விசாரணை இரண்டே நாட்கள்!

பதினெட்டு மாதத் தண்டனையையே உறுதி செய்துவிட்டார் நீதிபதி.

வெளியே வந்த பத்தாவது நாளே மறுபடியும் அவர்கள் உள்ளே வந்துவிட்டார்கள்.

இனி ஒன்றரை வருடமும் உள்ளேதான் இருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றிவிட்டது.

மனத்தை வெகுவாகத் திடப்படுத்திக் கொண்டான்.

இருந்தாலும் கனவுலகில் நடப்பவன் போலவே நடந்துகொண்டிருந்தான்.

அங்கே மாலை ஐந்து மணிக்கெல்லாம் உள்ளே தள்ளிப் பூட்டிவிடுவார்கள்.

இரவு பத்துமணி வரை தூக்கம் வராது.

அந்த ஐந்துமணி நேரம் மட்டும் பெரும் வேதனையாக இருக்கும்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# காய்கள்

ரூபராணி

கைலாஸ் காலிமுகக் கடற்கரையின் ஒதுக்குப்புறமாக உட்கார்ந்திருந்தான். தனிமையை நாடி வந்தவனுக்கு அந்த இடம் வசதியாக இருந்தது. ஜில் என்ற ஊளிக்காற்று இதமாக இருந்தாலும், அவனுக்குள் புயல் வீசி அமைதியை கலைத்தது. 'நீயும் பொம்மை நானும் பொம்மை நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை' என்ற ஜேசுதாசின் பாடல் அவசியமின்றி அவன் மனதுக்குள் நுழைந்தது.

கடல் அலைகள் கொஞ்சங்கூட ஓயாமல் கரையைத் தொடுவதும் இரைவதும் அன்று கைலாசுக்குப் புதுமையாகத் தெரிந்தது. அவன் கை விரல்கள் மணலை அள்ளி அளைந்தது.

"உங்களுக்கு என்னை எப்போ கலியாணம் பண்ணிக்கணுமுன்னு தோணுதோ அப்ப பண்ணிக்குங்க. எனக்கொண்ணும் அவசரமில்லை. எத்தன வருஷமானாலும் உங்களுக்காகக் காத்திருப்பன்."



"கடைசிவர உன்னக் கலியாணம் பண்ணிக்க முடியாமல் போயிட்டா...?"

"தற்ஸ் ஆல் ரைட், வெறும் உடல் உறவுக்காக நான் உங்கள விரும்பல. உங்க மனச எப்பவோ நான் கலியாணம் பண்ணிட்டன்."- அவன் நினைவுகளில்....

சொர்ணாவின் குரல் தேனாக ஒலித்தது. பத்து ஆண்டுகளாகக் கேட்கும் இந்தக் குரலுக்கு அவனுடைய பதில் 'மௌனம்.' சொர்ணா ஆயிரத்தில் ஒருத்தி.

தன்நலம் பேணாத பண்பும் அடுத்தவர் நலனுக்காக தன்னை இழந்து விடும் சுபாவமும் அவளுக்குச் சொந்தம். கைலாசின் எண்ணத்தில் சொர்ணா இமயமாய் உயர்ந்தாள்.

கைலாஸ் தனியார் கம்பனி ஒன்றில் வேலை பார்ப்பவன். அவனுக்கு இரண்டு சகோதரிகள். மூத்தவள் ஸ்ரெனோ. மற்றவள் இலிகிதர். தாயும் தந்தையும் இறந்த நாளிலிருந்து அந்தக் குடும்பத்தின் ஆணிவேரே கைலாஸ்தான். எல்லாப் பொறுப்புகளையும் அவன் தலைமேல் சுமந்தான்.

தன் சகோதரிகளில் உயிரையே வைத்திருந்தான். அவர்களே 'உலகம்' என்று எண்ணியவனுக்கு, அவனது கம்பனியில் வேலை பார்க்கும் சொர்ணாவின் நட்புக் கிடைத்தது. தன்னுடைய சுமைகளை அவளிடம் இறக்கிவைப்பதில் ஆறுதல் கண்டான் கைலாஸ். காலப்போக்கில் இருவரும் காதலர்களாக மாறிப் போனார்கள்.

தன் சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் முழு மூச்சாய் இறங்கினான் கைலாஸ். அவன் பேசிய எந்த வரனும் அவன் சகோதரிகளைத் திருப்திப் படுத்துவதாயில்லை. கட்டை, நெட்டை, கறுப்பு, வழுக்கை, வயது போன்ற விமர்சனங்களால் அவனுடைய முயற்சி முற்றுமுழுதாகத் தோல்வி கண்டது.

ஆண்டுகள் பல உருண்டன. பலன் பூஜ்யமே. கைலாசின் தலையில் வெள்ளி முளைக்கத் தொடங்கியது.

ஒருநாள்- அவன் ஆபிஸ் விட்டு வந்ததும் வராததுமாக.... "கைலாஸ் இனி எங்களுக்குக் கலியாணம் பண்ணிவைக்க முயற்சி செய்யாதே. மனசுக்குப் பிடிக்காதவனைக் கட்டிற்று என்ன செய்யிறது? எங்களுக்கு நீ இருக்கிறாய் அதுபோதும்!" இரு சகோதரிகளும் ஒரே விதமாய்க் குரலெழுப்பினார்கள்.

கைலாசுக்குப் பகீர் என்றது. தனது கலியாணம் பற்றிச் சொல்ல வந்தவன், அப்படியே மலைத்துப் போனான். சொல்வதா வேண்டாமா? என்ற போராட்டம் அவனுக்குள் நடந்தது. சொர்ணாவும் ஒரு பெண். வாழவேண்டிய வயதில் வாழாமல் வருஷக் கணக்கில் தனக்காகக் காத்திருக்கும் குற்ற உணர்வு கணப்பொழுதில் மின்னலாய் அவனைத் தாக்கியது.

துணிவைத் துணையாக்கிக் கொண்டான் கைலாஸ்.

"ஆபீஸில் வேலை பார்க்கும் ஒரு பெண்ண விரும்புறன். உங்களத் தவிர எனக்கு யாருமில்ல. அம்மா, அப்பா, சொந்தம் பந்தம் எல்லாமே எனக்கு நீங்க ரெண்டுபேருந்தான். என்னிட கலியாணத்த நீங்கதான் நடத்தி வைக்கணும். கலியாணம் பண்ணிட்டாலும் நான் உங்களவிட்டுப் பிரிஞ்சு போகமாட்டன். சொர்ணாவும் எந்தக் காரணத்துக்காகவும் தனிக்குடித்தனம் போவதை விரும்பமாட்டாள்." கைலாசின் வாய்க்குள் தடுமாறிய வார்த்தைகள் தயக்கத்துடன் வெளியேறின. பதில் சூறாவளியாக வீசும் என்று அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

"நீயும் ஒரு தம்பியா? இவ்வளவுதானா உன்ர பாசம்? எல்லாமே வேஷம். எங்கள அம்போன்னு போட்டிட்டு கலியாணங்கட்ட எப்படிடா மனசு வந்தது?" மூத்தவள் கத்தினாள்.

"அக்கா, சொர்ணா நல்லவள். உங்களப் பிரிஞ்சி நான் சந்தோஷமா இருக்க மாட்டன் எண்டு அவளுக்கு நல்லாவே தெரியும். பத்து வருஷமா எனக்காகக் காத்திருக்கா. நம்ம கலியாணம் எப்போ எண்டு ஒருநாள் கூட அவ கேட்டது கிடையாது. உங்க கலியாணமே அவளுக்கு முக்கியம்."

கைலாஸ் அழாக் குறையாகக் கூறினான்.

"முடுவாயை! சொர்ணாவை நீ கண்டது இப்ப. நீ எங்களோடு கூடப் பிறந்தவன். அவ நல்லாத்தான் உன்னிட்ட நடிச்சிருக்கிறா." இளையவளின் இடி முழக்கம் கேட்டு விம்மினான் கைலாஸ்.

"கைலாஸ்... நீ போயிடு. எங்கேயாவது போய்த்தொலை. படைச்சவனுக்குத் தண்ணி ஊத்தத் தெரியாதா? நீ சொர்ணாவோடு போய் நல்லாரு. நாங்க எக்கேடு கெட்டாலும் உனக்கென்ன? இனி நீ யாரோ நாங்க யாரோ?" இருவரும் போட்ட கூச்சலில் சிக்கித் தவித்தான் கைலாஸ்.

பாசத்தையும் பணத்தையும் தன் வாழ்நாள் பூராவும் தன் சகோதரிகளுக்காக அள்ளிச் சொரிந்தவன் அனாதையாக வெளியேறினான்.

கைலாஸ் நினைவுகளில் புதைந்து போயிருந்தபோது சொர்ணா கடற்கரை மண்ணில் கால் புதைய வந்து கொண்டிருந்தாள்.

"ஹாய் கைலாஸ், உன்னை எங்கெல்லாம் தேடுறது?" உற்சாகமாகக் கூவினாள்.

கைலாஸ் துயரத்தின் பிடியிலிருந்து நழுவமுடியாமல் சிந்தனையில் ஆழ்ந்து இருந்தான்.

சொர்ணா குழந்தையைப்போல் பதுங்கி வந்து தொப்பென்று அவனருகே அமர்ந்தாள்.

"ஒரு குட் நியூஸ் சொர்ணா. நாளை நமக்குப் பதிவுத் திருமணம்!" கைலாஸ் சுரத்தில்லாமல் சொன்னான்.

திடுதிப்பென்று அவன் சொன்னதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

வழமைபோல் கைலாசின் சுமை சொர்ணாவிடம் கை மாறியது.

"சகோதரிகளில்லாத கலியாணம் இப்போ நமக்கெதுக்கு?" சொர்ணா முகங் கோணினாள்.

"நீ வேணும்னாப்பாரன். என் சகோதரிகள எனக்குத் தெரியாதா? எப்பிடியாவது நம்ம கலியாணப் பதிவுக்கு வருவாங்க." கைலாசின் குரல் உறுதியாகக் கண்களில் நீர் பனித்தது. "எனக்கிருக்கும் ஒரே உறவு என் தாய்மாமன்தான். அநியாயமாக அனாதையாக வந்த என்னை ஆதரித்து வேலையும் வாங்கிக் கொடுத்தவரும் அவர்தான். உங்கள் சகோதரிகளும் என் மாமாவும் வந்தால் போதும்!" சொர்ணா தலை கவிழ்ந்து கூறினாள். மறுநாள் பதிவுத் திருமணம் அமைதியாக நடந்தது. சொர்ணாவின் மாமனாரும் இரு சாட்சிகளும் தவிர அங்கு வேறுயாருமில்லை.

திருமணம் முடிந்ததும் சொர்ணாவுடன் கைலாஸ் தன் சகோதரிகளைச் சந்திக்கச் சென்றான். அந்த வாசல் கதவு திறக்கப்படவில்லை.

# ஓர் அறிவிப்பாளனின் டைரி

'நமக்கெல்லாம் பொருந்துமா அந்தப் பதவி?' என்ற சந்தேகத்தோடுதான் ஜீவா அதற்கு விண்ணப்பமே செய்தான்.

ஆனால் பலபடிகளில் நேர்முகப்பரீட்சைகள் முடிந்து அவன் தேர்ந்தெடுக்கப்பட்டபோது உண்மையில் அகமகிழ்ந்து போனான்.

இப்படிச் சந்தேகத்தோடு விண்ணப்பித்து சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டதுதான் இந்த வானொலி அறிவிப்பாளர் பதவி.

இப்பொழுது ஜீவாவின் குரல் இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகள் சிலவற்றில்கூட ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்தளவிற்கு ஒரு புகழ்மிக்க, திறமையான அறிவிப்பாளனாக வளர்ந்துவிட்டிருந்தான். தனது கவர்ச்சிகரமான குரல்வளத்தால் இலட்சக்கணக்கான இரசிகர், இரசிகைகளைப் பெற்றிருந்தான் ஜீவா.

தினமும் அவனைப் பல தொலைபேசி அழைப்புக்கள் அன்பாகத் தொல்லைப்படுத்துவதுண்டு. ஜீவா இவற்றையெல்லாம் பொறுத்து நிராகரித்து, இரசித்துச் சமாளித்து தனது பணியில் செவ்வனே ஈடுபட்டிருப்பான்.

ஆனாலும் சமீபகாலமாக அவனின் மனதைக் குழப்பி, அந்த மன வெற்றிடத்தில் இடம் பிடித்திருப்பவள் கல்யாணி என்ற இரசிகை. அவள் முதன் முதலில் தொடர்பு கொண்டபோது சராசரி இரசிகையாகத்தான் அவனின் குரல் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

புகழ்ச்சிக்கு மயங்காதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். ஜீவாவும் அந்த இளம் பெண்ணின் புகழ்ச்சியினால் கொஞ்சம் சந்தோஷமடையவே செய்தான். ஆனால் சில நாட்கள் சென்றதும் கல்யாணி அவனது அறிவிப்புக்களில் சில நுணுக்கமான திருத்தங்களை அக்கறையாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

கல்யாணி சொன்னதின் பிரகாரம் செய்தபோது, உண்மையில் அது பலபேரும் பாராட்டும் விதமாக அமைந்திருந்தது. அது மட்டுமல்ல ஜீவா தொகுக்கும் சில நிகழ்ச்சிகளுக்குக்கூட குறிப்புக்கள் பலவற்றை அவள் அனுப்பி உதவினாள்.

இப்படியான சில பரிமாற்றங்களுக்குப் பிற்பாடு ஜீவாவிற்கு அவள்பால் ஈடுபாடு அதிகமாகிக்கொண்டு வந்தது.

கல்யாணி கேட்காமலேயே அவள் பெயரில் பாடல்களை ஒலிபரப்பினான் ஜீவா. ஒருமுறை தொலைபேசி உரையாடல் மூலம் பாடல் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சியில் கல்யாணியையும் அவன் பங்குபெறச் செய்தான்.

'நெஞ்சினில் தேக்கி வைத்த காதலையும், ஆசைகளையும் தெரிவிக்க முடியாமல் தத்தளிக்கும் சோடி' என்று விளக்கங் கொடுத்து, 'சொல்லத்தான் நினைக்கிறேன்...' பாடலை கல்யாணி விரும்பிக் கேட்டாள்.

அவளது பெயரில் அடிக்கடி பாடல்களை ஒலிபரப்புச் செய்வதால் ஏற்கனவே சாடை மாடையாகப் பகிடி பண்ணிய நண்பர்கள் இப்பொழுதெல்லாம் அதிகமாகவே கிண்டல் பண்ணத் தொடங்கிவிட்டார்கள்.

அவனது மரியாதைக்குரிய அறிவிப்பாளரான திலகா அக்கா கூடக் கேட்டார்:

"என்ன ஜீவா! கல்யாணி, கல்யாணி என்று ரேடியோவெல்லாம் கல்யாணி மயமாயிருக்கு, காதல் கீதலோ?"

"அப்படியெல்லாம் எதுவும் கிடையாது!" சாதாரணமாகவே ஜீவா பதில் சொன்னான். அவன் அப்படிச் சொன்னாலும் அவனின் நெஞ்சத்தில் கல்யாணி ஒரு இன்பச் சுமையாகவே இருந்துகொண்டு வந்தாள்.

'இவள் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? இவள் என்னைக் காதலிக்கிறாளா? அல்லது இரசிகை என்ற ரீதியில் ஈடுபாடு கொண்டு பழகுகிறாளா?' அவனால் விடைகாண முடியாமல் அவனது மனம் தத்தளிக்கத் தொடங்கிவிட்டது. ஆனால் அந்த மனத்தத்தளிப்பு நீடித்துக் கொண்டிருக்கவில்லை. அன்றே கல்யாணி அவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

"இன்றைக்கு 'புரோக்கிராம்' மிகவும்

**"எனக்கு உங்களை நிறையப் பிடித்திருக்கிறது!" என்றவன், "நாம் நேரில் சந்திக்கவேண்டும்!" என்றான்.**

நன்றாகவிருந்தது. அருமையான பாட்டெல்லாம் போட்டீர்கள்!"

"நன்றி கல்யாணி!"

"என்ன ஜீவா ஏனெனக்கு நன்றியெல்லாம்?" என்றவள், "உங்கள் குரலைத்தான் எந்நேரமும் கேட்கவேணும் போலிருக்கு ஜீவா!" என்றாள்.



களுவாஞ்சிக்குடி யோகன் -அவுஸ்திரேலியா

"எந்நேரமும் கேட்கமுடியாது. நான் 'எயாருக்கு' வந்தால் மட்டுமே உங்களால் கேட்க முடியும்." வழமையான அவனது சிரிப்பினூடே பதில் சொன்னான் ஜீவா.

"ஏன் எந்நேரமும் முடியாது? நீங்கள் என் பக்கத்தில் இருந்துவிட்டால்?" கல்யாணி விடாமல் தொடர்ந்தாள்.

"என்ன சொல்கிறீர்கள்?" உள்ளூர மகிழ்ச்சி எழுந்தாலும் அந்த மகிழ்ச்சியை மறைத்து ஆச்சரியப்படும் பாவனையோடு ஜீவா கேட்டான்.

"ஆமாம் ஜீவா! நான் உங்களை விரும்புறன். உங்களையே ஒவ்வொரு வினாடியும் நினைத்துக் கொண்டிருக்கிறன். கல்யாணஞ் செய்யிறதென்றால் அது உங்களைத்தான் என்றும் முடிவு பண்ணிப்போட்டன். எனக்கிப்போ உங்களின் சாதகமான முடிவுதான் வேணும் ஜீவா!" அவள் உருக்கமாகவும், தழுதழுத்த குரலிலும் கேட்டாள்.

எப்பவோ எதிர்பார்த்ததொன்று இப்போது கைகூடி வந்தாலும், ஒருவரையொருவர் நேரில் பார்க்காமல் எப்படிப் பதில் சொல்வதென்று ஜீவா சற்றுத் தயங்கினான். ஆனால் கல்யாணி விடவில்லை.

"என்ன ஜீவா? ஏன் தயங்குகிறீர்கள்? என்னைப் பிடிக்கவில்லையா?" மிகவும் தாபமாகக் கேட்டாள்.

இதன் பிறகு ஜீவா தாமதிக்கவில்லை. "இல்லை, இல்லை எனக்கு உங்களை நிறையப் பிடித்திருக்கிறது!" என்றவன், "நாம் ஒருவரையொருவர் சந்திக்கவேணும் கல்யாணி," என்று கேட்டுக்கொண்டான்.

"நிச்சயமாக ஜீவா, நாளை வெள்ளிக்கிழமை கொம்பனித்தெரு முருகன் கோயிலுக்கு வாங்களேன்!" என்று கல்யாணி அழைத்தாள்.

முதன் முறையாக கோயிலில் பார்ப்பதென்பது ஜீவாவிற்கு பிரியமாயிருந்தது.

அதனால் உடனே சம்மதித்தவனாக, "நான் மெல்லிய பச்சை நிறத்தில் சேட் அணிந்து கூட்டுத்தாபன அடையாள அட்டையை பொக்கற்றில் குத்திவருகிறேன்!" என்றான்.

"நானும் சாறி, பிளவுஸ், பொட்டு, வளையல் அத்தனையையும் உங்களுக்குப் பிடித்த பச்சை நிறத்திலேயே அணிந்து வருகிறேன்!" என்ற கல்யாணி, "என்னை முதன் முதலாகப் பார்க்கப்போகிறீர்கள். அதிகமாகப் பார்த்து விடாதீர்கள். அம்மாவுடன்தான் வருவேன்!" என்று சொல்லிவிட்டு தொலைபேசியைத் துண்டித்துக் கொண்டாள்.

ஏற்கனவே பலவிஷயங்களை தொலைபேசி மூலம் பகிர்ந்துகொண்டாலும்; நேரில் காண்பதென்பது ஒரு 'திறில்' போன்ற அனுபவமாகவே அவனுக்குத் தென்பட்டது. அது போக அவனும் கல்யாணமாகாத ஆண் பிள்ளை. ஆசை தாபங்களை மனதிலே தேக்கிவைத்து, கனவிலே கன்னிப் பெண்களுடன் டூயட் பாடும் சராசரி ஆண்பிள்ளை. தனக்கு வருபவள் மிகவும் அழகாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன் கொஞ்சம் முன்னதாகவே கோயிலிலே போய்க் காத்திருந்தான்.

கல்யாணி கோயில் வாசலால் வந்து கொண்டிருக்கும்போதே அவன் அடையாளங் கண்டு கொண்டான். முல்லைக் கொடியொன்று அசைந்து வருவதுபோல் அவள் வந்துக் கொண்டிருந்தாள். அவளை மிக அருகில் பார்த்தபோது ஜீவா சொக்கிப் போனான். அப்படியொரு அழகுப் பொம்மைப்போல் அவள் காட்சியளித்தாள்.

கல்யாணியும் ஜீவாவை இலகுவாகவே அடையாளம் கண்டு கொண்டாள். இருவரும் புன்னகையால் அந்தரங்கங்கள் பலவற்றைப் பரிமாறிக்கொண்டனர். பூஜை தொடங்கியபோதும், இருவரும் இறைவனை வணங்காமல் ஒருவரையொருவர் பார்த்து கைகூப்பியபடியே நின்றனர்.

அறைக்குத் திரும்பியபோது ஜீவாவிற்குத் தூக்கமே வரவில்லை. என்றுமில்லாத ஒரு குதூகலம் அவனிடம் குடிகொண்டிருந்தது.

நீண்ட நாட்களாக "கல்யாணஞ்செய், கல்யாணஞ்செய்" என்று கேட்டுக் கொண்டிருந்த தாய்க்கு, அவன் அன்று பதில் எழுதினான். 'அம்மா நான் கல்யாணஞ் செய்யலாமென்றிருக்கிறேன், பெண்கூடப் பார்த்தாயிற்று. மிகுதி நேரில்' என்று கடிதமெழுதினான்.

ஜீவாவை தொலைபேசி அலறி அழைத்தது. அவனின் கல்யாணத்தேன் கல்யாணி தான் கதைத்தாள்.

"ஜீவா, நான் உங்களைவிட உங்கள் குரலைத்தான் அதிகமாக நேசித்தேன். இருந்தாலும் போகப்போக உங்களில் ஒரு ஈடுபாடு தோன்றியது உண்மை. ஆனால் உங்களைப் பார்த்தபொழுது நமக்குள் சோடிப் பொருத்தம் என்பது எக்காலத்திலும் அமைந்துவிட மாட்டாது என்று தெரிந்து விட்டது. அதனால் உங்களின் மேலிருந்த ஈடுபாட்டையெல்லாம் மறந்துவிடுகிறேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!" சொல்லிவிட்டு தொலைபேசியை சட்டென வைத்தாள் கல்யாணி.

சற்றும் இதை எதிர்பாராத ஜீவா கூனிக் குறுகி உள்ளத்தால் நொறுங்கிப் போனான். அந்த இரவு பூராவும் இந்த அதிர்ச்சியான ஏமாற்றத்திலிருந்து அவனால் மீளமுடியாமல் இருந்தது.

அடுத்தநாள் காலை ஆறுமணிக்கு பணிக்குப் போவதற்காக எழுந்து பாத்ரூமிற்குள் நுழைந்தான். அங்கு மாட்டியிருந்த கண்ணாடியில் அவனது விம்பம் அவனைப் பார்த்து, சிரித்தது போலிருந்தது.

குள்ளமான அந்த தோற்றமும், கருமை நிறமான தேகமும், அம்மன் வடுபோல் தோன்றி மேடுபள்ளமுமாய் காட்சியளித்த முகமும் சோடிப் பொருத்தத்தையும், வெளிக் கவர்ச்சியையும் கவனிக்கும் எந்தப் பெண்ணுக்கும் தன்னைப் பிடிக்காது என்று சொல்லிக்கொண்டிருந்தன.

# எட்டுகிற பழம்தான்

அவன் கட்டையை ஊன்றி, தாங்கித் தாங்கி சிலர் உதவியோடு பஸ்ஸில் ஏறிவிட்டான்.

அனுதாபத்தின் பேரில் கிடைத்த சீட்டில் அமர்ந்து கொண்டு எதேச்சையாக திரும்பிய அவன் பார்வையில் அவள் தென்பட்டாள்.

அவள் எதிர் வரிசையில் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்தாள். நல்ல அழகி. அவனைப் பார்த்து அவள் சிரித்தாள்.

அவனால் நம்பமுடியவில்லை.

இந்த நெனப்பு வருகிறது. காரணமில்லாமல் தவித்தான். பஸ்ஸில் தன்னைப் பார்த்துத் தான் அந்தப் பெண் சிரித்திருப்பாளோ?

சே! சே... அப்படியெல்லாம் இருக்காது. அந்த அழகான பெண்ணைப் பத்தி நாம ஏன் நினைக்கணும்? அது தப்பு. எட்டாத பழத்துக்கு கொட்டாவியா!

இல்லை... இல்லை... அவளா அழகா இருக்கா?

சீச்சி... இந்தப் பழம் புளிக்கும்...

சிந்தனையைக் கலைப்பதாய் குலுங்கி



பாலா

'நம்மைப் பார்த்தா சிரித்திருப்பாள். நாமே நொண்டி. அதுவும் நான் ஏறி வந்து அமர்ந்தபோது அவளும் பார்த்திருப்பாள். அதுவுமில்லாமல் அவள் நல்ல அழகி. அவளா சிரித்திருப்பாள் நம்மைப் பார்த்து? அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். ஜன்னலுக்கு வெளியே வேகமாய்ப் பின்னோக்கிச் செல்லும் மரங்களோடு அவன் நினைவும் பின்னோக்கிச் சென்றது.

"ஏம்பா காலாகாலத்துல ஒரு கல்யாணத்தப் பண்ணிக்கிட்டா என்னப்பா? வயசு வேற ஆயிட்டு இருக்குல்ல!" என்ற அம்மாவிடம்,

"ஏம்மா! நீ வேற புரியாத மாதிரி... பேசற... சின்ன வயசுல இளம்பிள்ளை வாதத்தால சூம்பிப்போன இந்தக் காலோட எவ என்னைக் கல்யாணம் பண்ணிக்கப்போறா...? அதுவுமில்லாம ஒரு பொண்ணோட வாழ்க்கைய கெடுக்க நான் விரும்பல்லம்மா!" அவன் தன் கண்ணில் படர்ந்திருந்த நீர்த் திரையை விலக்கியபோது, அவன் அம்மாவும், அழுது கொண்டிருந்தாள். ஏன்? ஏன் இப்ப நின்றது பஸ்வண்டி அவள் கிளம்ப ஆயத்தமானாள். அவன் மனம் ஏனோ தவித்தது. அவள் குனிந்து காலுக்கடியிலிருந்து அதை எடுத்தாள். அவன் அதிர்ந்தான்.

அவள் அந்த ஊன்றுகோலை எடுத்துக் கொண்டு மெதுவாய் தாங்கித் தாங்கி எழுந்து நின்றாள்.

'ஒரு ' பெண்ணோட வாழ்க்கைய வீணாக்க நான் விரும்பலை!' அவன் காதில் அது ஒலித்தது. அவளும் அதைத்தான் சொல்லியிருப்பாளோ?

அவள் சிரித்ததன் அர்த்தம் விளங்கியது... இந்த முறை அவன் சிரித்தான்.

அவளும் சிரித்துவிட்டு மெதுவாக இறங்கிப் போனாள்.

பஸ் கிளம்பியது.

மறுநாள், அவனும் அவன் அம்மாவும் ஒரு சில பெரியவர்களுடன் பூ பழம் மற்றும் வரிசையோடு அந்த பஸ்வண்டி நிறுத்தத்தில் இறங்கினார்கள்; அவளைப் பெண்பார்ப்பதற்கு!



படிப்பகம்

# உயிரே



**சோ**ழநாட்டின்
ஒற்றர் படையில்
அவளும் ஒரு தூண்!

உடம்பெங்கும்
கண்!
உடம்பெங்கும்
காது!

சோழ மன்னனின்
சகோதரியார்
குந்தவை நாச்சியார்
கண்டெடுத்த
முத்து அவள்!

உயிரினும்
அரியது
தாய்நாட்டின் மானம்!

தாயிலும்
பெரியது
தாய்நாட்டு சுதந்திரம்!

பாண்டிய நாட்டுக்குள்
உளவறிய
அம்பாய் புகுந்தாள்!

அந்நியரோடு
கூடிக்குலாவி
தமிழக மண்ணையே
தாரைவார்க்கத்
துடிக்கிறான்
பாண்டிய மன்னன்!

சோழனுடன்
உள்ள பகை
சகோதரப் பகை

"மனம் திறந்து வா
கரம் குலுக்கலாம்"
என்கிறான் சோழன்!

மறுக்கிறான்!-தமிழகத்தை
வேரறுக்க வரும்
அந்நியப் படையோடு
அந்நியோன்யமாய் இருக்கிறான்!

பாண்டியன் பலத்தை
முறித்துப் போடுவதை
தவிர வேறு வழியில்லை!

எதிரியின் கை
அம்பாகிவிட்டான்
பாண்டியன்!

மார்பை பிளக்கவரும்
அம்பைக்கூட
சகித்துக் கொள்ளலாம்!
மானத்தை பிளக்கவரும்
அம்பை சகிக்கலாமோ?

"பலமறிந்து வருக
களமறிந்து வருக
பாண்டியனின்
தளம் அழிப்போம்!"
சோழன் உத்தரவிட்டான்!

அனுப்பப்பட்ட
ஒற்றர்களில் ஒருத்தி
அவள்!

பாண்டியநாட்டு
வீதிகளில்
அவள் அலைய,
பாண்டிய இளைஞன்
விழிகளில்
அவள் விழுந்தாள்!

முன்னழகும்
பின்னழகும்
பேரெழுச்சி கொள்ளும்
பேரழகி!

கண்ணழகும்-கனி
இதழ் செவ்வழகும்
கூந்தலில் மலர்ந்திருக்கும்
பூ அழகும்
கால் அழகும்-அந்த
கால் கொலுசழகும்...
மொத்தத்தில் இவள்
பூலோக பேரழகி!

பாண்டிய இளைஞன்
கற்பனை தோண்டினான்!

அவளோ ஒருநாள்கூட
முறுவலித்தது இல்லை!
அவனோ அதனால்
பொறுமையிழக்கவில்லை!

கிட்டத்தட்ட
அவளுக்கு அவன்
காவல்காரன் போலானான்!

அவள் போகுமிடமெங்கும்
அவனும் போனான்!

"யார் நீர்?
ஏன் தொடர்கிறீர்?"
ஓர் நாள் கேட்டாள்.

நேர் கொண்ட பார்வை
கூர் கொண்ட வார்த்தை
அஞ்சாத வீச்சு
துஞ்சாத நோக்கு!

"நீ நிஜம்
நான் நிழல்!
உன்னைத் தொடராமல்
என்ன செய்வது?

நீ ஆலயம்
நான் பக்தன்
உன்னை சுற்றாமல்
என்ன செய்வது?"

வினா தொடுத்தவன்
கண்களில் கனா!

"நீர் யார்
நான் யார்?
ஒருத்தரை ஒருத்தர்
தெரியாமல்
என்ன செய்வது?"
கேலியாக கூறிவிட்டு
போயே விட்டாள்.

அவனோ முயற்சியை
முறித்தானில்லை!
சிலந்தியின் பாணியில்
விடாது முயன்றான்!

எறும்பைப் போல
விடாது தொடர்ந்தான்!

அவள் யார்?
அவள் பணி என்ன?
தொடர் முயற்சியால்
புதிர் அறிந்தான்!

ஓர் நாள் துணிந்து
வழி மறித்தான்!

"வா போகலாம்
எங்காவது ஓடலாம்!

துறந்து வா
பணியெல்லாம் துறந்து வா!"

விண்ணப்பம் போட்டான்
எண்ணத்தைப் போட்டான்!

"தாய் நாட்டை
மறக்கச் சொல்கிறாயா?"

"ஆம்! மற! மற!
உனக்காக நான்
தாயைக்கூட மறக்கிறேன்!
என்றான் அவன்.

"என் மக்களை
மறக்கச் சொல்கிறாயா?"

"ஆம்! மற! மற!
உனக்காக நான்
என் பந்தங்களையே
மறந்து வருகிறேன்!"
குரல் படபடக்க கூறினான்.

"என் கொள்கைகளை
குழிதோண்டிப்
புதைக்கச் சொல்லுகிறாயா?"

"ஆம்! ஆம்!
உனக்காக நான்
என் அனைத்தையும்
புதைக்க காத்திருக்கிறேன்!
என்றான் அவன்.

உரத்துச் சிரித்தாள்
அவள்!

"பொறுப்பில்லாத
ஆண்மகன் நீ!

தாயின் துகில்
உரியப்படும்போது
காதலிக்கு பட்டுடுத்த
பிரியப்படுவதா
காதல்?

தாய் நாடு
மிதிபடும்போது
தப்பியோட நினைப்பதா
காதல்?

ஊர்சுற்றும் உனக்கு
ஊர் சோகம் தெரியுமா?

போடா போ!
முதலில் காதலிக்க
கற்றுக்கொள்!

தாயைக் காதலி
தாய் நாட்டை காதலி!

எல்லாவற்றையும் நேசி
அதன்பின்னர்
என்னை நேசி!

அதுதான் முதிர்ந்த
காதல்!

ஓடக் கற்றுக்கொள்ளாதே
போராடக் கற்றுக்கொள்!

போராடமல்
எந்த வாழ்க்கையிருக்கிறது?
போராடாமல்
எந்தப் பூ பூக்கிறது?

போய் வா நண்பா!
உன்னை திருத்திக்கொள்
பொறுப்புடன் வாழ
முதலில் கற்றுக் கொள்!"

புது உயிர்
கொடுத்தாள்!

அவள் உரம் கண்டு
அவன் வியந்தான்!
அவள் திடம் கண்டு
அவன் சிலிர்த்தான்!

"நெஞ்சக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்
பஞ்சக்கு நேர்பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ."

சுப்பிரமணிய பாரதியார்

ரசிகன்

# இலக்கிய நயம்

# சிந்தியா பதில்கள்

* யாழ் மாநகர முதல்வர் சிவபாலன் முன்னர் போராட்டங்களில் ஈடுபட்டவரா?

சி.கேதீஸ், யாழ்ப்பாணம்.

நான் அறியத்தக்கதாக அவர் போராடத் தொடங்கியதே மேயரான பின்னர்தான். தன்னைப் பாதுகாக்க புலிகளுடன் மறைமுகமாக அவர் போராடிக்கொண்டிருந்தார்.

* யாழ்ப்பாணம் உட்பட வடக்கு-கிழக்கில் மக்கள் போராடத் தொடங்கியுள்ளனரே! காணாமல்போனோர் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திலும் போராட்டம் நடத்தியதாகப் பத்திரிகைகளிலும் படித்தோம். தமிழ்க் கட்சிகள், மக்கள் போராட அழைத்தால் வரமாட்டார்கள் என்பது பொய்தானே?

கே.திருச்செல்வம், கொழும்பு-08.

'ஆடத்தெரியாதவள் மேடை சரியில்லை' என்று கூறிய கதைதான்! மக்கள் போராடுகிறார்கள், முன்னாள் போராளிகள் ஈடாடுகிறார்கள்!

* பில் கிளின்ரனுக்கும் அமெரிக்காவின் பெரும் தலைவர்கள் வரிசையில் இடம் கிடைக்குமா?

எம்.பைசர், கம்பஹா.

ஆசிரியர்: ஆபிரஹாம் லிங்கன் யாரு?
மாணவன்: அமெரிக்காவின் மூத்த தலைவர்!
ஆசிரியர்: அப்படியானால் கிளின்ரன்?
மாணவன்: முத்தத் தலைவர்!

* யாழ் நிலவரம் தற்போது எப்படியோ?

க.நேசராசா, சுவிற்ஸர்லாந்து.

'யா'வுக்குப் பதிலாக 'பா' போட்டுக் கொள்க!

* நாத்திகம் கெட்ட பழக்கம் என்று கூறக்கூடாது என்றீர்களே, விளக்கமாகக் கூறுங்கள்?

ப.குணவீரசிங்கம், மட்டக்களப்பு.

தந்தை பெரியார் கூறுவதைக் கேளுங்கள்: "எனக்கு பக்தியில்லை என்பதால் உங்களுக்கு என்ன நஷ்டம்? ஆனால் எனக்கு ஒழுக்கம் இல்லையானால் என்னவாகும் என்று பாருங்கள். நாணயமில்லை என்றால் மற்றவர்களுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்று பாருங்கள். என்னிடம் உண்மை உணர்வு இல்லையென்றால் என்னாகும்? ஒழுக்கம், நாணயம், உண்மை மூன்றும் இல்லாததுதான் இன்னொருத்தனுக்கு கெட்டதை உண்டாக்கும்!"

* ரஜினியுடன் சௌந்தர்யா இரண்டாவது முறையாக ஜோடியாகச் சேருகிறாரே?

எஸ்.சிவகாந்தன், வவுனியா.

ரஜினிக்கும் அவர் அணுகுமுறை பிடித்திருக்கலாம்! பாவம்- சிம்ரான்!

* பொது நலம் புரிகின்றவர்களுக்கு எத்தகைய தகுதி வேண்டும்?

பரீனா ஸலீம், மூதூர்.

இளம் துறவி ஒருவர் தன்னுடைய ஆசிரமத் தலைவியிடம் போய், "அம்மா! நான் பொதுநலத் தொண்டு செய்யப் புறப்படலாம் என்று நினைக்கிறேன். அனுமதி தாருங்கள்!" என்று கேட்டார்.

ஆசிரமத் தலைவி பதில் எதுவும் கூறாமல் இருக்க, துறவி மீண்டும் மீண்டும் கேட்டார்.

இறுதியில் தலைவி: "மகனே! அடுத்த அறையில் இருக்கும் கத்தியை எடுத்துவா!" என்றார்.

கத்திக்கும் அனுமதி தருவதற்கும் என்ன சம்பந்தம் என்று புரியாமல் துறவி கத்தியை எடுத்துவந்து அன்னையிடம் கொடுத்தார்.

அதனை வாங்கிக்கொண்ட தலைவி, "மகனே! நீ அறப்பணி செய்ய வெளியிடங்களுக்குச் செல்லலாம்!" என்றார்.

"அன்னையே! இந்தக் கத்தி விஷயம்.." என்று இழுத்தார் துறவி.

அதுக்கு தலைவி: "மகனே! நீ கத்தியை எடுத்து என்னிடம் தந்தபோது, கத்தியின் கூரான பகுதியை உன்பக்கம் இருப்பது மாதிரி பிடித்துக்கொண்டு, கைப்பிடி இருக்கும் ஆபத்தில்லாத பகுதியை என்பக்கம் நீட்டிக் கொடுத்தாய்! அதிலிருந்து உன் மனப் பக்குவத்தைப் புரிந்து கொண்டேன். எந்தச் செயலைச் செய்கிறபோதும் அதனால் ஏற்படும் தீமைகளை நீ ஏற்றுக்கொண்டு, மற்றவர்கள் நன்மை அடையப் பார்த்துக் கொள்வாய். அதுதான் பொது நலப் பணியாற்றும் தகுதி. உனக்கே வெற்றி!" என்று வாழ்த்தினார்.

* நீதிபதி திலகரட்ண கைது விவகாரம் தொடர்பாக உமது கருத்து என்ன?

சி.தியாகலிங்கம், மருதானை.

முறைகேடான கைதுகள் தமிழர்களைப் பொறுத்தவரைதான்-முறையானவையாக பல சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களே கருதுகின்றன! அதே கைது சிங்கள இனத்தாருக்கு என்றால் நீதிமன்றங்களும் பொங்கி எழுகின்றன!

* சகாரா கிண்ணத்தை இந்தியா பறிகொடுத்துவிட்டதே?

பி.ஜேக்கப், கண்டி.

அப்ரிடியின் அதிரடியும் ஒரு காரணம்!

* ரஜினி படத்தின் பெயர் மாறுமா?

எஸ்.குமார், வத்தளை.

மாறாது! படையப்பா! நல்ல பெயரப்பா!



'குங்குமம்' படத்தில் சிவாஜி

* செம்மணி என்னாகும்?

செல்வி ரேணுகா ராஜன், யாழ்ப்பாணம்.

இன்னமுமா தெரியவில்லை? உண்மைகளுக்கு சாவுமணி!

* சிவாஜியும் பெண் வேடம் போட்டுள்ளாரா சிந்தியா?

இ.நிலாந்தினி, கொழும்பு-06.

என்ன கேள்வி இது? இதிலிருந்தே உங்கள் வயது புரிகிறது! அவர் போட்ட வேஷம் முன்னால் அவ்வை சண்முகியும் போடணும் சலாம்!



'மன்னவரு சின்னவரு' படத்தில் அர்ஜுன்-சௌந்தர்யா

* ஏட்டிக்குப் போட்டி என்கிறார்களே, அதன் அர்த்தம் தெரியும். அதற்குத் தோதாக நீர் ஒரு கதை கூறும் பார்க்கலாம்?

பி.ஈஸ்வரன், திருமலை.

ஏடாகூடமான கதை ஒன்று: அமெரிக்காவும், ஜப்பானும் ஒன்றை ஒன்று சகல விஷயங்களிலும் முந்திக்கொள்ள போட்டி போடுவதுண்டு. அமெரிக்கர்கள் ஜப்பானியர்களை எப்போதும் இளக்காரமாக கேலி செய்வதும் உண்டு.

அமெரிக்கரை மிரள வைக்க நினைத்த ஜப்பான் கம்பனி ஒன்று: 14 இன்ச் நீளமுள்ள ஆணுறைகளைத் தயாரிக்குமாறு அமெரிக்க கம்பனியிடம் ஓடர் கொடுத்தது.

அமெரிக்கக் கம்பனிக்கு ஒரே திகைப்பு. ஆனாலும் ஜப்பானியர்களுக்கு தாம் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்று காண்பிக்க, பார்சல்கள்மீது 'மீடியம் சைஸ்' என்று முத்திரையிட்டு அனுப்பியது.

வீண் ஜம்பத்துக்காக ஓடர் கொடுத்த ஜப்பான் கம்பனி வேறு வழியில்லாமல் அதனை வாங்கி விற்பனைக்கு விட்டது. அது தமக்கு உபயோகப்படாது என்று தெரிந்தும் பல ஜப்பானியர்கள் வெறும் ஜம்பத்துக்கு வாங்கிப் போனார்களாம்.



கருணாநிதி

* பவளவிழாக் கண்டுள்ளாரே கலைஞர் கருணாநிதி?

செ.நிர்மலன், மட்டக்களப்பு.

அவர் தமிழுக்கு வயதில்லை! அவர் தமிழைப் பாராட்டாதவர்கள் எண்ணிக்கை அதிகமில்லை! எதிரியும் மதிக்கும் தமிழாற்றல் அவர் ஆற்றல்!

* சிந்தியா! அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒரு பட்டம் வழங்கும் பார்க்கலாம்?

ஆர்.காமராஜ், குருநாகல்.

கிளு கிளு ஆள் என்பதால் கிளுண்டன் என்று வழங்குவதாக!

ஸ்போர்ட்ஸ்

# உலக சாதனை



**ஸி**ம்பாப்வே சென்றுள்ள இந்தியக் கிரிக்கெட் அணி, அந்த அணிக்கு எதிராக நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான சச்சின் டெண்டுல்கரும், அனில் கும்ப்ளேயும் உலக சாதனை படைத்துள்ளார்கள்.



இந்தப் போட்டியில் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 127 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஒருநாள் போட்டியில் 18 சதங்களை எடுத்து உலக சாதனை புரிந்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் மேற்கிந்தியத்தீவின் முன்னாள் துவக்க ஆட்டக்காரர் டெஸ்மண்ட் ஹெயின்ஸ் 17 சதங்களை அடித்திருந்ததுதான் உலக சாதனையாக இருந்தது.

கடந்த ஜூலை மாதம் இலங்கையில் நடைபெற்ற சுதந்திரக் கோப்பை இறுதிப் போட்டியில் இலங்கை அணிக்கெதிராக 128 ஓட்டங்கள் குவித்து ஹெயின்ஸின் சாதனையைச் சமன் செய்திருந்தார் டெண்டுல்கர்.

இதே போட்டியில் ஸிம்பாப்வே வீரர் கேரி பிரெண்டைகிளீன் போல்ட் செய்ததன் மூலம் அனில் கும்ப்ளே ஒருநாள் போட்டிகளில் 200 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற சாதனையைப் புரிந்தார். ஒருநாள் போட்டிகளில் 200 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஒரே சுழற்பந்து வீச்சாளர் கும்ப்ளேதான்.

கும்ப்ளே டெஸ்ட் போட்டிகளிலும் 200வது விக்கெட்டை நெருங்கி வருகிறார். இவர் டெஸ்ட் போட்டிகளில் 197 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

# 10 ஆண்டுகளுக்கு பின்னர்



**அ**ண்மையில் இங்கிலாந்துக்கெதிராக இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் 16 விக்கெட்டுக்களை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றிக்கு வழி சமைத்தார். இதற்குமுன் டெஸ்ட் கிரிக்கெட்டில் பதினாறும் அதற்குமேலும் விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் 4 பேர் தான்.

இங்கிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர் ஜிம் லேகர் 1956ல் ஒரே டெஸ்டில் 19 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். உலகில் ஒரு டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் இவர்தான். இவருக்கு முன் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சிட்னி பேர்ன்ஸ் என்பவர் 1913ம் ஆண்டு 17 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

இதன்பின் 1972ல் அவுஸ்திரேலிய வீரர் பொப் மஸ்ஸி தனது முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே 137 ஓட்டங்களைக் கொடுத்து 16 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். முதல் டெஸ்ட் போட்டியிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமைக்குரியவராக இருந்த இவரது சாதனை 16 ஆண்டுகளின் பின் இந்திய வீரர் ஹிர்வானியால் முறியடிக்கப்பட்டது.

தனது முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிராக 1987-88ல் நரேந்தர் ஹிர்வானி 136 ஓட்டங்களை கொடுத்து 16 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பொப் மஸ்ஸியைவிட ஒரே ஒரு ஓட்டத்தைக் குறைவாக விட்டுக் கொடுத்ததால் சாதனைப் புத்தகத்தில் தனது பெயரை இடம்பெறச் செய்தார் ஹிர்வானி.

இதன்பின் 10 ஆண்டுகள் வரை எந்த வீரரும் 16 விக்கெட்டுக்களை வீழ்த்தவில்லை. 10 ஆண்டுகளுக்குப் பின் முரளீதரன் 16 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதற்காக இவர் 220 ஓட்டங்களை விட்டுக்கொடுத்துள்ளார்.

# கத்தித்தான் கேட்பார்

**கி**ரிக்கெட் வீரர்களில் மிக வேகமாகச் சத்தமிட்டு மத்தியஸ்தரிடம் அவுட் கேட்டு முறையீடு செய்பவர் யார் என்று அண்மையில் ஆய்வு ஒன்று எடுக்கப்பட்டது.

இதில் முதலிடத்தில் இருப்பவர் யார் தெரியுமா? அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன்தான். மத்தியஸ்தர்களைப் பார்த்து சத்தமிடுவதில் இவருக்கு ஈடு இணை இல்லை என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 29

## பலமிழந்த பலசாலி

ஆண்டவரின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சிம்சோன் தனக்காக நியமிக்கப்பட்ட முப்பது தோழர்களுக்கும் விருந்தளித்தார். விருந்துண்டு முடிந்ததும் தோழர்களிடம் ஒரு விடுகதையைக் கூறினார். ஏழு நாட்களுக்குள் விடையளிக்குமாறு கேட்டார். சரியான விடையளித்தால் முப்பது பேருக்கும் பட்டாடை அளிப்பதாக வாக்களித்தார். சரியான விடையினைத் தராவிடில் தோழர்கள் சிம்சோனுக்கு முப்பது பட்டாடைகளைத் தரவேண்டும் என்பதுதான் நிபந்தனை.

சிம்சோன் கூறிய விடுகதை இதுதான்:

*"உண்பவனிடமிருந்து*
*உணவு வெளிவந்தது;*
*வலியவனிடமிருந்து*
*இனியது வந்தது!"*

முப்பது தோழர்களும் எவ்வளவோ முயன்றும் அவர்களால் விடையினைக் கூற முடியவில்லை. ஆகவே சிம்சோனின் மனைவி மூலம் அவ்விடுகதைக்கான விடையினை அறிய முயற்சித்தனர். அவளும் அவர்களுக்கு உதவுவதாக வாக்களித்தாள்.

அன்றிரவு சிம்சோனும் மனைவியும் தனியாக இருக்கும்போது, "நீங்கள் உங்கள் தோழர்களுக்கு ஒரு விடுகதை கூறினீர்களே! அதற்கான விடை என்னவென்று அறிய எனக்கே ஆவலாக உள்ளது. உங்கள் அன்பு மனைவியான என்னிடம் கூறலாகாதா?" என்று சிணுங்கினாள்.



மனைவியின் உண்மையான நோக்கத்தை அறியாத-கள்ளங்கபடமற்ற சிம்சோன் உண்மையான விடையைக் கூறிவிட்டார். விடையினை அறிந்துகொண்ட அம்மாது, அடுத்தநாள் காலையிலேயே அதனை கணவனின் தோழர்களிடம் கூறிவிட்டாள். அவர்களும் சிம்சோனிடம் சரியான விடையைச் சொன்னார்கள்.

இதுதான் விடுகதைக்கான விடை:

*தேனினும் இனியது எது?*
*சிங்கத்திலும் வலியது எது?*

சரியான விடை கூறினால் முப்பது பட்டாடைகளைத் தருவதாக வாக்களித்தமையினால் சிம்சோன் அஸ்கலோன் என்ற இடத்துக்குச் சென்று முப்பது பட்டாடைகளைப் பெற்றுக் கொண்டுவந்து கொடுத்தார். தனது மனைவி தன்னை அவமானப்படுத்தி விட்டதாகக் கருதிய சிம்சோன் அவளை விட்டுப் பிரிந்து சென்றார். தனது தந்தையாரிடம் சென்று சிலகாலம் தங்கினார்.

சிம்சோன் தன் மனைவியுடன் கோபித்துக்கொண்டு போய்விட்டார் எனக் கருதியதால் அவளுடைய தந்தை அவளை வேறொருவனுக்கு மணமுடித்து வைத்தார்.

### பழிவாங்கும் எண்ணம்

சிலநாட்களின் பின்னர் தனது மனைவி இருக்குமிடமான திமினாவுக்கு சிம்சோன் திரும்பி வந்தார். அவளுடைய தந்தையார், தன் மகளை வேறொருவருக்கு மனைவியாக்கி விட்டதாகவும் அவளுடைய தங்கையை ஏற்று வாழ்க்கையை நடத்தும்படியும் கேட்டுக் கொண்டார். இந்த யோசனையை சிம்சோன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய கோபம் மேலும் அதிகரித்தது. தமது இனத்தவரான இஸ்ரயேல் மக்களை அடிமைப்படுத்திக் கொடுமை செய்யும் பெலிஸ்தியர் இனத்தில் பெண் எடுத்தமை பேதமை என்றுணர்ந்தார். அப்பெண்ணை விரும்பி மணம் முடிக்க தனது பெற்றோரிடம் கேட்டபோது, அவர்கள் முதலில் மறுப்புத் தெரிவித்ததை இப்போது நினைத்து வருந்தினார். பெலிஸ்தியரைப் பழிவாங்கியே தீரவேண்டும் என்ற எண்ணம் சிம்சோனிடம் வேரூன்றியது. இது இறைவனின் கிருபையால் ஏற்பட்ட ஓர் எண்ணமேயாகும்.

பெலிஸ்தியரின் கோதுமை வயல்கள் அறுவடைக்கு ஆயத்தமாகக் கோதுமைக் கதிர்களுடன் பொலிந்து காணப்பட்டன. இதனைக் கண்ட சிம்சோனுக்கு குறும்புத்தனமானதோர் எண்ணம் தோன்றியது. காட்டுக்குள் சென்று முந்நூறு நரிகளைப் பிடித்தார். இரு நரிகளின் வால்களை ஒன்றாகப் பிணைத்தார். இவ்வாறு ஒவ்வொரு சோடியாக நூற்றைம்பது சோடிகளாகச் சேர்த்து இரு நரிகளின் வால்களுக்கு ஒரு தீப்பந்தங்களைக் கட்டினார். மொத்தம் நூற்றைம்பது பந்தங்களுடன் அந்நரிகளை கோதுமை வயல்களுக்குள் விரட்டினார்.

சற்று நேரத்துள் முழு வயல்களும் தீப்பிளம்புகளால் சூழப்பட்டன. அறுவடைக்காகக் காத்திருந்த அத்தனை கதிர்களும் தீயினால் சுட்டெரிக்கப்பட்டன.

இந்தச் செயலால் வெகுண்டெழுந்த பெலிஸ்தியர், சிம்சோன்தான் இக் கொடுமைக்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தனர். ஆனால் சிம்சோனை அணுக அவர்களால் முடியவில்லை. ஆகவே சிம்சோனின் மனைவியையும் மனைவியின் தந்தையையும் தீமூட்டிக் கொன்று தங்கள் ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டனர்.

தனது மனைவியையும் மாமனாரையும் தீமூட்டிக் கொன்றவர்களைப் பழிவாங்க சிம்சோன் துடித்தார். தனது பார்வையில்பட்ட பெலிஸ்திய இன மக்களை அடித்துக் கொன்றார்.

பின்னர் ஏற்றாமின் பாறைமீது போய்த் தங்கினார். சிம்சோனைத் தேடி பெலிஸ்தியர் அலைந்தனர். இலேகி என்ற ஊரைத்தாக்கினர். "சிம்சோனைப் பிடித்துத் தண்டனை வழங்கும் வரை ஓயமாட்டோம்!" என்று சபதமிட்டனர்.

### எதிரிகளிடம் சிம்சோன்

இஸ்ரயேல் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஏற்றாமின் பாறையிலிருந்த சிம்சோனைக் கண்டு, பெலிஸ்தியர் தங்களுக்குச் செய்யும் கொடுமைகளையிட்டு முறையிட்டனர். பெலிஸ்தியர் சிம்சோனைப் பிடிக்கத் திரண்டு திரிவதால் தாங்களும் பெருந்துன்பமடைய நேரிடுகிறது என்று அழுதனர். தங்களுடைய துயரத்தைத்தீர்ப்பதற்காக பெலிஸ்தியரிடம் போய்ச் சேர்ந்து விடுமாறு சிம்சோனிடம் கேட்டுக்கொண்டனர். ஏதோ ஒரு வகையில் பெலிஸ்தியரைத் தீர்த்துக்கட்டி இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை வாங்கித் தர சிம்சோன் நினைத்திருந்தமையினால் பெலிஸ்தியரிடம் அகப்படுவதே நல்லதென அவர் கருதினார். தன்னைக் கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்று பெலிஸ்தியரிடம் சேர்க்குமாறு கூறினார்.

கயிறுகளால் கட்டப்பட்டுவரும் சிம்சோனைக் கண்டதும் பெலிஸ்தியர் குதூகலித்தனர். அவரைச் சுற்றி நின்று துன்புறுத்தினார்கள். ஆயிரக்கணக்கில் பெலிஸ்தியர் வந்து சேரும்வரை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த சிம்சோன், தருணம் பார்த்து தன்னைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்தெறிந்தார். சுற்றி நின்றிருந்த தனது எதிரிகளைக் கொன்று குவித்தார். ஆயிரக்கணக்கில் பெலிஸ்தியர்களைக் கொல்வதற்கு அவருடைய கையில் அகப்பட்டது ஒரு கழுதையின் தாடை எலும்புதான்.

சிம்சோன் பின்னர் காசாவுக்குச் சென்றார். அங்கிருந்து சோரே என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு தெலீலா என்றோர் அழகியைக் கண்டார். அவளும் சிம்சோனைக் கண்டு அவர்மீது விருப்பம் கொண்டாள். இருவரும் சிலகாலம் கணவன்-மனைவியாக வாழ்ந்தனர்.

தெலீலாவுடன் வாழ்ந்த காலத்திலும் பெலிஸ்தியரின் தொல்லைகளிலிருந்து சிம்சோனால் விடுபடமுடியவில்லை. அவர்களால் சிம்சோனுடன் நேருக்கு நேர் நின்று போராடி வெற்றிபெற முடியாது என்பதனை அறிந்து கொண்டனர். தந்திரோபாயத்தினாலேயே சிம்சோனை வீழ்த்த வேண்டும் என்று கண்டனர்.

சிம்சோனின் அசாத்தியமான பலத்துக்கு ஏதோ தனியான காரணம் இருக்கவேண்டும் என்று யூகித்தனர். அந்த இரகசியத்தை சிம்சோனின் காதலி ஒருத்தியால்தான் கண்டறியமுடியும் எனக் கருதிய பெலிஸ்தியச் சிற்றரசன் ஒருவன் தெலீலாவை அணுகினான். ஏராளமான வெள்ளிக்காசு பரிசாகத் தரப்படும் என்று கூறி, எப்படியாவது 'சிம்சோனின் உயிர் நிலை எங்கே இருக்கிறது' என்பதைக் கண்டறிந்து தம்மிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

### கணவனை வஞ்சித்த காரிகை

வெள்ளிக்காசின் மீது ஆசை கொண்ட தெலீலா, தன் கணவனிடம், "நீங்கள் மிகுந்த தேகபலமுள்ளவராக இருக்கிறீர்களே! உங்களுடைய பலத்தின் இரகசியம் என்னவென்று உங்களுடைய அன்புக்குப் பாத்திரமான என்னிடம் சொல்ல முடியாதா?" என்று வினவினாள்.

ஏற்கனவே ஒரு பெண்ணிடம் உண்மையைக் கூறி விடுகதைக்கான விடையை வெளியிட்டதனை சிம்சோன் நினைவு கூர்ந்தார். தெலீலாவின் கூற்றிலும் ஏதோ மர்மம் இருக்கலாம் என்று கருதிய அவர், உண்மையைக் கூறாமல் பொய்யான காரணங்களையே கூறி வந்தார். சிம்சோன் தெலீலாவிடம் கூறிய காரணங்களை உண்மை என்று நம்பிய பெலிஸ்தியர் பல தடவைகள் ஏமாற்றமடைந்தனர். இறுதியாக தெலீலாவின் நச்சரிப்புத் தாங்காமல் உண்மையைக் கூறிவிட்டார்.

பிறந்தநாள் முதல் தன்னுடைய முடி எதுவும் மழிக்கப்படவில்லை. தனது உயிர்நிலை தன் தலைமுடியிலேயே இருக்கிறது என்று கூறினார். அன்று தன் மடியில் தலைவைத்துத் தூங்கிக்கொண்டிருந்த சிம்சோனின் தலைமுடியை ஒரு சவரக் கத்தியால் தெலீலா மழிக்கவைத்தாள். பெலிஸ்திய சிற்றரசனை அழைத்து அவனிடமிருந்து வெள்ளிக்காசுகளை வெகுமதியாகப் பெற்றுக்கொண்டாள். பெலிஸ்திய வீரர்கள் திரண்டுவந்து சிம்சோனைக் கட்டி இழுத்துச் சென்றனர். அவருடைய கண்களைத் தோண்டி எடுத்தெறிந்தனர். சிறையிலடைத்து, மா அரைக்கும் கருவிகளை இயக்க அவரைப் பயன்படுத்தித் துன்புறுத்தினர்.

பெலிஸ்திய சிற்றரசர்கள் எல்லாரும் ஒன்றுகூடி அவர்களுடைய தேவதைக்கு விழா வெடுத்தனர். அப்போது சிம்சோனையும் கொண்டுவந்து நிறுத்தித் துன்புறுத்தி, அவருடைய வேதனையை இரசித்து மகிழ்ந்தனர். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பெலிஸ்தியர்கள் ஒரு பிரமாண்டமான மண்டபத்துள் இருந்தனர். சிற்றரசர்களும் சமூகப்பிரமுகர்களும் சூழ்ந்திருந்தனர்.

தெலீலாவால் மழிக்கப்பட்ட சிம்சோனின் தலைமுடி இந்த இடைவெளிக்குள் நன்றாக முளைத்துவிட்டது. முடியுடன் நீங்கிச் சென்ற அவருடைய ஆற்றல்- முடிவளரத் தொடங்கியதும்- மீண்டும் அவரிடம் வந்துசேர்ந்துவிட்டது. அம்மண்டபத்தில் தனக்கருகில் நின்றிருந்த ஓர் இளைஞனிடம் தான் களைப்புற்றிருப்பதாகவும் மண்டபத்தின் தூணருகில் சாய்ந்து நிற்பதற்குத் தனக்கு உதவுமாறும் சிம்சோன் கேட்டுக் கொண்டார். அவனும் அவரைத் தூணருகில் கொண்டுசென்று நிறுத்தினான். இருகைகளாலும் இருதூண்களையும் இறுகப் பற்றிக்கொண்டு, "ஆண்டவரே! கொடுமைக்காரர்களான பெலிஸ்தியரைக் கூண்டோடு அழித்து எம்மக்களுக்கு விடுதலை அளிக்க அருள்புரிவாயாக!" என்று வேண்டினார். இரு கைகளாலும் தூண்களை இடிக்க அம்மண்டபம் முழுவதும் இடிந்து தகர்ந்தது. நிரம்பியிருந்த பெலிஸ்திய மக்களனைவரும் இடிபாடுகளில் சிக்கிமாண்டனர். சிம்சோனின் உயிரும் பிரிந்தது.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 27 விடை: இராகாபு**

**பரிசு பெறுவோர்:**

1. **செல்வி கு.நீற்றா,** 444, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்;
2. **அ. ஆனந்தராஜா,** பதுளை வீதி, செங்கலடி.
3. **செ. மாலனி** 161/75, கடியன்லென பஜார், கெட்டபுலா.
4. **செல்வி பா. மகேஸ்வரன்,** மே/பா G.S., மன்னம்பிட்டி.
5. **என். சொரூபன்,** 23, 4ம் ஒழுங்கை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.

**திருமறை 29 வினா:- சிம்சோனின் விடுகதைக்கான விடை என்ன?**

ஒக்.10க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 29— தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர்: | அடையாள அட்டை |
| தொழில்: | இன அடையாளம் காண்பிப்பது. |
| கூட்டாளிகள்: | பாஸ்! பொலிஸ் பதிவுத்துண்டு! |
| சாதனை: | தமிழர்களின் உயிரினும் மேலானதாக மாறியிருப்பது! |
| வேதனை: | திருடர்களாலும் தூக்கி எறியப்படுவது! |
| எரிச்சல்: | சீருடையினர் புரட்டி புரட்டி பார்ப்பதும் தேய்ப்பதும்! |
| இலட்சியம்: | இன்னொரு பிறவியில் இப்படிப் பிறவாதிருப்பது! |

## பொதி தாலாட்டு



(பொதி அழும் குரல் ஒலிக்கிறது)
குவா.. குவா.. குவா
குவா.. குவா.. குவா
(தமிழ்க் கட்சிகள் தாலாட்டுகின்றன)
முத்தான முத்தல்லவோ
முதிர்ந்து வந்த முத்தல்லவோ
சொத்தான பொதியல்லவோ
கவர்மெண்ட் தந்த சொத்தல்லவோ?

சின்னம் சிறு கத்திகொண்ட
பிரித்தாலும் சிட்டல்லவோ?
தாயகத்தை பிளந்து
கொத்தவரும் சிரிப்பல்லவோ!

மாவடு கண்ணல்லவோ
மயக்கும் மொழியல்லவோ
வாய்திறந்தால் பொய்யல்லவோ
பொய்யான பொதியல்லவோ!

வையத்து மனிதரையும்
ஏமாற்றும் பொதியல்லவோ
-முத்தான-

(பொதி சிரிக்கிறது)
என்னை தாலாட்ட வருவாரா?
பொய்யை பாராட்ட வருவாரா?
உலகை ஏமாற்ற வருவாரா?
என்னை தாலாட்ட வருவாரா?

(தமிழ்க் கட்சிகள் பாடுகின்றன)
அய்யய்யோ அய்யய்யோ ஆராரோ-உந்தன்
பொய்யான கதையை நீ கேளாயோ?
எடை குறைந்து நீ போனாயோ-உன்னை
பட்டினி போட்டு மெலித்தாரோ?

(பொதி அழுகிறது)
குவா.. குவா.. குவா
குவா.. குவா.. குவா

(தாலாட்டுப் பாடுகின்றன த.கட்சிகள்)
பொதியே! அழலாமா?
பொட்டென்று விழலாமா?
உன்னை நம்பி நாமிருக்க
கையை நீ விடலாமா?

(பொதிவிடாமல் அழுகிறது)
குவா.. குவா.. குவா
குவா.. குவா.. குவா

(எங்கிருந்தோ ஒரு குரல் ஒலிக்கிறது)
செல்லப் பொதியே
மெல்ல சிணுங்கு
மெலிந்த பொதியே
மெல்லக் கதறு!

(பொதி தொடர்ந்து அழுகிறது)
குவா.. குவா.. குவா
குவா.. குவா.. குவா

(தமிழ்க் கட்சிகள்)
பொதி ஏன் அழுகிறது?
பொதி ஏன் அழுகிறது?

(மேலிருந்து குரல்)
பசியால் அழுகிறது!
பசியால் அழுகிறது!

(த.கட்சிகள்)
என்ன கொடுப்பது?
என்ன கொடுப்பது?

(மேலிருந்து குரல்)
பொய்ப்பால் கொடுங்கள்-நானும்
குழந்தையா இருக்கச்சே
அதுதான் குடிச்சேன்!

## எலும்புகள் பாடல்

புதைகுழிகளில் இருந்து எழுந்துவந்த எலும்புக்கூடுகள் பாடும் பாடல் இது:



சத்தியம்-இது
சத்தியம்!
எல்லாம் வல்ல இறைவனின்
ஆணை
சொல்லப்போவது யாவையும்
உண்மை
சத்தியம்! இது சத்தியம்!

செம்மணியின் குழியில் இருந்தோம்
மலசலகூட கிடங்கில் இருந்தோம்
எத்தனையோ குழிகளை நாம்
பார்த்துவிட்டோம் போடா! போ!

மண்ணைப்போட்டு குழியை
மறைப்பவர்
பைத்தியக்காரரடா!
குழியை தோண்ட கதைகள் அளப்பவர்
ஏமாற்றுக்காரரடா!

அறிக்கைவிட்டு அமைதி காப்பவர்
அரசியல்வாதியடா!
கமிஷன் கேட்டு கணக்கு விடுவதும்
அரசியல்வாதியடா!

நெஞ்சுக்குள் நீதியை ஒளித்து வைப்பது
நிச்சயம் போலியடா
எலும்புகள் எம்மை எரிக்க நினைப்பது
நீதியின் மரணமடா!

வரலாறு எங்களை
விடுதலை செய்யும்
அதுவும் உண்மையடா.

எலும்புத்துண்டுகளுக்காக
எங்களை மறந்தவர்
பைத்தியக்காரரடா!

## பேச்சாளர் பேரம்பலம்



பொதிப் பங்காளர் திருவாளர் சீலன் அவர்கள் சட்டத்தின் சந்து பொந்துகளை அறிந்து அதற்கேற்ப காரியம் பல ஆற்றி வருபவர் என்பதால், எக் குற்றம் செய்தாலும் மாட்டிக்கொள்ளமாட்டேன் என்ற நம்பிக்கையில் தன் குற்றங்களை நிரூபிக்குமாறு சவால் விடவும் தயங்காதவர் என்பதை அவதூறு பிரசாரம் செய்யும் விஷமிகள் அறிந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறேன்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# செல்வம்



➤ அவுஸ்திரேலியாவில் காணப்படும் சில வகைப் பிராணிகள் தங்கள் குட்டிகளை தங்கள் வயிற்றிலுள்ள பை போன்ற அமைப்பில் வைத்தே வளர்த்தெடுக்கின்றன. இவற்றில் கங்காருவைப் பற்றித்தான் பலர் அறிந்திருக்கிறார்கள். படத்தில் காணப்படுவது 'வொம்பாற்' என்ற பிராணி. இது கரடி இனத்தைச் சேர்ந்தது. பார்வைக்குச் சற்று அச்சம் தரக்கூடியதாக இருந்தபோதும் மிகவும் மிக நல்ல சுபாவமுடையவை. செல்லமாக வீட்டில் வளர்க்கலாம்.

பெண் வொம்பாற் ஒரு தடவையில் ஒரு குட்டியை மட்டும் ஈனும். தாய் எவ்வளவுதான் உடல் பருத்துக் காணப்பட்டாலும் குட்டி மிகவும் சின்னதாகவும், பூரண வளர்ச்சியுறாத தன்மையிலும் காணப்படும். தாயின் மடியில் கிடந்த வண்ணமே பூரண வளர்ச்சி பெறுகிறது.

இதன் நீளம் ஆகக்கூடியது ஒரு மீட்டர் வரை வளரும். உயரம் குள்ளமாக இருக்கும். எடை 40 கிலோவரை இருக்கும்.

இம்மிருகத்தை ஆராய்ந்த ஆய்வாளர்கள் பல கோடி வருடங்களுக்கு முன்னர், இருந்து இனமழிந்து போன 'டிப்ரோரோடன்ஸ்' என்ற இராட்சசப் பிராணியின் வழித் தோன்றலாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

வொம்பாற் ஒரு தாவர பட்சணி. இதற்கு அதிக நீரும் தேவைப்படுவதில்லை. நிலத்திலும் மரத்தின் அடியிலும் பொந்துகளை ஏற்படுத்தி அதனுள்ளேயே வசிக்கும். ○




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# வினோதம்

▼ ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை போன்றவையெல்லாம் அழகுக்கலை அம்சங்களுள் அடங்கும். இதே போல் அழகூட்டும் கலையும் பண்டு தொட்டு இன்றுவரை மனித சமுதாயத்தில் வேரூன்றி வளர்ந்து வருகின்ற ஓர் அம்சமாகும்.

அன்றாடப் பாவனைக்குரிய பொருட்களையும் உபகரணங்களையும் அழகாக அமைத்து கவர்ச்சிகரமாக்குவதும் அழகூட்டும் கலையுடன் சம்பந்தப்பட்டதுதான்.

அன்றாடப் பாவனைப் பொருட்களை அழகூட்டும் முறை பண்டைய எகிப்தில் அரசர்களின் கல்லறைகளில் சடலத்துடன் வைக்கப்பட்டன. பின்னர் தங்கம், வெள்ளி, பித்தளை அபரணங்களும் வேறு பல பொருட்களும் கவர்ச்சிகரமாக அழகூட்டப் பட்டன.



▲ கிறிஸ்துநாதர் உயிர்த்த ஞாயிறன்று சிறப்பாக முட்டைகள் பரிமாறுவது ஒரு சம்பிரதாயம். அவ்வாறு பரிமாறப்படும் 'ஈஸ்டர் முட்டை'க்கான ஒரு பாத்திரம்தான் படத்தில் காணப்படுவது.

ரஷ்யாவைச் சேர்ந்த ஆபரண உற்பத்தியாளர் பீட்டர் காள் ஃபபேஜ் என்பவரால், 1890ம் அண்டு இக்கலை நுணுக்கமான பாத்திரம் உருவாக்கப்பட்டது.

அக்கால அழகூட்டும் கலையின் அற்புதச் சின்னமாக இன்றும் இது போற்றப்படுகிறது. பார்ப்பதற்கு சோக்காக இருக்கிறதல்லவா. ஓல்ட் இஸ் கோல்ட்! ○

# மா வணக்கம்



◀ மாட்டுக்கு நாலுகால்கள். ஆனால் இந்த ஆச்சரிய மாட்டுக்கு ஆறுகால்கள்.

வண்டிகளில் மேலதிகமாக ஒரு சக்கரம் வைத்திருப்பதுமாதிரி, இந்த மாடும் பிறக்கும்போதே மேலதிகமாக இரண்டு கால்களுடன் பிறந்துள்ளது.

இரண்டு கால்களும் மாட்டின் முதுகில் உள்ளன பாருங்கள். பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் இந்த மாடு ராஜ மரியாதையுடன் வாழ்ந்து வருகிறது.

(பட உதவி: ரி. அகிலன்)
○

# அக்காலம்

▼ வேதாகமம் (பைபிள்) கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமான வாழ்க்கை நெறிகாட்டும் மறைநூல். இந்நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பிரிவுகளாகவுள்ளது. பழைய ஏற்பாடு யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். புதிய ஏற்பாடு இயேசுகிறிஸ்துவின் தோற்றத்திலிருந்து தொடங்குகிறது. யூதர்கள் பெரும்பாலும் புதிய ஏற்பாட்டில் அதிக அக்கறை காட்டுவதில்லை.

பழைய ஏற்பாட்டில் யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 24 அங்கங்கள் உள்ளன. இவற்றில் 5 அங்கங்கள் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு யூதனும் தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகளை இவை விவரிக்கின்றன.



▲ படத்தில் ஒரு யூத மாணவன் வாழ்க்கை நெறி விளக்கச் சட்டங்களைக் கொண்ட தொகுப்புச் சுருளைப் படிக்கிறான்.

பாய்மாதிரி சுருட்டி வைக்கப்பட்ட நூலை படித்து படித்து சுற்றிவைக்க வேண்டும். தற்காலத்தில் புத்தகமாகவே அச்சிடப்பட்டுவிட்டது. சிரமம் இன்றி படிக்கலாம். அக்காலத்தில் நூலை படித்து முடிப்பதே எத்தனை சிரமமாக இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். ○

# மாறும் நிறம்



➤ இதழ்கள் இல்லாத சிறு பூக்கள் மலரும் இம்மரம் 30 மீட்டர் உயரம்வரை வளரும். ஏறத்தாழ 150 வருடங்கள் வாழும். ஒவ்வொரு நாட்டிலும் எல்ம் மரத்தின் இயல்புகள் மாற்றமடைந்தவையாகத் தென்படும். ஐரோப்பிய நாடுகளில் வளரும் எல்ம் மரங்களின் இலைகள் மஞ்சளாக மாறாமல் பழுப்பு நிறமாகிய பின்னர் உதிர்ந்து விடும்.

எல்ம் மரத்தின் அடிப் பாகம் அகன்று உறுதியுடன் காணப்படும். ஹொக்கி விளையாட்டுக்குப் பயன்படும் மட்டைகள் இம்மரத்தில் செய்யப்படுகின்றன. நன்கு வளர்ச்சியடைந்த மரத்தின் அடிப்பாகத்திலிருந்து தோணிகளும் வீடுகளுக்கு வேண்டிய மரத்தளபாடங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இம்மரத்தில் பூக்கும் மலர்களில் உற்பத்தியாகும் விதைகள் சிறு இறக்கைகள் போன்ற அமைப்புடன் கூடியவை.

◀ இது ஒரு வித்தியாசமான மரம். பச்சோந்தி மரம் என்றுகூடச் சொல்லலாம். வாகை மர இனத்தைச் சேர்ந்த இம்மரம் 'எல்ம்' என்று அழைக்கப்படுகிறது. மிதமான உஷ்ண வலயநாடுகளில் வளரும் இம்மரங்கள் காலத்துக்குக்காலம் இலைகளின் வர்ணத்தை மாற்றும் இயல்புடையன.

குளிர்காலத்திலும் இளவேனிற் காலத்திலும் கடும்பச்சை இலைகளையுடையதாகத் தோற்றமளிக்கும். இளவேனிற்காலம் முடியும் காலகட்டத்தில் இலைகள் பழுப்பு நிறமாக மாறி இலையுதிர் காலத்தில் மஞ்சள் நிறமாகத் தோற்றமளிக்கும். சில நாட்களில் இலைகளனைத்தையும் உதிர்த்திவிட்டு வெறும் மொட்டை மரமாகக் காட்சிதரும்.

# ருசி



'கிவி' என்பது நியூஸிலாந்தின் தேசியப் பறவை. பறவை இனமானபோதும் பறக்க முடியாத ஒரு பறவை.

படத்தில் காணப்படுவது வாயினுள் புகுவதற்கு ஆயத்தமாயுள்ள ஒரு பழத்தின் துண்டுகள். இப்பழத்துக்கும் பெயர் 'கிவி' பழம்தான். நியூஸிலாந்தில்தான் இப்பழம் அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் இது சீனாவிலிருந்துதான் நியூஸிலாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அறிமுகமானதாம்.

பலவகைப் பழங்களை ஒன்றாகக் கலந்து அக்கலவையை உணவின் பின்னர் உட்கொள்வது சீரணத்துக்கு உதவிபுரிகிறது. அப்பழக்கலவையில் கிவிப் பழம் சேர்க்கப்படுவது இப்போதெல்லாம் பிரசித்தமாகிவிட்டது. இதில் ஒரேஞ்ச் பழத்தைப் பார்க்கிலும் விட்டமின் 'சி' அதிகமாக உள்ளதாம். தவிர உடலின் நீர் அளவினைச் சமச்சீர்படுத்த, நரம்புகளின் செயற்பாட்டைத் துரிதப்படுத்த இருதயம் மற்றும் சிறுநீரகம் ஆகிய உறுப்புக்களைச் சீராக இயங்கவைக்க, உயிரணுக்களின் உற்பத்திக்கு உதவப் பயன்படும் பொட்டாசியம் இப்பழத்தில் போதுமான அளவு பொதிந்திருக்கிறதாம். ஆகவே இப்பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நியூஸிலாந்திலிருந்து பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகும் இப்பழம் இந்தியாவில் ஒரு கிலோ 300 ரூபாவிற்கும் விற்கப்படுகிறதாம். நம்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்து பலர் கொண்டுவருகின்றனர். உண்டவர்கள் ருசியைக் கூறி தாளுகிறார்கள். ▣

01 வது பிறந்தநாள் வாழ்த்து 02.09.1998

செல்வன் ஜீ. விதுஷன்



ஜீவராஜன்-ஞானகௌரி தம்பதிகளின் ஏக புதல்வன் விதுஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை 02.09.1998 அன்று LANDAU (GERMANY) இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, வவுனியா அப்பம்மா, மானிப்பாய் அம்மப்பா, அம்மம்மா கோண்டாவில் அப்பம்மா, பரிஸ் வசந்தன் பெரியப்பா, ஜேர்மன் தயாளன் பெரியப்பா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் நந்தன் மாமா, மானிப்பாய் வவா அன்ரா, நிஜாந்தி அன்ரா, வவுனியா மாமா, ஜெயா அத்தை, இந்தியா மனோகர் சித்தப்பா, பிரணவன் மச்சான், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள், மானிப்பாய் மருதடி விநாயகர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*தகவல்: சி.வி.பரமேஸ்வரன் (பேரன்), மானிப்பாய்.*



இப்பத்திரிகை கொழும்பு [illegible] ஒக்டோபர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.